70

Theresian flavour-03



ST. THERESA'S GIRLS' COLLEGE ATCHUVELY
PURE AND TRUE
1946

J/ST. THERESA'S GIRLS' COLLEGE, ATCHUVELY.

புனித தெரேசாள்...

கல்லூரிக் கீதம்

புனித தெரேசா புனித தெரேசா புனித தெரேஸ்
கன்னியின் மகிமையை நாமும்
போற்றிடுவோமே என்றும் வாழ்த்திடுவோமே

இல்லம் மூன்றின் இணையற்ற சேவைகளும் நிலைத்திடவே
நித்தம் தமிழ் மணக்கும் நிலையான சற்சிறக்கும்
சத்தியம் தனிச்சிறக்கும் சன்மார்க்கம் போல் சிறக்கும்
கல்விச்சேவை மிளிரவே கன்னியர் புகழ்ந்துரைக்கும்
(புனித தெரேசா)

அறிவினாற்றல் மீதும் அருட்செயலால் தினமும்
ஆவியுடன் பொருளும் அற்பணித்தே தினமும்
தேசசேவை என்றுமே பெருமையை நோக்கும்
தீராத பரம்பொருள் திருவருளை வேண்டிடுவோம்.
(புனித தெரேசா)

யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
அச்சுவேலி

மகுட வாக்கியம்

உண்மையும் தூய்மையும்

நோக்கு

மானிட விழுமியத்தை

மலரச் செய்து

அறிவோடு திறமையையும்

மாண்புறச் செய்தல்

கல்லூரியின் ஸ்தாபகர்
சேர். சிற்றம்பலம் ஆபிரகாம் கார்டினர்



சமர்ப்பணம்...



மறைந்த அமரர் அருட்சகோதரி மரிய றொசாறியோவின்

அறுபதாவது அகவையை நினைவுகூரும் முகமாக

அவருக்கு சமர்ப்பணமாகவும்,

கல்லூரியின் எழுபதாவது ஆண்டு நிறைவையும்

நினைவுகூர்ந்தும் தமிழ் மன்றத்தினால்

தெரேசியன் பிளெவர் – 03 வெளியிடப்படுகின்றது.

நூலின் பெயர்	:-	தெரேசியன் பிளெவர் - 3
வெளியிடுவோர்	:-	யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி
முகவரி	:-	சங்கானை வீதி. அச்சுவேலி.
திகதி	:-	10.03.2016
பதிப்பு	:-	அன்ரா பிறிண்டேர்ஸ்
		இல. 379, கஸ்தூரியார் வீதி.
		யாழ்ப்பாணம்.
பக்கங்கள்	:-	XXX + 100
பதிப்பாசிரியர்கள்	:-	திரு.தெ.ஈஸ்வரன்
		திருமதி ச.மதியரசன்
ஆலோசகர்கள்	:-	அருட்சகோதரி மரிய ஜீவந்தி (அ.கா) - முதல்வர்
		திருமதி சு.மகேஸ்வரதாசன் - பிரதி முதல்வர்
மலர்க்குழு	:-	திரு.ச.கருணாகரன்
		திருமதி சி.தங்கராஜா
		திரு.செ.ஏதீசன்
		திரு.பொ.சகலகலாநிதி
		திரு.ஜெ.ஜெயதரன்
		திருமதி த.கேமலதாஸ்

அமரர் அருட்சகோதரி மரிய றொசாரியோ அ.கா



மலர்வு
1956-03-09

உதிர்வு
2015-11.08

உள்ளே.....

ஆசிச்செய்தி

அருட்பணி கி.ஜோ.ஜெயக்குமார் ix
அருட்சகோதரி எம்.எலிசபெத் x

வாழ்த்துச் செய்தி

திரு.த.குலராசா xi
திரு.செ.உதயகுமார் xii
திரு.ந.தெய்வேந்திரராஜா xiii
ஆ.சு.சற்குணராஜா xiv
திரு.வே.பாலசுப்பிரமணியம் xv
திரு.நா.சுவாமிநாதன் xvi
வ. செல்வராசா xvii
ஆ.ராஜேந்திரன் xviii
கலாநிதி (திருமதி) ஜெயலக்சுமி இராசநாயகம் xx
திரு.யே.கொட்விறி யோசவ் xxi
கலாநிதி த.கலாமணி xxii
திருமதி றொசற் தவநாயகம் xxiii
திருமதி அ.வேதநாயகம் xxiv
மரியதாசன் கமில்ரன் xxv
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் xxvi
அருட்சகோதரி மரிய ஜீவந்தி xxvii
திருமதி சு.மகேஸ்வரதாசன் xxviii
திருமதி ச. மதியரசன் xxix
தமிழ் மன்றத் தலைவர் க. நிக்ஸ்சிலா xxx
01. அதிபர்கள் வரிசையில் 1
02. நினைவஞ்சலி 4
02. கல்வி அழகே அழகு 6
03. போற்றிடுவோம் தமிழை 8
04. அருட்சகோதரி மரிய றொசாறியோவின் வரலாற்றுப் பதிவுகள் 9
05. மறைந்த அதிபரின் வாழ்க்கை வரலாறு 11
06. க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் 12
07. க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள் 13
08. தரம் 05 புமைப் பரிசில் பரீட்சை 14
09. பாடசாலை ஆசிரிய ஆளணியினர் - 2016 15
10. ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் - 2016 17

11.	கற்றனைத் தூறும் அறிவு	18
12.	வாசமலராய் சில துளிகள்	20
13.	விதியைப் பற்றிய உண்மைகள்	22
14.	இலத்திரனியல் வங்கி முறை	24
15.	கல்வி	26
16.	பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்	27
17.	வீரமாமுனிவர்	28
18.	அப்துல்கலாம்	30
19.	மனிதமொன்று மண்ணிலே	33
20.	வாசிப்பை நம் சுவாசிப்பாய் மாற்றுவோம்...	34
21.	தலைமைத்துவத்தில் பாடசாலைகளின் பங்களிப்பு	36
22.	நமக்காகக் கல்லூரி, கல்லூரிக்காக நாம்	38
23.	நான் விரும்பும் கவிஞர்	39
24.	சிந்திக்க சில வரிகள்	41
25.	தமிழில் புதுக்கவிதை - சுருக்க அறிமுகம்	43
26.	நெஞ்சத்துக் குமுறல்	52
27.	இராமாயணம்	53
28.	ஊடகங்களும் தமிழ்மொழி வளர்ச்சியும்	55
29.	கற்றல் கற்பித்தலில் ஊக்கம்	58
30.	எமது அதிபர்	62
31.	பாடசாலைகளில் விழுமியக் கல்வியின் அவசியம்	63
32.	அன்னை தெரேசா	65
33.	இலக்கிய மீளாய்வை விளங்கிக் கொள்ளல்	66
34.	வெளிவாரி விளைவுகள் ஒரு நோக்கு	68
35.	இலங்கையின் கல்வி வரலாற்றில் மரபுவழிக் கல்விமுறை	75
36.	ஒன்றுபட்டால்	79
37.	உன்னை நீயே எழுது....	80
38.	ஆசான்	81
39.	உடல்நலம் பேணும் இலக்கியங்கள்	82
40.	ஒழுக்கம்	85
41.	மாணவர்களின் பல்வகைமை ஆசிரியர்களுக்கு ஒரு சவாலா	89
42.	இலக்கியம் - பொது அறிவு	93
43.	உலகில் பெரியவை	95
44.	இலங்கை முதியோர் சனத்தொகையும் பொருளாதாரத்தில் அதன் தாக்கமும்	96
45.	மரம்	98
46.	வருந்தாமல் இருக்கலாமோ	99

ஆசிச்செய்தி

கல்விப் பணியில் எழுபது ஆண்டுகளை நிறைவு செய்யும் புனித தெரேசா கல்விச்சாலைச் சமூகத்திற்கு ஆசிகளையும் பாராட்டுதலையும் முதற்கண் சமர்ப்பிக்கின்றேன்.

வாழ்த்துக் கூறுவது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஒருபுறம் பங்குத்தந்தை என்ற நிலையிலும் மறுபுறம் இக்கல்விச்சாலையின் பழைய மாணவன் என்ற நிலையிலும் என் வாழ்த்துக்கள் அமைவதனால் இரட்டிப்பு மகிழ்ச்சி.

எனது ஆரம்ப பாடசாலை நாட்களின் நினைவுகள் இன்றும் பசுமையானவையாகும். எனது கல்வி வாழ்வின் தொட்டில் இப்பாடசாலையாகும். கட்டிடத்திற்கு எவ்வாறு அத்திவாரம் இன்றியமை யாததோ, அதேபோன்று கல்வி அபிவிருத்தியிலும் ஆரம்ப பாடசாலை ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. யாழ். பல்கலைக்கழகம் வரை என் கல்வி தொடர்ந்த தென்றால் இப்பாடசாலையில் எனது ஆரம்பக் கல்வி என்றால் மிகையாகாது.

இக்கல்விச்சாலை என்னை உருவாக்கியது மட்டுமல்ல இதன் வளர்ச்சியில் எனது அன்னை திரேசா (கரவெட்டி ஆசிரியர்)வின் பங்களிப்பும் அளப்பரியது 13 ஆண்டுகள் இக்கல்விச்சாலையில் ஆசிரியராகப் பணியாற்றி பல மாணவச் செல்வங்களை உருவாக்குவதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்.

மாணவர்கள் கல்வியில் சிறப்புற வேண்டும் எனில் அடிப்படையில் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பது பல ஆய்வுகளின் முடிவாகும். எனவே பெற்றோரின், ஆசிரியர்களின், சமூகத்தின் பங்களிப்பு மிக முக்கியமானது ஆகும். மனஅழுத்தம், போட்டி, ஒப்பீடு, பரபரப்பு போன்ற வற்றோடு வாழும் மாணவர்கள் கல்வியில் சிறப்பு நிலையை அடையமுடியாது.

எனவே மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்தி எம்மாணவச் செல்வங்களின் கல்வி நிலையை மேம்படுத்த அனைவரும் கரம் கோர்த்து செயற்படுவோமாக.

அண்மையில் இயற்கை மரணம் எய்திய அருட்சகோதரி மரிய றொசாறியோவின் ஆன்மா சாந்தியடைவதாக. அன்னாரின் அரிய பணியை தொடர்வதன் மூலம் எம் நன்றிகளை சமர்ப்பிப்போமாக.

அருட்பணி க.ஜோ. ஜெயக்குமார்
பங்குத்தந்தை
அச்சுவேலி.

ஆசிச் செய்தி..

இலங்கை அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் அரியதொரு தடமாக வடமாகாணத்தில் வளம் கொளித்து இலங்குவது அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி.

ஏழு தசாப்தங்களைக் கடந்து ஏற்றமிகு கல்விச் சேவையை இனிதே ஆற்றிய கார்மேல் சகோதரிகளது உன்னதமான கல்விச் சேவைக்கு உதாரணமாக உள்ளது இக்கல்விக்கூடம். காலத்தால் அழியாத கல்வி வளம் பெற, கல்வித்துறையை உயர்த்திட, கல்விச்சமூகம் மேம்பாடடைய, கல்விக்கட்டமைப்புக்களை வளர்த்தெடுப்பதில் அவ்வழியே உயிருள்ள சொத்துக்கான மாணவச் செல்வங்களை உருவாக்குவதில் கார்மேல் சபைக் கன்னியர்களின் காத்திரமான பணி எழுத்தில் பதிக்கப்பட வேண்டியது.

கார்மேல் கன்னியர்களால் வித்திடப்பட்டு, வேரூன்றி வியாபித்து, பெரு விருட்சமாகத் தலைநிமிர்ந்து நின்று மகுடவிழாக் காணும் கல்விச்சாலையின் எழுபதாம் அகவை நிறைவில், இறை புகழ் கூறி இன்னிசைபாடித் தலை வணங்குகிறேன்.

நீண்டதொரு கல்வி வரலாற்றிற்கு வரி வடிவம் கொடுக்கும் இச்சஞ்சிகையை வெளியீடு செய்வது இக்கல்லூரியின் பணித்திற மேம்பாட்டிற்கு சீரும் செழுமையும் சேர்க்கின்றது. திண்மை வாய்ந்த வரலாற்று உண்மைகளை எதிர்கால சந்ததிக்கு எடுத்தியம்புகின்றது. மலரின் வழியாக மூத்தோரின் முதுசங்களை முத்திரையாக்குகின்றது.

ஏழு பத்தில் எழுகின்ற இந்த எழுச்சிமிக்க படைப்பை வெளிக்கொணர வேண்டும் எனும் இதய தாகத்தை அடிக்கடி கூறிக் கொண்டிருந்தவர் எம் முன்னாள் அதிபர் அமரர் அருட்சகோதரி மரிய றொசாறியோ. இந்த ஆற்றுகைக்கு காரணகர்த்தாவும் அவரே. அவரது சடுதி மறைவு அவரது எண்ணத்தைக் காவு கொள்ளவில்லை. அந்த வேணவாவை ஊகித்துணர்ந்தவர்களாக, இன்றைய அதிபர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி அவர்களும் மலர்க்குழுவினரும் ஆதங்கத்துடன் முன்னெடுத்து முனைப்புடன் செயற்பட்டுள்ளனர். அந்த நிதர்சனத்தை நிஜமாக்கி பாடசாலை வெளியீட்டினைப் பக்தியோடும் பிரமாணிக்கத்தோடு படைத்துள்ளமை பாராட்டத்தக்கது. இதற்காக உள்ளன்போடு செயற்பட்ட அனைத்து உள்ளங்களையும் மனமார வாழ்த்துகிறேன்.

மலர் வெளியீடுகள் மாணவ உள்ளங்களை மலர்விக்க வல்லன. சிந்தனைக்கு, எழுத்தாற்றலுக்கு களம் தருவன. படைப்பாற்றலைத் தூண்டி விடுவன. மாணவ உலகின் ஆக்கங்களுக்கு உந்து சக்தியாய் அமைவன.

இக்கல்லூரியின் எழுத்துப்பணி தொடர்ந்திடவும் சிந்தனை செழித்திடவும் பல கலைகளிலும் சிறந்திடவும் உளமார வாழ்த்தி நிற்கிறேன்.

அருட்சகோதரி எம். எலிசபெத் அ.கா
தலைவி லங்கா மாதா மடம்
அச்சுவேலி

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் செயலகம்
வடக்கு மாகாணம். 124, ஆதியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

OFFICE OF THE MINISTER OF EDUCATION, CULTURAL AFFAIRS, SPORTS & YOUTH AFFAIRS
Northern Province, 124, Adiyapatham Road, Kalviyankadu, Jaffna.

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் செயலகம்
வடக்கு மாகாணம், 124, ஆதியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

எனது இல. My No. } யா / அம / கலவி/ வா
உமது இல. Your No }
திகதி Date } 2016.02.23

வாழ்த்துச் செய்தி

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் தனித்துவமான பெண்கள் பாடசாலையாக திகழ்ந்து வரும் யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் எழுபதாவது ஆண்டுநிறைவை முன்னிட்டும், கடந்த வருடம் இறையடி சேர்ந்த அருட்சகோதரி மரிய ரொசாறியோ அவர்களின் சமர்ப்பணமாகவும் வெளியிடப்படவுள்ள மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

1947ம் ஆண்டு திண்ணைப்பாடசாலையாக இருந்து பரிணாம வளர்ச்சி கண்டு பெண்களுக்காக பிரத்தியேகமாக திகழ்கின்ற பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் மறைந்த அருட்சகோதரி அவர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகவே அமைந்திருந்தது என்றால் மிகையாகாது.

மாணவர்களின் விழுமியத்திலும், பாட, இணைபாடவிதானத்தில் சிறந்து விளங்குகிறார்கள் என்பது பாடசாலையின் அடைவு மட்டத்தினை எடுத்து நோக்கும் போது புலனாகிறது. மலரின் இதழிகளில் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங்கள் தவழ்வது அவரவர் திறன்களை விருத்தி செய்ய வழிவகுப்பதோடு, ஏனையவர்களின் ஆக்கத்திறனைத் தூண்டும் செயலாக அமையும் என்றே கருதுகிறேன்.

எழுபது ஆண்டுகளைக் கடந்து நிற்கும் பாடசாலை இன்னும் பல ஆண்டுகள் ஆல விருட்சமாக நிழல் பரப்பி மகளிருக்கு கல்விச் செல்வத்தை வழங்க வேண்டும் என்றும், மலர் வெளியீடு சிறப்புற நடைபெறவும் வாழ்த்துவதோடு, வெளியீட்டிற்கு துணை நின்ற அனைவரையும் பாராட்டுவதில் மகிழ்வடைகிறேன்.

திரு.த.குருகுலராசா,
கௌரவ கல்வி,பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

அமைச்சர் முகாமைத்துவ } 021-205 4094 Minister
அலுவலகம் காரியாலயம் Office } 021-205 4091(Private Secretary) 021-205 4093(P.R.O) 021-205 4092(General)
தொலைநகல் ஃபக்ஸ் Fax } 021-205 4093
email: edumin.14@gmail.com



வாழ்த்துச் செய்தி

யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரியினது தமிழ் மன்றத்தினால் வெளியிடப்படும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

அச்சுவேலிப் பிரதேசத்தில் மகளிருக்கான சிறந்ததொரு பாடசாலையாக இப்பாடசாலை விளங்கி வருகின்றது. இப் பாடசாலையினது அதிபராகவிருந்து இயற்கையெய்திய அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்கள் இப்பாடசாலையினைச் சிறப்பானதொரு நிலைமைக்கு வளர்த் தெடுத்துள்ளார். தனது அதிபர் பணியின்போது அல்லும் பகலும் அவர் இப்பாடசாலைக்கென உழைத்தமை என்றும் நினைவுகூரத் தக்கதாகும். பதவியில் ஓய்வுபெறும் காலத்தினை அண்மித்த வேளையில் அவர் இயற்கையெய்தியமை இப்பாடசாலைக்கும் கல்வி உலகிற்கும் பேரிழப்பாகும். அவரது மணிவிழா நாள் நெருங்கி வருகின்ற இவ்வேளையில் அவரது சேவையினை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

மேலும் இப்பாடசாலை 70 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. அச்சுவேலிப் பிரதேசத்தில் கடந்த 70 ஆண்டுகளாக மகளிருக்கு ஒழுக்கத்துடன் கூடிய சிறந்த கல்வியை இப்பாடசாலை வழங்கி வருகின்றமை பாராட்டுதற்குரியது. இப்பாடசாலை மாணவிகள் பொதுப் பரீட்சை களிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறப்பான அடைவுகளை வெளிக்காட்டி வருகின்றனர். இப்பாடசாலை மேலும் வளர்ச்சிபெற்று இப்பிரதேச மகளிரினது கல்விக்கு வளமூட்ட வாழ்த்துகின்றேன்.

திரு.செ.உதயகுமார்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.



வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் தமிழ்மன்றத்தால் வெளியிடப்படும் தெரேசியன் பிளேவர் - 3 சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன். யாழ். கல்வி வலயத்தில் அச்சுவேலி புனித தெரெசாள் மகளிர் கல்லூரியானது முன்னணிக் கல்லூரியாகத் திகழ்கின்றது. கல்விச் செயற்பாடுகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் இப்பாடசாலை பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ளது.

இதற்கு கல்லூரி அதிபரின் நீண்ட கால அர்ப்பணிப்புமிக்க, தன்னலமற்ற சேவையே காரணமாக அமைந்துள்ளது. மேலும் பாடசாலையினது பௌதீகவள அபிவிருத்திக்கென தூரநோக்குடன் காணி கொள்வனவு செய்து பல்வேறு கட்டடங்கள் அமைப்பதற்கு காரணமாக அமைந்துள்ளார்.

அத்துடன் மாணவிகளைக் கண்டிப்புடனும் அதேவேளையில் கருணையுடனும் வழிகாட்டி, அவர்களினது மனங்கவர்ந்த அன்புக்குரிய அதிபராக திகழ்ந்துள்ளார்.

அது மாத்திரமல்லாது பாடசாலையில் அர்ப்பணிப்புள்ள ஆளுமை கொண்ட ஆசிரியர் குழாம் ஒன்றை உருவாக்கி வெற்றிபெறும் பாடசாலையாக மாற்றியுள்ளார். இத்தகைய சாதனை படைத்த அதிபரின் இழப்பானது துயரமாக அமைந்தபோதும் அவரது சாதனைகள் என்றென்றும் நினைவு கூரப்படும்.

மேலும் தனது வாரிசாக, புகழ்பூத்த யாழ். புனித ஜோண். பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி அவர்களை நியமிக்க காரணமாக அமைந்து இப்பாடசாலைக்கு மேலும் புகழ் சேர்த்துள்ளார்.

இலங்கையிலேயே முதல் நிலைப் பாடசாலையாகத் திகழ்கின்ற யா/ புனித ஜோண் பொஸ்கோ அதிபரின் சேவையானது இப்பாடசாலையை மேலும் உயர்ந்த ஸ்தானத்திற்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை. எமது வலயக் கல்வி அலுவலகமானது அதிபர் மற்றும் ஆசிரியர்களினது நடவடிக்கையில் என்றென்றும் உறுதுணையாக இருக்கும்.

எனவே இப்பாடசாலையினது வளர்ச்சியானது புதிய அதிபரின் தலைமையில் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.ந.தெய்வேந்திரராஜா,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை

யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி பாடசாலையின் 70 வருட நினைவு களைக் கொண்டாடும் முகமாக தமிழ் மன்றத்தினால் வெளியிடப்படும் மலருக்கு எனது வாழ்த் துரையை வழங்குவதில் ஆனந்தமடைகின்றேன்.

கோப்பாய் கோட்டத்தில் அச்சுவேலிப் பகுதியில் மகளிருக்கான ஓர் பாடசாலை. அப்பாடசாலை கல்வியிலும் கட்டுப்பாட்டிலும் சிறந்து விளங்குகின்றது தரம் ஒன்று அனுமதி எடுப்பதற்கு ஏகப்பட்ட போட்டி இவ்வாறு சிறந்து விளங்கும் இப்பாடசாலையை மறைந்த அருட்சகோதரி மரிய றொசாறியோ அர்ப்பணிப்புடன் சிறப்பாக நடாத்தி வந்துள்ளார் அவரின் மறைவின் பின் அருட்சகோதரி மரியஜீவந்தி முன்னைய மறைந்த அதிபரின் கனவுகளை நினைவாக்கும் வண்ணம் செயற்படுகின்றார். இன்று இப்பாடசாலை மாணவிகள் கல்வியில் மட்டுமல்ல இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகின்றனர் பல்வேறு மன்றங்களின் செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப் படுகின்றன மலர்கள் வெளியிடப்படுகின்றன அந்த வகையில் இம்மலரும் தமிழ் மன்றத்தின் ஆக்கங்கள் செய்திகளுடன் அருட்சகோதரி மரிய றொசாறியோவை நினைவு கூரும் வகையில் அவரின் பிறந்தநாளில் வெளிவருகின்றமை பாராட்டத்தக்கது. இப்பாடசாலை பௌதீக வளத் தேவை ஆசிரிய ஆளணித் தேவை போன்றவற்றில் நிறைவடைய வேண்டும் பிள்ளைகளின் கல்வித் தாகத்தைத் தீர்த்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்று என்றும் பேரோடும் புகழோடும் விளங்கவேண்டும் என்று இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

ஆ.சு. சற்குணராஜா
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
கோப்பாய்.

களமமைக்கும் ஓர் சஞ்சிகை

பாடசாலைக் கல்வியின் ஒரு சிறப்பம்சம் மாணவர்களிடையே பல்வேறு திறன்களையும் தேர்ச்சிகளையும் வளர்த்துப் பூரணமான சமூகப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜையாக்குதலாகும். கற்றல் கற்பித்தலுக்குச் சமாந்தரமாக இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் ஆளுமை, திறன் விருத்தி போன்றவை வளர்க்கப்படுகின்றன. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது பழமொழி. இது புத்தகப் படிப்பை மட்டும் மேற்கொண்டு வாழாவிருக்கும் மாணவர்களைப் பார்த்துச் சொல்லப்படும் விமர்சனப் பேச்சாகும். படிப்பு வெறும் அறிவை மட்டுமே தரும். அனுபவமும் செயற்பாடுகளுமே முதிர்ச்சியைத் தரும் என்பதை வலியுறுத்துவது அப்பழமொழி. மாணவர்களிடையே பல்வேறு திறன்களை வளர்க்கும் ஊடகங்களாக மிளிர்பவை விளையாட்டு, நுண்கலை, இலக்கியம் போன்றவையாகும். இயல், இசை, நாடகம் மூன்றும் சேர்வதால் தமிழை முத்தமிழ் என்று கூறுகின்றோம். முத்தமிழையும் வளர்ப்பதோடு மாணவர்களுக்குத் திறனையும் வளர்க்கும் சிறந்த பணியை ஆற்றும் நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்ட புனித தெரேசாள் மகளிர் கல்லூரித் தமிழ் மன்றம் தெரேசியன் என்ற சஞ்சிகையை வெளியிடுவது பாராட்டுக்குரியது. அதிலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காய் அயராதுழைத்து அமரரான அருட்சகோதரி மரிய றொசாறியோவிற்கு அர்ப்பணமாக வெளியிட்டு அன்னாரின் உழைப்பைக் கௌரவிக்கும் செயற்பாடு மிகமிகப் பொருத்தமானதே.

பாடசாலைகள் வெளியிடும் இதுபோன்ற சஞ்சிகைகள்தான் சிறந்த எழுத்தாளர்கள் பலருக்கும் களம் அமைத்துக் கொடுத்திருந்தன. தெரேசாளின் தெரேசியன் சஞ்சிகை மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்க முயற்சிக்குக் களமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இச்செயற்பாட்டின் மூலம் பாடசாலைப் பணிக்கூற்றின் ஒருபடி நிறைவெய்துகின்றதெனலாம். இது மாணவர்களிடையே ஆக்கத்திறன், தன்னம்பிக்கை, ஆளுமை என்பவற்றை வளர்க்கும். இப்பணியில் முன்னின்று உழைக்கும் அதிபரையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் பாராட்டுவது மகிழ்ச்சிக்குரியதே.

இச்சஞ்சிகை அமரர் அருட்சகோதரி மரிய றொசாறியோவிற்கு அர்ப்பணிக்க இருப்பது கல்லூரிச் சமூகத்தின் நன்றியுணர்வை எடுத்துக்காட்டும் ஒரு விடயமாகும்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காப்படும்"
எனக் கூறுகின்றது திருக்குறள்.

இங்கு அமரர் அருட்சகோதரி மரிய றொசாறியோவின் சேவைகள் கல்லூரியில் நிலையான கல்லூரிக் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்பவும் அடைவுமட்டத்தில் உயர் நிலையைப் பேணி கல்லூரிக்கான நற்பெயரை எப்போதும் உச்சத்தில் வைத்திருக்கவும் அவர் எடுத்த முயற்சிகளே எச்சமாகக் காட்சி தருகின்றன. நன்றியோடு அவரது சேவை இவ்அர்ப்பணத்தில் உயர் கௌரவம் பெறுகின்றது. இது அவரது ஆத்ம சாந்திக்கு ஒரு பிரார்த்தனையாகவும் அமையும். ஆக நல்லதொரு நோக்கோடு வெளிவரும் இச்சஞ்சிகை சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்கள்.

திரு.வே.பாலசுப்பிரமணியம்
ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்.
தென்மராட்சி வலயம்.

வாழ்த்துக்கள்

யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் திரேசியன் பிளெவர் - 3 மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இருபத்திரண்டு வருடங்களிற்கும் மேலாக இக்கல்லூரியுடனான எனது தொடர்பு நீடித்து வருகின்றது. மறைந்த முன்னாள் அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்கள் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றிய காலப்பகுதி முழுவதும் இக்கல்லூரி நிகழ்வுகள் அனைத்திலும் கலந்து மகிழக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. தன்னலமற்ற அவர் பணிக்கு சமர்ப்பணமாக இம்மலரினை அளிப்பது சாலப் பொருத்தமானது.

கல்வியிலும் ஒழுக்கத்திலும் தலைசிறந்த பெண்கள் பாடசாலைகளில் முதன்மையான தாக இக்கல்லூரி திகழ்கின்றது. இணைப்பாடச் செயற்பாடுகளுக்கு முதன்மை கொடுத்து ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்குவதில் மறைந்த முன்னாள் அதிபர் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தி வந்தார்.அதற்காக சமூகத்திற்கும் பாடசாலைக்குமிடையிலான மிக நெருங்கிய தொடர் பினைப் பேணிவந்தார். இதனாலேயே மைதானத்துக்கான காணிக் கொள்வனவு, புதிய கட்டிடங்கள் எனப் பலவற்றைச் சாதிக்க அவரால் முடிந்தது. அமரர் அவர்கள் தாம் ஏற்றுக்கொண்ட சமயப் பணியுடன், சமூகப் பணி, கல்விப் பணியையும் நிறைவாக ஆற்றியுள்ளார்.

கல்லூரியின் கல்வித் தரத்தை உயர்த்துவதில் அயராது பாடுபட்ட அமரர் அதிபர் அருட் சகோதரி மரிய றொசாறியோ அவர்களின் கனவையும் நனவையும் மெய்ப்பிப்பதில் இம்மலர் தனது பங்களிப்பினை நல்கும். கல்லூரியின் செயற்றிட்டங்களில் கைகொடுக்கும் கரங்களில் எனது கரங்களையும் இணைத்து, கல்லூரியின் எழுபதாவது ஆண்டு விழா சிறப்புற அமையவும், தெரேசியன் பிளெவர் மலர் பயனுற விளங்கவும் எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

23.02.2016

திரு.நா.சுவாமிநாதன்,

ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்,

இடைக்காடு.

வாழ்த்துரை

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தமிழ் மன்றத்தினரால் இக்கல்லூரியின் 70ஆம் ஆண்டை நினைவு கூரும் வகையிலும் முன்னாள் அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோவின் 60ஆம் அகவையை நினைவுகூரும் வகையிலும் வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்கள் இக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய காலத்திற் பல தடவைகள் இக்கல்லூரிக்குச் சமூகமளித்துள்ளேன் இக்கல்லூரியை மேம்படுத்தி வளர்த்தெடுக்க அவர் அயராது பாடுபட்டார் அவரது காலத்திற் கல்லூரியின் பௌதீக வளங்கள் பெருக்கப்பட்டதுடன் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளும் உயர்நிலையிலிருந்தது. அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் மட்டுமன்றி அயற் கிராமங்களில் இருந்தும் மாணவர்கள் இக்கல்லூரியை நாடினர் அவர் இயற்கை எய்திய போதும் அவரது சாதனைகள் என்றும் நிலைத்திருக்குமென நம்புகிறேன்.

இவ்வேளை 70ஆம் ஆண்டு நிறைவைக் காணும் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி இப்பிரதேச மக்களின் எண்ணறிவையும் எழுத்தறிவையும் மேம்படுத்தி ஒளியூட்ட வாழ்த்துகின்றேன்.

வ. செல்வராசா
ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.



நல்ல பாடசாலை, நல்ல அதிபர்

1983 காலப்பகுதியில் நான் மு/கொக்கிளாய் அ.த.க.பாடசாலையில் ஆசிரியராக கடமை யாற்றிய வேளையில் அப்பாடசாலைக்குப் புதிதாக ஒரு மாணவி அனுமதி பெற்று வந்திருந்தார். அம்மாணவியின் நடத்தைகள், பண்புகள் அப்பாடசாலைச் சூழலில் சற்று வித்தியாசமானவையாக, அனைவரதும் விருப்புக்குரியனவாக அமைந்திருந்தன. வந்த சில நாட்களிலேயே அனைவரதும் விருப்புக்குரிய ஒருவராகிவிட்டார்.

இம் மாணவியின் முன்னைய கல்வி நடவடிக்கைகளை விசாரித்தபோது தான் யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்து, அருட்சகோதரி களின் மேற்பார்வையின் கீழ் கற்று வந்ததாகக் குறிப்பிட்டார். அம்மாணவி குறிப்பிட்ட அக்கல்லூரி யைப் பற்றி நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால், அதனைத் தரிசிப்பதற்கான வாய்ப்புக்கள் அப்போது எனக்கு ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் அக்கல்லூரி தொடர்பான உயர்வான எண்ணம் அன்று என் மனதில் பதிவாகியது.

அதன் பின்னர் நான் கல்வி நிர்வாக சேவையில் இணைந்து 1994 இல் கோப்பாய் கல்விக் கோட்டத்தில் கடமையாற்றியபோது, இக்கல்லூரியைத் தரிசிக்க வேண்டுமென்ற அவாவுடன், பாடசாலை ஆரம்ப நேரத்திற்கு முன்னதாகவே அங்கு சென்றிருந்தேன். மாணவிகள் பாடசாலையில் தமக்கென விதிக்கப்பட்ட கடமைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். நான் யாரென அவர்களுக்குத் தெரியாது, ஆனால், தமது கடமையின் இடையே "Good morning Sir" என்று மிகப் பௌவியமாக தமது அன்பை வெளிக்காட்டினர். நானும் அப்பாடசாலையை முழுமை யாகத் தரிசித்தேன். எனது மனதில் உதயமான உயர்வான எண்ணத்தை உறுதிப்படுத்திக் கொண்டேன். கல்வியின் உன்னத குறிக்கோள் " நற்பிரசைகளின் உருவாக்கமே " . அதற்கான அடித்தளம் இக்கல்லூரியில் மிக வலிதாக இடப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக்கொண்டேன்.

1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் போர்ச்சூழல் காரணமாக பாரிய இடப்பெயர்வு, கோப்பாய்க் கல்விக் கோட்டத்தின் அனைத்துப் பாடசாலைகளும் இடப்பெயர்விற்கு உள்ளாகின. எமது அலுவலகத்திற்கும் அதே நிலை. அச்சுவேலியில் யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் அதிபராக இருந்த அருட்சகோதரி எத்தல் வீவா அவர்களும், அவருடன் இன்னும் இரு அருட்சகோதரி களும் என்னை நாடி வந்து தமது கல்லூரியின் முக்கியமான சில ஆவணங்களை ஒப்படைத் திருந்தனர். அவ்ஆவணங்கள் அனைத்தும் மாணவர்களின் எதிர்கால நலன் நோக்கில் மிகவும் அவசியமானவை. இவற்றை மீளவும் தாம் வந்து பெற்றுக்கொள்வதாகக் கூறிச் சென்றனர். ஆனால் அவ்வேளையில் அவர்கள் தமது தனிப்பட்ட உடமைகள் எவற்றையும் எடுத்து வந்திருக்கவில்லை.

இவர்கள் அக்கல்லூரி மீது வைத்திருந்த அபிமானத்தை நான் நன்கு அறிந்திருந்தேன். மாணவர் களை மட்டுமல்ல அங்குள்ள அனைத்தையும் நேசித்திருந்தமையும் எனக்குத் தெரியும்.

அருட்சகோதரி எத்தல் வீவாவின் ஓய்வின் பின்னர், இக்கல்லூரிக்கு நல்லதொரு அருட்சகோதரி வாய்க்க வேண்டுமென அனைவரும் விரும்பினர். அவ்விருப்பிற்கு இணையாக வந்தவர்தான் அருட்சகோதரி மரியறொசாறியோ அவர்கள். சற்று வித்தியாசமானவர். கண்டிப்புடன் அன்பையும் கருணையையும் வெளிப்படுத்தி வந்த ஒருவராவார்.

நான் இக் கல்லூரியில் கடமையாற்றிய முன்னைய அருட்சகோதரிகள் பற்றிக் குறிப்பிட்ட போது, மிக அவதானமாக அதனைச் செவிமடுத்தார். அவர்களிலும் பார்க்க ஒரு மேம்பட்ட பணியை இக்கல்லூரிக்கு ஆற்றவேண்டுமென்ற அவா அவருள்ளே நிறைந்திருந்ததனை அவதானித்தேன். அவரின் காலத்தில் மிகத் தனித்துவமான விருத்திகள் இக்கல்லூரியில் ஏற்பட்டன. பௌதீகவள விருத்தியில் மட்டுமல்ல, மாணவர்களின் கல்வி அடைவுகளுடன் ஒழுக்க விழுமியங்களையும் மேம்படுத்தினார். இக்கல்லூரியின் நீடித்த புகழுக்கு வலுச்சேர்த்தார்.

" தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்." என்பது பொய்மொழி. அவர் எச்சமாக விட்டுச்சென்ற மாணவர்கள், அவரின் மறைவின் பின்னரும் மணிவிழா எடுத்து நன்றியைச் செலுத்த எண்ணினர். இந்த நன்றியுணர்வு போற்றத்தகுந்தது. இவ்நல்ல கைங்கரியத் திற்கு வித்திட்ட கல்லூரியின் தமிழ் மன்றத்தினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அருட்சகோதரி அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

நல்ல அதிபர் உள்ள கூடாத பாடசாலையும் இல்லை,
கூடாத அதிபர் உள்ள நல்ல பாடசாலையும் இல்லை.

ஆ.ராஜேந்திரன்
ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

வாழ்த்துரை

யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தினரின் முயற்சியால் வெளியிடப் படுகின்ற தெரேசியன் பிளெவர் - 03 நூலிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின் றேன். இக்கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்களுடன் எனக்கு நீண்ட காலமான தொடர்பு இருந்தது. அத்துடன் இரண்டு வருடத்திற்கு முன்னர் கல்வி முதுமாணிக் கற்கை நெறியிலும் அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. இவ்வாறான நிலையில் அவரால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்ட இப்பாடசாலையின் தமிழ் மன்றத்தினரின் கூட்டு முயற்சியால் வெளிவரும் இந்நூல் எமது தாய்மொழியாகிய தமிழின் பெருமைகளைப் போற்றும் வகையில் வெளிவருவது வரவேற்கத்தக்கதாகும். பாடசாலைக் காலங்கள் தனித்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளோடு மட்டும் நிறைவுபெறுவதில்லை. மாணவர்கள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு தமது ஆற்றல்களையும், திறமைகளையும் வளர்த்தல் காலத்தின் தேவையாகும்.

பாடசாலைகள் சமுதாயத்தின் முதன்மையான நிறுவனமாகும். இவை காலத்தின் தேவைக்கேற்ப கல்விச் செயற்பாடுகளைச் சிறப்பாகத் திட்டமிட்டு நெறிப்படுத்தி வருகின்றன. அவ்வாறான ஒரு செயற்பாட்டில் பாடசாலைகள் தனித்துக் கற்பித்தலோடு மட்டும் நின்றுவிடாமல் காலத்தின் தேவை கருதி இத்தகைய நூல்களை வெளியிடுவது பாராட்டத்தக்கது. இவ்வகையில் தமிழ் மன்றத்தின் முயற்சியால் வெளியிடப்படும் இந்நூல் எமது தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினை வெளிக்கொணர்வதாக அமையும். பண்பாட்டுப் பெருமைகளையும் எதிர்வரும் தலைமுறையின ருக்குக் கொண்டு செல்லுதலில் இவ்வாறான நூல்கள் சிறப்பான இடத்தைப் பிடித்துக் கொள் கின்றன. இத்தகைய நூல்களில் மாணவர்களின் ஆக்கங்களும் வெளிவருவது சிறப்பிற்குரிய தாகும்.மாணவர்களிடையே இத்திறமைகளை ஊக்குவித்தலில் மன்றங்களின் பணி அளப்பரிய தாகும். இவற்றை வழிநடத்த உதவிய பாடசாலை நிர்வாகத்தினருக்கும், மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

உளம் நிறைந்த வாழ்த்துக்களுடன்

கலாநிதி (திருமதி) ஜெயலக்சுமி இராசநாயகம்

சிரேஸ்ட விரிவுரையாளர்,

கல்வியியற் துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



வாழ்த்துக்கள் பல

யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி எழுபது ஆண்டுகளைக் கடந்து மிளிர்ந்து நிற்பதை எண்ணி மகிழ்வுடன் இம்மலருக்கு வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறேன்.

எழுபது ஆண்டுகளாகக் கார்மேல் அருட்சகோதரிகளின் அர்ப்பணிப்பான தலைமைத்து வத்தில் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து தனித்துவம் மிக்க மகளிர் கல்லூரியாக இக் கல்லூரி எம்பிரதேசத்தில் உயர்ந்து நிற்கின்றது. இவ்வேளையில் இக்கல்லூரியின் வளர்ச்சிக் காக உழைத்த அருட்சகோதரிகள், ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூற வேண்டிய தருணமாக இது உள்ளது. இவ்வேளையில் கடந்த 15 வருடங்களாக இக்கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிக் கடந்த வருடம் தனது சேவைக் காலத்திலேயே இறைவனடி சேர்ந்த அருட்சகோதரி மரியறொசாறியோ அவர்களின் 60ஆவது பிறந்தநாளில் அவரின் அர்ப்பணிப்பான தன்னலமற்ற சேவைக்காக இம்மலரைக் காணிக்கையாக்குவது எமது கடமையாகும்.

இக்கட்டான காலகட்டத்தில் இடப்பெயர்வுகளும் இன்னல்களும் நிறைந்த வேளையில் இக்கல்லூரியை வழிநடத்தி அதனைத் தனது விடாமுயற்சியால் உயர்வுக்கு இட்டுச் சென்ற அருட்சகோதரியை நினைந்து தமிழ் மன்றம் இம்மலரை வெளியிடுவது பாராட்டத்தக்கதாகும். திரேசியன் பிளெவர் என்கின்ற இம்மலர் சிறப்புற அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன்.

திரு. யே. கொட்விற் யோசவ்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.

வாழ்த்துச் செய்தி

யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி எழுபது ஆண்டு நிறைவை எய்து கிறது என்ற செய்தி மகிழ்ச்சிக்குரியது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காலத்துக்குக் காலம் பட்டப்பின் டிப்ளோமா கல்வி நெறியை மேற்கொண்ட இக்கல்லூரி ஆசிரியர்களின் கற்பித்தற் பயிற்சிக்காக இக்கல்லூரிக்குச் சென்று வந்த வேளைகளில் இக்கல்லூரி மாணவர்களின் ஒழுக்கத் தையும் கல்லூரியின் வளர்ச்சியையும் தரிசித்து வந்துள்ளேன்.

மறைந்த முன்னாள் அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்களின் காலத்தில் இக்கல்லூரி பெருவளர்ச்சி கண்டுள்ளது என்பதை எவரும் மறுக்கமுடியாது. அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்கள் பழகுவதற்கு இனியவர் தமது அன்பினால் கல்லூரி மாணவர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். அவர் முதுகல்விமாணிப் பட்டநெறியை மேற் கொண்டிருந்த காலத்தில் அவரது விரிவுரையாளர் என்ற வகையில் அவரின் திறமைகளையும் இனிய இயல்புகளையும் அறிந்து கொள்ளமுடிந்தது உடல் நலமற்றிருந்த காலத்திலும்கூட ஒழுங்காக விரிவுரைகளுக்கு அவர் வருகை தந்தார்.

இக்கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் கல்லூரியின் எழுபதாம் ஆண்டு நிறைவில் தமிழ்மன்றத்தினூடாக வெளியிடவுள்ள "தெரேசியன் பிளெவர் 3" என்ற மலரினை அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்களுக்கு சமர்ப்பணமாக்க எண்ணியுள்ளார்கள் என்ற செய்தி அருட் சகோதரி மீதான கல்லூரியின் அபிமானத்தைக் காட்டுகிறது. தமிழ்மன்றத்தின் இம்முயற்சியைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

கலாநிதி த. கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உழைப்பும்... உயர்வும்.... நினைவுகளில்.....

புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் 70ஆவது ஆண்டை நினைவுகூரும் முகமாகவும் இக்கல்லூரிக்கெனத் தன்னை அர்ப்பணித்து மரணித்த அதிபர் அருட்சகோதரி மரியறொசாறியோ அவர்களின் 60ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டும் தமிழ்மன்றத்தினால் வெளியிடப்படு கின்ற திரேசியன் பிளெவர் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் இக்கல்லூரியின் பழைய மாணவி என்கின்ற வகையில் பேருவகை அடைகின்றேன்.

கோப்பாய்க் கோட்டத்தின் ஒரே பெண்கள் பாடசாலை என்கின்ற பெருமிதத்துடன் கடந்த எழுபது ஆண்டு காலமாகக் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்குகின்ற இப்பாடசாலை யின் இற்றை வரையான வளர்ச்சிக்கு உழைத்த அதிபர்கள் ஆசிரியர்களை நன்றியுடன் நினைவு கூர்வது இந்நேரத்தில் மிகப் பொருத்தமானதாகும். அந்த வகையில் 1980களில் இருந்து ஆசிரிய ராகவும் கடந்த 15வருட காலத்தில் ஆளுமைமிக்க அதிபராகவும் இப்பாடசாலையின் வளர்ச்சிக் காக உழைத்து சேவையின்போது மரணித்த அமரர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்களை அவரது மணிவிழா நாளில் நினைந்து இம்மலரினை வெளியிடுவது அவரது உழைப்புக்கு வழங்கப்படும் கௌரவம் என்றே கருதுகின்றேன்.

இப்பாடசாலைச் சமூகத்தின் விழுமியங்களின் உயர்விற்காக மறைந்த அருட்சகோதரி அவர்கள் அர்ப்பணிப்புடன் உழைத்த விதம் என்றும் இச்சமூகத்தால் மறத்தற்கரியது பழகுவதற்கு இனியவராகவும் கடமையில் கண்டிப்பானவராகவும் உதவும் மனப்பான்மையில் உயர்ந்தவராயும் திகழ்ந்த அதிபர் மிகப் பிரமாண்ட அளவில் மணிவிழா கொண்டாடுவதற்கு ஆயத்தமான வேளையில் எம்மைவிட்டுப் பிரிந்தது எமக்கெல்லாம் பேரிழப்பாகும்.

அந்த இழப்பினை அஞ்சலித்து அவரது மணிவிழா நாளில் மிகப் பொருத்தமான ஆவணப் படுத்தல்களுடன் இம்மலரினை வெளியிடுகின்ற இக்கல்லூரியின் தமிழ் மன்றத்தினரின் பணி சிறக்க மனமுவந்து வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன்.

திருமதி றொசற் தவநாயகம்
முகாமையாளர், மக்கள் வங்கி
அச்சுவேலி.

வாழ்த்துச் செய்தி

யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் எழுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரியின் தமிழ் மன்றத்தால் வெளியிடப்படும் தெரேசியன் பிளெவர் 3 மலரிற்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1957ம் ஆண்டிலே முதலாம் வகுப்பிலே கல்வி கற்பதற்காக யா/புனித தெரேசாள் மகளிர் பாடசாலையில் அடியெடுத்து வைத்து நான்கு வருடங்கள் அவ் ஆலயத்தில் கல்வி பயின்ற காலங்கள் இன்றும் என் மனதிலே பசுமரத்தாணிபோல பதிந்துள்ளமையை மீட்டுப் பார்க்கின்றேன். 1971ஆம் ஆண்டிலே ஆசிரியராக முதல் நியமனம் பெற்று யா/புனித தெரேசாள் பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றியபோது பெற்ற நல்ல அனுபவங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாதவை.

யா/ புனித தெரேசாள் பாடசாலை ஆரம்பமான நாளில் இருந்து இன்றுவரை எங்கள் பிரதேசத்தின் மேம்பாட்டிற்காக பாடசாலையில் சேவையாற்றிய அருட்சகோதரிகளின் அளப்பரிய அர்ப்பணிப்பான சேவைகள் சொல்லில் அடங்காதவை பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும் என்ற கூற்றிற்கு இணங்க தன்னிடத்தில் அடைக்கலம் புகுந்த அத்தனை குழந்தைகளையும் அன்போடு அரவணைத்து கண்டிப்பாய் வளர்த்து ஒழுக்கமும் அறிவும் ஓங்க வளர்த்தெடுத்த தாய் இன்று பெருவிருட்சமாகி கல்லூரியாய் வளர்ந்து நிற்பது கண்டு பேரானந்தம் அடைகின்றோம்.

நான் யாழ். வலய கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி பல சிறப்புக்களை பெற்று வேகமாக வளர்ந்து சென்றது அவதானிக்க முடிகின்றது. அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்கள் பாடசாலையை முழுமையாக நேசித்து அல்லும் பகலும் பாடசாலையின் வளர்ச்சி பற்றியே சிந்தித்து அளவுமீறி அர்ப்பணம் செய்து பணியாற்றியமை நான் அறிவேன் தான் தீட்டிய திட்டங்கள் நிறைவேற ஏற்பட்ட தடைகளால் விட்ட கண்ணீரில் விருட்சம் ஆகியது யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அவரது அயராத முயற்சியால் காணி அகன்றது கட்டிடங்கள் உயர்ந்தன ஒழுக்கமும் ஆளுமையும் அன்பும் அறிவும் நிறைந்த மனிதர்களால் பாடசாலை நிறைந்தது இன்று யா/ புனித தெரேசாள் கல்லூரி தெய்வீக உணர்வு நிறைந்து காணப்படுகிறது அருட்சகோதரி மரிய றொசாறியோவின் காலம் எமது கல்லூரி வரலாற்றில் ஒரு பொற்காலம்.

அருட்சகோதரி மரிய றொசாறியோவின் மீது அன்பும் பெரும் மதிப்பும் கொண்ட சேவையால் உயர்வு கண்ட அருட்சகோதரி மரிய ஜீவந்தி அவர்கள் எமது கல்லூரிக்கு அதிபராய் கிடைத்துள்ளமை எமது ஊர்மக்கள் செய்த பாக்கியமே அவர்கள் ஒவ்வொரு பிள்ளைகளையும் தனித் தனியாக அறிந்து அவர்கள் மேம்பாட்டிற்காய் பல்வேறு திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வெற்றி காண்பதில் வல்லவர் என்பதை நான் அறிவேன்.

யா/புனித தெரேசாள் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், அலுவலர்கள் அனைவரதும் ஒருங்கிணைந்த உயர்வான சேவையால் மேலும் வளம்பெற எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்

"முயற்சியால் உயர்ச்சி காண்போம்"

திருமதி அ. வேதநாயகம்
ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் .

வாழ்த்துக்கள்

ஈழ மணித்திருநாட்டின் இயற்கை எழில் மிகு விவசாய கிராமத்தில் பல புகழ்மிக்க கல்விப் பெரியார்களையும் அறிவாளிகளையும் உருவாக்கி சீரும் சிறப்பும் பெற்று தழைத்தோங்கி சொர்க்கபுரியாக திகழ்கின்ற புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தனது 70ஆவது பிறந்தநாளை கொண்டாடுவதையிட்டு பேருவகையடைகின்றேன். நா வறண்ட மானுக்கு கிடைத்த நீர் போலவும் பாலைவனத்தில் தோன்றிய நீர் ஊற்றுப் போலவும் கோப்பாய் கோட்டத்தில் அச்சுவேலி மண்ணிற்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும்.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட்சகோதரிகளின் அதிசிறந்த வழிகாட்டலும் அர்ப்பண வாழ்வும் பாடசாலை சமூகத்தின் பூரண ஆதரவும் இத்தகைய நீண்ட வரலாற்றுக்கு மயில் கல்லாக அமைந்திருக்கின்றன. ஆகவே மறைந்த முன்னாள் அதிபரின் கனவுகள் நினைவாக்கப்படவும் எமக்கு கிடைத்த புகழ் பூத்த புதிய அதிபருடன் சகல செயற்பாடுகளும் செவ்வனே வீறு நடையுடன் சாதனை படைத்திட இறைவன் துணை கொண்டு வாழ்த்துகின்றேன்

இறையருளுடன் வாழ்க கல்விப் பணி

மரியதாசன் கமில்ரன்
அபிவிருத்திக் குழு.
செயலாளர்.

வாழ்த்துச் செய்தி

யாழ். மாவட்டத்தின் பிரதான கல்லூரிகளில் ஒன்றான யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தனது எழுபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதில் பெருமையடைகின்றேன். எழுபது வருடம் என்பது அதன் பழைமையையும், பல்லாயிரக்கணக்கான கல்விமான்களின் உருவாக்கத்தையும் எமக்குப் புலப்படுத்துகின்றது.

எழுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் "தெரேசியன் பிளெவர்" எனும் மலரினை மறைந்த முன்னாள் அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்களுக்கு சமர்ப்பணமாக்குவதில் பெருமையடைகின்றோம். எழுபது வருட கல்லூரி வரலாற்றில் இவரின் பணி ஒரு மைல்கல் எனலாம். ஒரு தனிநபரில் இத்தனை பல ஆளுமைகளா என எண்ணுமளவிற்கு ஒரு சிறந்த முதல்வராக, ஆசானாக, ஆன்மீகவாதியாக, ஒழுக்க பயிற்றுவிப்பாளராக என பன்முக ஆளுமையையும் கொண்டு சிறந்த முன்மாதிரியாக அனைவருக்கும் திகழ்ந்துள்ளார். அவரது பணிகளையும் தியாகங்களையும் கருத்திற் கொண்டு தமிழ் மன்றம் எடுக்கும் இம்மலர் வெளியீடு சிறக்க என் வாழ்த்துக்கள்.

வாழ்க அவர்களது முயற்சி. வளர்க கல்லூரியின் புகழ். இந்நூல் புகழ்பூத்த மலர்களில் ஒன்றாய் கைகளில் என்றும் தவழ இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

அதிபரின் உள்ளத்திலிருந்து.....

காலத்தின் தேவையை கருதி 1946ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி இப்பிரதேசத்தின் பெண்கள் கல்லூரி என்ற வகையில் தனித்துவம் பெற்று தனக்கென்று ஒரு இடத்தைப் பெற்றுள்ளது ஆரம்ப காலத்தில் இருந்து அருட்சகோதரிகளின் தலைமைத்துவத்தின் கீழ் இப்பாடசாலை வளர்ந்து கொண்டு வருகின்றது நேரமுகாமைத்துவம் கடமை உணர்வு விழுமியப் பண்புகள் தலைமைத்துவ பண்புகள் இறைபக்தி என்பன மாணவர் களுக்கிடையே கட்டி எழுப்பப்படுவதை காணக்கூடியதாக இருக்கின்றது பாடசாலை 70 வருடத்தை பூர்த்திசெய்து கொண்டிருக்கும் இவ்வாண்டில் மறைந்த அமரர் மரிய றொசாறியோவின் கனவு தனது மணி விழாவுடன் ஒரு மலர் வெளியீடு செய்து சிறப்பாக தனது ஓய்வு நிலையை அடைய வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தார் ஆனால் அவரின் திட்டத்திற்கு மேலாக இறைவன் தனது திட்டத்தை எமக்கெல்லாம் வெளிப்படுத்தி இவ்வுலகத்தில் ஓய்வு பெறும் முன்பே வானக வீட்டிற்கு நிரந்தரமாக ஓய்வு பெறுவதற்கு அழைத்துவிட்டார். அவருக்கு இந்நூலை சமர்ப்பணமாக்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன் இப்பாடசாலையை பொறுப்பெடுத்து ஒரு சில மாதங்களில் அவரின் நினைவாக இந்நூலை சமர்ப்பணம் செய்கின்றோம் கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் பல சாதனைகளை நிலைநாட்டிய பொழுதிலும் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் கொஞ்சம் பின்தங்கி காணப்பட்டாலும் மீண்டும் அருட்சகோதரியின் 15 வருட சேவையின் இறுதிக் காலங்களில் மேலும் பாடசாலை புத்துயிர் பெற்று 1000க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டு இருக்கிறார்கள் இக்கல்லூரி தொடர்ந்தும் ஆளுமைமிக்க மாணவர்களை வளர்த்தெடுக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு இக்கல்லூரி கல்வி ஒழுக்கம் விளையாட்டு தலைமைத்துவம் கலை இலக்கியம் ஆன்மீகம் என பல துறைகளில் வித்திடப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளது தொடர்ந்தும் அதனை கட்டி எழுப்பி வளர்ப்பது எமது தலையாய கடமையாகும்.

அருட்சகோதரி மரிய ஜீவந்தி
அதிபர்,
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.

பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தனது 70ஆம் ஆண்டு பூர்த்தி விழாவும் அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்களதும் மணிவிழா வைபவத்தையும் கொண்டாடும் முகமாக தமிழ்மன்றம் வெளியிடும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

அருட்சகோதரி மரியறொசாறியோ அவர்கள் இவ் அறுபதாம் ஆண்டு மணிவிழா நிறைவு தினத்தில் எம்முடன்கூட இல்லையே என்பது தான் எமது கவலை இவர் தனது காலத்தில் இந்த பாடசாலையை தனது நினைவாக எந்நேரமும் பாடசாலை பாடசாலை என்று ஓயாமல் உறங்காமல் அளப்பரிய சேவையாற்றியுள்ளார் இவரது காலத்தில் பாடசாலையின் பெறுபேறுகள் படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது பாடசாலையின் வளங்கள் வாய்ப்புகள் அனைத்தும் படிப்படியாக உயர்ந்து வந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது எனக்குப் பிறகு இப்பாடசாலையில் உள்ளவர்கள் அனைத்து வளங்களையும் பெற்று விடுவது முழுமூச்சாக செயற்பட்டார் மேலும் அருட்சகோதரி அவர்கள் மாணவருடன் அவர்களது இன்பதுன்பங்களிலும் கலந்து கொண்டு ஆசிரியர்களுடனும் உறவு நிலைகளை ஒரு தாயைப் போல் கவனித்து வந்தமை இவரது காலத்தில் இவரது வெற்றிக்கு ஒரு காரணமாக இருந்தது என்றும் சொல்லலாம் மேலும் பாடசாலை மாணவர்களது கல்வி சார் அபிவிருத்தியிலும் மிகுந்த அக்கறை கொண்டவராகவும் காணப்பட்டார் பாடசாலை வாழ்க்கையை தன் வாழ்க்கையாக கொண்டு சிறந்த செயற்பாட்டை வெளிப்படுத்தி உள்ளார் இவரது கனவுகள் இலட்சியங்களை நனவாக்க நம் புதிய அதிபர் வந்திருக்கின்றார் பாடசாலை தமிழ் மன்றம் மூலம் இச்சஞ்சிகையை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருமதி.சு.மகேஸ்வரதாசன்,
பிரதி அதிபர்,
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.

மன்றப் பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி

யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தினால் 2016 ஆம் ஆண்டு தெரேசியன் பிளெவர் - 3 என்னும் சஞ்சிகை வெளியிடப்படுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. இச்சஞ்சிகையானது தமிழ் மன்றத்தின் மூன்றாவது வெளியீடு என்பதை நினைக்கும் போது தொடர்ச்சியான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது." சிறந்த நூல்கள் சிறந்த ஆசான்கள்" என்பது முதுமொழி. அந்தவகையில் நூலுருப் பெற்றுள்ள இச்சஞ்சிகையானது வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் மனதுக்கு இனிமையானதாகவும் வாழ்க்கைக்கு வழிகாட்டு வதாகவும் இருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். அத்துடன் இம் மன்றத்தையும், இக்கல்லூரியையும் மிகுந்த பற்றுடனும் அர்ப்பணிப்புடனும் வளர்த்து வந்தவராகிய முன்னாள் அதிபர் அமரர் அருட்சகோதரி மரிய றொசாறியோவின் மணிவிழா தினத்தன்று வெளியிட்டு வைப்பது இவ்வெளியீட்டுக்கு இன்னொரு சிறப்பம்சமாக உள்ளது. எனவே தரமான ஆக்கங் களைத் தன்னகத்தே கொண்டு THERESIAN FLAVOUR மேலும் பல இதழ்களை விரித்து மலர்ந்து மணம் பரப்பவேண்டும் எனவும், தமிழ் மன்றத்தின் பணிகள் வளர்ந்தோங்க வேண்டும் எனவும் எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி ச. மதியரசன்
பொறுப்பாசிரியர்,
தமிழ் மன்றம்.

தமிழ் மன்றத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தினால் 2016ம் ஆண்டு தெரேசியன் பிளேவர் - 03 எனும் சஞ்சிகை வெளியிடப்படுவதையிட்டு தமிழ் மன்றத்தின் தலைவ ராகிய ஆகிய நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இச்சஞ்சிகையானது எமது தமிழ் மன்றத்தின் முன்றாவது வெளியீடு ஆகும் இம்மன்றமானது மாணவர் சமூகத்துக்கும் கல்விச் சமூகத்துக்கும் தன்னாலான பணிகளை முன்னெடுப்பதற்கு ஆவலாக உள்ளது. இதன் பெறுபேறாகவே இச்சஞ்சிகை வெளியீடு அமைந்துள்ளது என நான் நினைக்கிறேன். தாய் மொழியில் பற்றும் பாண்டித்தியமும் உள்ள ஒரு சமுதாயம் இந்நாட்டிற்குத் தேவை அந்தவகையில் எம்மாலான சில முயற்சிகளையேனும் செய்வதற்கு தலைப்பட்டுள்ளோம். இச்சஞ்சிகையின் ஆக்கங்கள் மாணவர் சமுதாயத்திற்கு பெரிதும் பயன் உள்ளவையாக இருக்கும் என நான் நம்புகிறேன். மேலும் மறைந்த எமது முன்னாள் அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்களின் மணி விழா நாளில் இச்சஞ்சிகையை வெளியிட்டு வைப்பது அவர் மீது எமது கல்லூரி சமூகம் கொண்டுள்ள மதிப்பையும் பற்றையும் வெளிப்படுத்துகின்றது .

எனவே தமிழ் மன்றமானது இச்சஞ்சிகையைப் போன்று மேலும் பல சஞ்சிகைகளை வெளியிட்டு சமூகத்துக்கு பங்களிப்பாற்றவேண்டும் என்றும் இந்நூல் வெளியீடு சிறப்புற அமையவேண்டும் என்றும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

க. நிக்ஸ்சிலா

தமிழ் மன்றத் தலைவர்

எமது அதிபர்

அருட்சகோதரி.மரிய ஜீவந்தி (SLPS.2.II), B.A, P.G.D.E

பிரதி அதிபர்

திருமதி.சு.மகேஸ்வரதாசன்

நூற்குழு

அதிபர்கள் வரிசையில்

அச்சுநகர்க் கனியாய்த் திகழும் எங்கள் கல்லூரி யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் கல்லூரி என்ற அந்தஸ்துடன் உள்ளது. இது பெண்களுக்கான கல்வி முன்னேற்றத்திற்கு ஒரு ஆரம்பமாகவும் பெண்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும் அரும்பணியாற்றிவரும் கல்லூரி யாகவும் உள்ளது. யாழ். நகரின் கோப்பாய் கோட்டத்தில் மகளிர்க்கான கல்லூரியாக இருப்பதனால் மகளிருக்கு கலை, பண்பாட்டு, பாரம்பரியங்களை வழங்குவதில் இக்கல்லூரி செலுத்தவேண்டிய பங்களிப்பு பெரிதாக உள்ளது. அத்துடன் அறிவுபூர்வமான கல்வியை வழங்கி எத்தனையோ மாணவர்களை மருத்துவராக, நல்லாசிரியராக, நல்ல தலைவர்களாக வழங்கிய பெருமை கல்லூரியையே சாரும்.

கல்லூரியின் ஸ்தாபகர்

புனித சூசையப்பர் ஆலயத்திற்கு அருகிலுள்ள முதலியார் வளவில் 1899ம் ஆண்டு தைத்திங்கள் ஆறாம் நாளில் பிறந்தார். இவர் தன் கல்வியை யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் கற்றுத்தேறி லண்டன் மற்றிக் பரீட்சையில் சித்தியடைந்து சட்டப்படிப்பையும் கற்றுத்தேறினார்.

1946 - 1947

1946 ஆம் ஆண்டு தைமாதம் 6ம் திகதி இக்கல்லூரியின் பிரதான மண்டபத்தை (100x40 சதுர அடி) கட்டிக் கொடுத்தமை இவரது சமூக சேவையின் உச்சத்தை காட்டி நிற்கிறது. இதனைத் தொடர்ந்து இக்கல்லூரியின் வளர்ச்சிப்பயணத்தை நோக்கும்போது 1946ம் ஆண்டு 7ம் வகுப்பு வரையும் இருந்த கல்லூரி 1950ம் ஆண்டு வருகை தந்த கார்மேல் சபைக் கன்னியரிடம் திருக்குடும்பக் கன்னியர் தம் பொறுப்பை கையளித்தனர்.

இதன் பின்னர் கல்லூரியைப் பொறுப்பேற்ற அதிபர்கள் வரிசையில் அருட்சகோதரி மேரி அலக்கொக் AC 1947ம் ஆண்டு மார்கழி மாதம் பாடசாலை யைப் பொறுப்பேற்றார். இவர் பாடசாலையின் மீது மிகுந்த பற்றுடன் செயற்பட்டார்.

அவரைத் தொடர்ந்து அருட்சகோதரி S.rgPdh A.C அதிபராகப் பதவியேற்றார். இக்கால கட்டத்தில் மாணவர் தொகை அதிகரித்ததுடன் பெற்றோரின் பங்களிப்பும் சிறப்பாகக் காணப்பட்டது. அத்துடன் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு தையற் பயிற்சியையும் வழங்கினார்.

அவரைத் தொடர்ந்து பொறுப்பேற்ற அதிபராக அருட்சகோதரி M.எவறெல்டா A.C1951-1969 வரை தனது பணியை திறம்பட ஆற்றினார். இக்கால கட்டத்தில் தான் 25x45 சதுர அடியைக் கொண்ட மனையியல்கூடம் அமைக்கப்பட்டது. அத்துடன் க.பொ.த (சா/த) மனையியல் பாட செய்முறைப் பரீட்சையும் சிறப்பாக நடாத்தப் பட்டது. மேலும் இவரது பணிகளின் வரிசையில் 60x20 சதுர அடியைக் கொண்ட ஆரம்பப்பிரிவு வகுப்பறைக் கட்டடத்தொகுதி, மேலைத்தேய வாத்தியக்குழு,

சென்.யோன்ஸ் அன்புலன்ஸ் சேவை, சாரணியம், அனாதைச் சிறுவர்களைப் பொறுப்பேற்று பராமரித்தல், பாடசாலைவிட்டு விலகியோருக்கு தட்டெழுத்துப் பயிற்சி போன்றவற்றைக் குறிப்பிட முடியும். 1960ம் ஆண்டு அரசினால் பொறுப்பேற்கப்பட்டதுடன் ஆண்களின் வகுப்பு மட்டுப்படுத்தப் பட்டு 6ம் தரத்துக்கு மேல் பெண்கள் அனுமதிக்கப்பட்டனர்.

கல்லூரியின் அதிபர் பொறுப்பில் அடுத்ததாக கடமையேற்றவர் அருட் சகோதரி ஆ.ஸ்ரனிஸ்லஸ் மேரி அவர்கள். இவரது பணி 1970 - 1974 வரை நீடித்தது. இக்காலப் பகுதியில் தண்ணீர்த்தொட்டி அமைக்கப்பட்டு குழாய் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் பாடசாலை வளவில் உள்ள மண்டபங்களைத் தொடர்புபடுத்தி செப்பனிடப்பட்ட பாதைகளை அமைத்தார்.

இவரைத் தொடர்ந்து அருட்சகோதரி சிசிலியா மேரி A.C அவர்கள் 1975 - 1980 வரை தனது சேவையை இக்கல்லூரிக்கு வழங்கினார். இவரது காலப்பகுதியில் விஞ்ஞான அறை அமைக்கப் பட்டது. அத்துடன் சங்கானை வீதியின் பக்கமாக இரண்டு மாடிக்கட்டிடம் அமைக் கப்பட்டது. தற்போது இம்மண்டபத்துக்கு அவரின் நினைவாக சிசிலியன் மண்டபம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மாணவர் தொகை அதிகரித்ததனால் மேலும் ஒரு வகுப்பறைக் கட்டடத்தொகுதி ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கென அமைக் கப்பட்டது. இவரது அயராத முயற்சியால் க.பொ.த உயர்தர கலைப்பிரிவு 1979ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதே ஆண்டிலேயே இப்பாடசாலைக்கு யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி என்ற பெயர் சூட்ட அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் மாணவர் தொகையும் அதிகரித்துக் கொண்டே சென்றது.

1981 - 1986 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் அருட்சகோதரி எம்.விடலீனா A.C அவர்கள் அதிபராக தம் கடமைகளைச் சிறப்பாக ஆற்றினார். 1981ம் ஆண்டு இக்கல்லூரியில் இருந்து முதன்முதலில் மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கான அனுமதி பெற்றுச்சென்றனர். இவரின் அயராத முயற்சியின் காரணமாக அதிபர் அலுவலகத்தை உள்ளடக்கியதான மேலுமொரு மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. அத்துடன் நில்லாது போட்டிப் பரீட்சையிலும் வகுப்புப் பரீட்சையிலும் மாணவரை முனைப்புடன் ஈடுபடுத்திச் சாதனை புரிய வழிப்படுத்தினார். இதன் பயனாக 1986ம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் தவராசா திருமுருகன் என்ற மாணவன் அகில இலங்கை ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றார்.

விடலீனா அவர்களின் ஓய்வைத் தொடரந்து அருட்சகோதரி கனிஸ்ரா A.C அவர்கள் 1986 - 1990 வரை அதிபராகக் கடமையாற்றினார். இவர் கத்தோலிக்க நெறியிற் காட்டிய அதே ஆர்வத்தை சைவ நெறியிற் காட்டினார் என்பது மிகையாகாது. இக்கால கட்டத்தில் ஆசிரியர் தொகையும் மாணவர் தொகையும் அதிகரித்துச் சென்றது. இக்காலம் மிகவும் துன்பமானதொரு நாட்டுச் சூழலில் சிக்கியிருந்தது.

இக்காலத்தில் பாடசாலை அகதிமுகாமாகவே நீண்ட காலம் இருந்தது. இக்காலத்தில் இப்பாடசாலையை அண்டிய மக்களை காப்பாற்றிய பெருமை இவரையே சாரும்.

இவரது காலத்தின் பின்னர் 1990 - 2000ஆம் ஆண்டுவரை அருட்சகோதரி மேரி எத்தல்வீவா A.C அவர்கள் பொறுப்பேற்றார். இவரது காலமும் சாதகமற்ற சூழல் காணப்பட்டபோதும் மாணவரின் கல்வி, இணைபாடவிதான செயற்பாடுகள் என்பன சிறப்பான நிலையில் காணப்பட்டன. இக்கால கட்டத்தில் இப்பாடசாலை யானது கோப்பாய்க் கோட்டத்திலேயே தனித்துவமான மகளிர் கல்லூரியாக பரிணமிக்கத் தொடங்கியது.

03.07.2000 ஆம் ஆண்டில் இருந்து 08.11.2015 வரையுள்ள 15 வருடங்கள் அருட்சகோதரி மரிய றொசாறியோ A.C அவர்கள் அதிபராக தமது கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். இவரது காலம் இக்கல்லூரி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடிய

காலமெனல் மிகவும் பொருத்தமானது. மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அத்துடன் ஆசிரிய வளஆளணியும் அதிகரித்தது. கல்விவளர்ச்சி உயர் நிலையை அடையத் தொடங்கியது. தரம் 11 மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள், பல்கலைக்கழக அனுமதியைப்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை என்பவற்றில் உயர் வீதத் தைக் காண்பித்தது. அத்துடன், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கோட்ட, வலய, மாகாண மட்டங்கள் வரை சாதனை பதிவாகின.

அதிபரின் விடாமுயற்சியின் பயனாக பாடசாலை அபிவிருத்திக் குழுவின் உதவியுடன் 2011 ஆம் ஆண்டளவில் 7 பரப்புக்காணி கொள்முதல் செய்யப்பட்டது. அதன் பின்னர் உடனடி யாகவே அதிகரித்த மாணவரின் கல்விச் செயற்பாட்டை சிறப்பாக மேற்கொள்வதற்கென 25x90 அடி நீளம் கொண்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதியொன்று ஆரம்பப்பிரிவு மாணவருக்கென அமைக்கப்பட்டது. ENREPஇன் உதவியுடன் அமைக்கப்பட்ட இக்கட்டடத் தொகுதியானது 2012.07.21 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இதன் பின்னர் யுனிசெவ் உதவியுடன் மாணவருக்கான கழிப்பறைத் தொகுதியொன்றும் அமைக்கப்பட்டது. அத்துடன் விஞ்ஞான ஆய்வுகூடமும் அதே ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. 25.06.2013 அன்று திறந்து வைக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் பழைய மாணவர், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் அயராத உழைப்பின் பயனாக பாடசாலைக்கு அருகாமையிலுள்ள 4 பரப்புக்காணியானது கொள்வனவு செய்யப்பட்டது. அத்துடன் நூலக கட்டடமானது "மாகாண குறித்து ஒதுக்கப்பட்ட நிதி" யில் கட்டப்பட்டு 19.03.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மாணவரின் வகுப்பறைப் பற்றாக்குறையை தற்காலிகமாக நிறைவு செய்வதற்காக 25x80 பரப்பளவு கொண்ட தற்காலிக வகுப்பறைக் கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டது. அத்துடன் ஆசிரியர் ஓய்வறை இல்லாத குறையை நிவர்த்தி செய்வதற்காக தற்காலிக ஆசிரியர் ஓய்வறை ஒன்றும் அமைக்கப்பட்டது. இத்துடன் ஆசிரியர், மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் அமைக்கப்பட்டது. இவற்றின் அடிப்படையில் நோக்கும்போது இக்காலத்திலேயே சிறப்பான பௌதீக வளஅபிவிருத்தி ஏற்பட்டது என்பது உண்மை.

பௌதீக அபிவிருத்தியுடன் சமாந்தர நிலையில் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பெறுபேறுகள் உச்சநிலையை எட்டியதும் இக்காலத்தில்தான் அந்தவகையில் புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள், க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள், க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள் என்பனவும் திருப்திகரமானதாக இருந்துள்ளன. மேலும் பல்கலைக் கழகத்துக்கும், தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் தெரிவாகும் மாணவர் தொகையும் அதிகரித்தது.

இவ்வாறாக 7 தசாப்தங்களைக் கண்ட இக்கல்லூரியானது நவீன உலகின் சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் சிறந்த சிற்பிகளை சமூகத்திற்கு வெளிவிடும் வகையில் துலங்கிக் கொண்டிருக்கின்றது.

நினைவஞ்சலி

திருமதி.சு.மகேஸ்வரதாசன்
பிரதி அதிபர்

எமது ஆருயிர் தாயாகவும் அதிபராகவும் புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் பணியாற்றிய அருட்சகோதரி மரிய றொசாறியோவின் மரணமானது இன்னும் உள்ளத்தை உருக்கி கண்ணீர் வடியச் செய்கின்றது. அருட்சகோதரி மரிய றொசாறியோ எமது கல்லூரியில் ஆசிரியராக அதிபராக இருந்து எல்லோர் மனதிலும் நீங்காத இடம்பெற்றிருக்கின்றார். புன்னகை தவழும் முகம் அமைதியான சுபாவம் பணிவு திறமையுடன் செயலாற்றும் தன்மை இறை நம்பிக்கை என்பவற்றைக் கொண்டவராக விளங்கியவர். இவரின் பிரிவானது எமது பாடசாலை சமூகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அணைந்த விளக்கிற்கு எனது உள்ளத்தில் இருந்து உதித்த கவிதைத் துளிகள்.

என் அன்புக்குரிய அருட்சகோதரியே
பண்பிற்கும் பாசத்துக்கும் இருப்பிடமே
நீண்ட வருடங்கள் அன்பென்னும்
கயிற்றால் இணைக்கப்பட்டு களிப்புடனே
அகமகிழ்ந்திருக்கும் நேரத்தில் .....

விதிசெய்த சதியால்
காலனவன் எம்மைப் பிரித்துவிட்டான்
பிரிவுத்துயரம் எம் உள்ளத்தை உருக்கி வாட்டுதம்மா
விழிகளில் அருவிநீர் சொரிகிறதம்மா

தொலைபேசி அடிக்கும் கணத்தில்
உன் அழகிய திருவாய்தனில்
உதிக்கும் சொற்களை செவி தேடுதம்மா

உன் புன்சிரிப்பும் சித்திரப்பாவை
போன்ற தன்மையும்
சின்னக் கால்களால் குறுகுறுநடையும்
விரும்பி அணியும்
வெள்ளை உடையும் உனக்கே உரியதம்மா

'மன்னார்' எனும் அழகிய ஊரிலே பிறந்து
புகழ் பெற்றோங்கும் சென்.திரேசா
மகளிர் கல்லூரி தனிலே
ஆசிரியராக கடமையேற்று - யாழ்.
பல்கலைக்கழகந்தனிலே கலைப்பட்டதாரியாக
டிப்ளோமா பட்டத்துடன்
முதுகல்விமாணி பட்டத்தையும் பெற்று
புனித மகளிர் கல்லூரி தனில்
அதிபர் பணியினையும் உவப்புடனே ஏற்று
கற்ற கல்வியுடன் ஒழுக்கம் பண்பையும்
மாணவருக்கு தினமும் ஊட்டி
சிற்பியாக நீ இருந்து
சமுதாயத்திற்கு ஏற்ற நற் சிற்பங்களாக
மாணவரை ஆக்கி வைத்தீர்
சோடியை இழந்த அன்றில் பறவை போல்
சென்.திரேசா மகளிர் கல்லூரியும்
ஒருதாய் வயிற்றில் பிறந்த
உன் பாசமான அக்காவும் அண்ணன்மாரும்
அருட்சகோதரிகளும்
உன் பிரிவுத்துயரால் வாடுகின்றோம்
அம்மா நீ இன்றி கல்லூரி கண்ணீர் வடிக்கிறது.
என்நெஞ்சத்தில்
நீங்கா எழில் முகம்
இன்னும் தெரிகிறதம்மா...
ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

கல்வி அழகே அழகு

P.சுயானிகா

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு"

என்கின்றது நாலடியார்

"தலைமயிரைச் சீர்படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானையில் கரையிட்ட அழகும், மஞ்சள், பூசுவதால் உண்டாகும் அழகும் உண்மை அழகல்ல. மனதளவில் உண்மையாக நடந்து கொள்கிறோம் என்னும் நடுவு நிலையாம் ஒழுக்க வாழ்க்கையைத் தரும் கல்வி அழகே மிக உயர்ந்த அழகாம்" என்பது இவ்வெண்பாவின் கருத்தாகும். ஒருவருக்கு புறஅழகெல்லாம் அழகல்ல: கல்வி அழகே உண்மையான அழகாகும் என்பதை இப்பாடல் எடுத்துரைக்கிறது. நம்மில் பலர் இந்த உண்மையை உணர்வதாயில்லை. நிலையற்ற பொருட் செல்வத்தை நாடி, அழிவற்ற கல்விச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள மறந்து விடுகின்றனர்.

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றையவை" என்கிறார் திருவள்ளுவர்.

ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. மற்றப்பொருட் செல்வங்கள் எல்லாம் அழியக் கூடியவை. ஆகையால் சிறந்தவை அல்ல என்பது இக்குறள் கூறும் கருத்தாகும். இதன் மூலம் அழிவற்ற செல்வமான கல்வியையே நாம் தேடிக் கொள்ளவேண்டும் என்பது நன்கு புலனாகிறது. கல்வி அழகே அழகு என்று கூறும் நாலடியார் வாக்குக்குப் பலம் சேர்க்கும் வகையில் வள்ளுவர் அநேக குறட் பாக்களில் கல்வியின் சிறப்பை எடுத்துரைத்தார்.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவருக்கு
எழுமையும் ஏமாப்பும் உடைத்து"

என்னும் குறட்பாக்கள் மூலம் கல்வியுடையோரே கண்ணுடையர் என்றும் ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வி ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் பாதுகாவலாக நின்று உதவும் என்றும் வள்ளுவர் எடுத்துக் கூறுகின்றார்.

எனவே ஒருவனுக்கு உண்மையான அழகைத் தரும் கல்வியினை நாடித் தேடிக் கொள்ளல் அவனது தலையாய கடமை என்பது நன்கு புலனாகிறது. கல்வியைத்தேடி கொண்டால் மட்டும் போதாது. அதனை நாளாந்தம் வளர்த்திடவேண்டும். நமது உடலைத் தூய்மைப்படுத்துவது போல நமது உள்ளத்தையும் தூய்மைப்படுத்த வேண்டும்.

"அறிவு அற்றம் காக்கும் கல்வி செறுவார்க்கும்
உள் அழிக்கல் ஆகா அரண்"

என்கிறார் வள்ளுவர். அறிவு ஒன்றே அழிவு வராமல் நம்மைக் காக்கும் கருவியாகும். பகைவராலும் அதனை அழிக்க முடியாது என்பது இதன் மூலம் புலனாகிறது. எனவே அறிவை வளர்த்திட பெருக்கிட அல்லும் பகலும் நாம் முயன்றிடல் வேண்டும்.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

மணற்கேணியைத் தோண்டத் தோண்ட நீர் ஊற்றெடுப்பதுபோல மக்களுக்கும் கல்வி கற்ற அளவுக்கு அறிவு ஊறும் என்பார் திருவள்ளுவர். எவ்வளவு நூல்களைக் கற்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்களுக்கு கல்வி அறிவு பெருகும். இந்த உண்மையை நாம் வாழ்வில் கைக்கொள்வோமாயின் நாம் உண்மையான அறிவுடையவர்களாக அழகுடையவர்களாக வாழ்வாங்கு வாழ முடியும்.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்கிறார்

கற்க வேண்டிய நூல்களைக் கற்க வேண்டும். அதன் பின் கற்றதன்படி வாழவேண்டும். இதுவே கற்றவர்க்கு அழகாகும். வெள்ளத்தால் அழியாத. வெந்தணலால் வேகாத பிறருக்குக் கொடுக்குந்தோறும் குறைவுபடாத கல்விச் செல்வத்தைத் தேடிட ஒவ்வொருவரும் முயலவேண்டும். கல்வி ஒன்றே மனிதருக்கு உண்மையான அழகைக் கொடுக்கும். வாழ்வைக் கொடுக்கும். "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்ற உண்மையை உணர்ந்து அறிவை பெருக்கிட வேண்டும். உறுதி பூண வேண்டும்.

போலி அழகுகளில் மயங்காது உண்மையான அழகைத்தரும் கல்வியின் பால் நம் கவனத்தை திருப்ப வேண்டும் அதுவே வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியினைக் காட்டும்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்று வெற்றி வேட்கை கூறும். கல்வியினை எப்பாடுபட்டேனும் நாம் கற்றிட முன்வர வேண்டும். "கல்வி அழகே அழகு" என்ற தாரக மந்திரத்தை எந்நாளும் நினைவிற் கொள்ள வேண்டும். அதன் மூலம் நாம் மட்டுமன்றி நாடும் நலன்பெறும். நல்லவர் தொகை பெருகும். கல்வி அழகினைப் பெற்றிட அயராது முயற்சிப்போமாக.

போற்றிடுவோம் தமிழை

திருமதி.மொறின் பிலோமின்ராஜ்
ஆசிரியர்

தமிழே எம் உயிரே
தரணி போற்றும் மொழியே
எம் தாயே வணங்குகிறோம்
தலை குனிந்து பணிவுடனே

அழகிய தமிழே - இனிமை
உங்கள் உயிரல்லவோ
இயல் இசை நாடகம்
உள் பிரிவல்லவோ
காவியங்கள் இலக்கியங்கள்
உன் ஆடையல்லவோ
பழம் பெரும் புலவரெல்லாம்
உன் குழந்தைகள் அல்லவோ

பண்டைத் தமிழ் புலவர்
பைந்தமிழை வளர்க்க
பாடுபட்டு உழைத்து
பலகாவியங்கள் படைத்தனர்

இன்பத் தமிழே - உன்
ஜனனம் ஏட்டில் எழுதவில்லை
பல புலவர் சேர்ந்து உனை
பத்திரமாய் வளர்த்துள்ளார்

துன்பங்கள் இல்லாமல்
நற்பண்பாட்டுடனே - நீ
வளர்ந்துள்ளாய் தெரிகிறது
இன்று மட்டும் ஏன்சோகம்

தமிழே உன் இளமைத்
துடிப்பு எங்கே? .....
காணவில்லை .....நீ
களைத்துவிட்டாயோ? .....

தமிழே தற்கால உன்
மகவை பிடிக்கவில்லையோ?
நாகரிகமாக பிறந்தானோ
உன் பண்பாட்டை மறந்து

நாகரிகம் என்று சொல்லி
தமிழையே பேசமறந்து
வேறு மொழி பேசுகின்றான்
தாங்கலையோ உந்தன் மனம்

சூழ்நிலை மாற்றத்தால்
வெளிநாடு சென்று இன்று
சொந்த மொழியையே
மறந்து போய்விட்டான்

தமிழ்பேசத் தெரிந்தும்
நாகரிகமாக நம்மில் சிலர்
அம்மாவை மம்மியாயும்
அப்பாவை டாடியாயும் அழைக்கின்றார்

தமிழருக்கே உரிய அருமை
சொற்களெல்லாம் - இன்று
அவசியம் இன்றிப் போனது
தமிழனின் நாகரிக மோகத்தால்

தமிழா அன்னிய மொழியே
நாகரிகம் என்று நம்பி - நம்
தமிழருக்கு அழிவைத் தேடாது நாளும்
போற்றிடு எம் தமிழை

அருட்சகோதரி மரிய றொசாறியோவின் வரலாற்றுப் பதிவுகள்

ஈழ மணித்திருநாட்டில் மங்கா மகிமைபெறு மன்னாரில் நீர் வளமும், நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்ற அன்னை பூமியாம் ஆண்டான் குளத்தில் மரிசால் தோமஸ்சுக்கும், தாய் செபமாலை சவுரிஆச்சிக்கும் அன்பு மகளாக 1956ம் ஆண்டு பங்குனி மாதம் ஒன்பதாம் திகதி பிறந்தார்.

தாய் தந்தையர் இட்ட அன்புப் பெயராக பத்திமாவதி றொசாறியோ தோமஸ் எனும் பெயரும் பெற்றார். ஆசைக்கும் அன்புக்குமாக றெனிஸ்லஸ் விஜயாவதி றெஜினா சகோதரியோடும் தோமஸ் ஏசுதாசன், தோமஸ் கிறிஸ்திதாசன் சகோதரர்களையும் கொண்டவராய் சிறந்த கல்வி அறிவோடும் இறை உணர்வோடும் வளரலானார்.

மன்னார் மண்ணிலே கல்வியைத் தொடங்கிய இவர் அறிவாலும் ஆற்றலாலும் பல பதவி களையும் பட்டங்களையும் பெற்று மாணவர்களுக்காக உழைத்த அருட்சகோதரி ஆவார்.

தனது ஆற்றல்மிக்க அறிவின் திறத்தால் 21 வயதிலேயே ஆசிரியத் தொழில் செய்ய புறப்பட்டார். 1977ஆம் ஆண்டு தமது ஆசிரியப் பணியை யா/ புனித சவேரியார் கல்லூரியில் ஆரம்பித்தார். மாணவர்களினதும், ஆசிரியர்களினதும், மக்களினதும் அன்பைப் பெற்று மனநிறைவும் கண்டார். 1978ஆம் ஆண்டு மன்னார் அடம்பன் ம.ம.வித்தியாலயத்தில் தமது ஆசிரியப் பணியை தொடர்ந்தார். அடுத்து 1979ஆம் ஆண்டு யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிபெற்று பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆனார். ஆசிரிய பயிற்சியை முடித்துக்கொண்டு மீண்டும் மன்னார் அடம்பன் ம.ம வித்தியாலயத்தில் 1982ல் பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியை தொடர்ந்தார். 1986ஆம் ஆண்டு இந்தியா சென்று முதலாவது அர்ப்பணத்தை செய்து, அதே ஆண்டு ஆனி மாதம், 18ஆம் திகதி குமனாயங்குளம் புனித தோமையார் ஆலயத்தில் யூபிலி நன்றித் திருப்பலியை ஒப்புக் கொண்டார்.

இறைபணியோடு ஆசிரியப் பணியை தொடர்ந்த இவர் 1989ம் ஆண்டு யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் ஆசிரியராக கடமைப் பொறுப்பை ஏற்றார். கல்வியில் ஆர்வம் கொண்ட இவர் 1994ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரி ஆகியதுடன், பட்டதாரி ஆசிரியர் ஆனார். அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்கள் தமது ஆசிரியப் பணியை 1995ஆம் ஆண்டு பது/ தமிழ் மகாவித்தியாலயத்தில் பொறுப்பை ஏற்றார். அதனைத் தொடர்ந்து 1998ஆம் ஆண்டு திரு/ புனித மரியாள் கல்லூரியில் ஆசிரியப் பணி செய்தார். தொழில் கல்வியில் வாண்மைபெற 1999ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப் பின் படிப்பை முடித்துக் கொண்டார்.

2000.04.08ல் யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் பதில் அதிபராகக் கடமைப் பொறுப்பை ஏற்று கல்லூரியின் உயர்வுக்கு வழிகள் பல சமைத்தார். படிப்படியாக வளர்ச்சிப்படிகள் பல பெற்ற அருட்சகோதரி மரிய றொசாறியோ 2012ம் ஆண்டு அதிபர் சேவை 2 II தரத்திற்கு உயர்த்தப்பட்டார்.

எமது கல்லூரியின் வளர்ச்சிப் படிகளை மேல்நிலை அடையச் செய்த அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்கள், 2013ம் ஆண்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப் பட்டம் பெற்று முதன்மை அதிபராக திகழ்ந்தார்.

கோப்பாய் கோட்டத்தில் ஒரே ஒரு மகளிர் கல்லூரியாகத் திகழும் யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் ஒவ்வொரு வெற்றிப் பாதையிலும் அருட்சகோதரியின் பாதச்சுவடுகள் பதிந்து

இருந்ததை அச்சுவேலி மக்கள் மறந்துவிட முடியாது. இவரது தன்னலம் இல்லாத சேவையை பாராட்டி 2014ம் ஆண்டு "பிரதீபா பிரபா" விருதும் கிடைக்கப் பெற்றமை மகிழ்வுதரும் விடயமாக அமைந்தது.

யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் கால் பதித்த அருட்சகோதரி மரிய றொசாறியோ தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும், க.பொ.த (சா/த) பரீட்சையிலும் க.பொ.த (உ/த) பரீட்சையிலும் உயர்ந்த பெறுபேறுகள் பெறுவதற்கு தன்னாலான அளப்பரிய சேவை செய்த, மறக்கமுடியாத அதிபர் ஆவார். இதன் பயனாக 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 2013ஆம் ஆண்டு 17 மாணவர்களும் சித்தி எய்தச் செய்தார். தொடர்ந்து வந்த 2014ம் ஆண்டு 20 மாணவர்களும், 2015ம் ஆண்டு 19 மாணவர்களும் சித்தி எய்த பெரும் ஊக்கம் வழங்கி அப்பெருமையைத் தனதாக்கிக் கொண்டார். அவ்வாறே க.பொ.த (சா/த) பரீட்சையில் 2014ல் 87% சித்தி பெறு பேற்றைப் பெறவும், 2015ல் 85% சித்தி பெறுபேற்றைப் பெறவும் வழி செய்தார். க.பொ.த (உ/த) வகுப்புகளையும் ஊக்குவித்து 2014ல் கலைப்பிரிவில் 70% சித்தி எய்தவும் 2014 வர்த்தகப் பிரிவில் 50% சித்தி பெறவும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.

2015ஆம் ஆண்டு கலைப்பிரிவில் 70% சித்தி பெறவும், அதே ஆண்டில் வர்த்தக பிரிவில் 50% சித்திபெற்று கோப்பாய்க் கோட்டத்திலே உயர்ந்த இடம்பெற்ற மகளிர் கல்லூரியாய் திகழச் செய்தார்.

கல்வியில் மட்டுமல்லாது இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கல்லூரியை உயரச் செய்து கோட்டமட்டத்திலும் வலய மட்டத்திலும் புகழ் பூத்த பாடசாலை ஆக்கிய பெருமை அவரையே சாரும்.

அருட்சகோதரி மரிய றொசாறியோவின் அதிபர் பதவிக் காலத்தில் கல்லூரியின் பௌதீக வளங்களின் அதிகரிப்பையும் ஓங்கச் செய்தார். அந்த வகையில் 2011ம் ஆண்டில் 07 பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டு கல்லூரியுடன் இணைக்கப்பட்டமையும் பெருமை ஆகும். அதே காலத்தை தொடர்ந்து 25 x 90′ நீளமான வகுப்பறைக் கட்டடத் தொகுதி ஒன்று ஆரம்பப்பிரிவு மாணவருக்கு அமைக்கப்பட்டது. 2012ல் திறந்து வைக்கப்பட்டது.

அருட்சகோதரி மரிய றொசாறியோவின் அயராத முயற்சியால் 2013ஆம் ஆண்டு கழிப்பறைத் தொகுதி ஒன்றும், விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றும் திறந்து வைக்க உயர்பணி செய்தார். இவை மட்டுமல்ல அதே ஆண்டில் பழைய மாணவர்சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் உதவிகளை எந்த நேரமும் பாடசாலையுடன் இணைத்து வெற்றி கண்டதன் பயனாக விளையாட்டு மைதானத்திற்கென மீண்டும் ஒரு காணிக் கொள்வனவாக 04 பரப்பு கொள்வனவு செய்து பெருமை சேர்த்தார். 2015ஆம் ஆண்டு அன்னாரின் அயராத முயற்சியின் பயனாக புதிய நூலக கட்டடமும் திறந்து வைக்கப்பட்டது.

இவை மட்டுமல்ல 25 x 80′ நீளம் கொண்ட தற்காலிக வகுப்பறைத் தொகுதி ஒன்றையும் அமைக்க வழி செய்ததோடு, ஆசிரியர்களுக்கான ஓய்வறை ஒன்றை அமைத்து தருவதிலும் மாணவர்கள், ஆசிரியர்களின் மோட்டார், துவிச்சக்கர வண்டி பாதுகாப்புக் கொட்டகைகளை அமைத்தும் ஆசிரியர்கள், மாணவர்கள் மனதில் அழியா இடம்பெற்ற அற்புத அமரர் ஆனார்.

அன்னாரின் அளப்பரிய சேவையின் அளவுகளை பொறுக்காத காலன் அவர் அதிபர் சேவையில் இருக்கும் போதே 08.11.2015ல் அவரை அழைத்து எமையெல்லாம் மீளாத் துயரில் உறைய வைத்தார்.

அமரர் அருட்சகோதரி மரிய றொசாறியோவின் மறைவு கேட்டு உலகமே பேரிருளில் மாண்டது. எமது வீட்டில் இருந்த அன்னையை இழந்த பிள்ளைகள் போல ஆசிரியர்களும் மாணவர்களும் மக்களும் அழுது கூத்தாடி சிறகு இழந்த பறவைகளாய் அழும் விழி நீருடன் கலங்கி நிற்கின்றனர். அன்பான பேச்சும் ஆதரவான உபசரிப்பும் இனி யாரிடம் காண்போம் என ஏங்கி நிற்கின்றோம்.

அமரர் அருட்சகோதரி மரிய றொசாறியோவின் கடந்த காலப் பதிவுகள்.....

மறைந்த அதிபரின் வாழ்க்கை வரலாறு

பிறப்பு 09.03.1956

பெற்றோர் - தோமஸ், சவிரியாச்சி

சகோதரர்கள் - யேசுதாசன், ஜோகவதி றீற்றா, தோமஸ் கிறிஸ்துதாசன் , விஜயவதி றெஜினா

பெயர் - ஆரம்பத்தில் - பத்திமாவதி றொசாறியோ

செல்லப் பெயர் - பத்தி

படித்த பாடசாலைகள் - மன்னார், ஆண்டான் குளம் றோ.க.த.க பாடசாலை, மன்னார் பறப்பான்கண்டல் றோ.க.த.க பாடசாலை, மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி

உயர்தரம் படித்து முடித்தவுடன் பண்டத்தரிப்பில் ஒரு வருடகால தலைமைப் பயிற்சி, அதன் பிற்பாடு அச்சுவேலியில் தலைமைப் பயிற்சி

1976ல் ஆசிரிய நியமனம் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில். அடுத்து 1977ல் மன்னார் அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்திலும் கல்வி கற்பித்தார். அதன் பின்பு ஆசிரியர் கலாசாலை கோப்பாயிலும், பின்பு 06 மாதம் அச்சுவேலி பாடசாலையிலும், அதன் பின்பு மீண்டும் ஆசிரியர் கலாசாலையிலும், மீண்டும் அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்பித்தார். இச்சந்தர்ப்பத்தில் 02 வருட காலங்கள் துறவு முறை எடுத்து 1983ல் இந்தியா சென்று தனது துறவற வாக்குத்தத்தத்தை மேற்கொண்டார். 1986ல் கார்மேல் சபை கன்னியாஸ்திரியாக இலங்கை வந்தார். மீண்டும் அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்தில் கற்பித்தல் பணியை மனைப்பொருளியல் பாடத்துடன் ஆரம்பித்து பாடசாலையில் பல பணிகளிலும் பங்குப் பணிகளிலும் போர்க்கால சூழ்நிலையிலும் தன் பணியை திறம்பட மேற்கொண்டார். பின்பு கலைப்பட்டதாரி பட்டத்தை பெற்றார். அதன் பிற்பாடு பதுளை தமிழ் மகாவித்தியாலயத்தில் கற்பித்தல் பணியை மேற்கொண்டார். கல்வி டிப்ளோமா கற்கைநெறியை கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்து தொழில் தகைமை பெற்றார். பின்பு திருகோணமலை புனித மரியாள் பாடசாலையில் பணியாற்றினார் மீண்டும் 2000ம் ஆண்டில் யுத்த காலத்தில் யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் அதிபராக கடமையை பொறுப்பேற்றார்.

குடும்பத்தினர்

க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்

பாடங்கள்	சித்தியடைந்தோர் வீதம்		
	2012	2013	2014
சைவம்	100%	100%	94%
றோமன் கத்தோலிக்கம்	100%	100%	97%
தமிழ்மொழி	86%	99%	69%
ஆங்கிலம்	20%	38%	22%
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	64%	77%	40%
கணிதம்	64%	74%	43%
வரலாறு	48%	72%	68%
சங்கீதம்	93%	100%	100%
நடனம்	100%	100%	100%
புவியியல்	81%	100%	100%
சுகாதாரம்	94%	100%	81%
மனைப்பொருளியல்	77%	100%	87%
வர்த்தகம்	86%	100%	89%
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	91%	100%	86%
நாடகமும் அரங்கியலும்	100%	100%	98%
குடியுரிமைக்கல்வி	50%	100%	30%
க.பொ.த (சா/த) தோற்றிய மாணவர் தொகை	50	56	81
க.பொ.த(உ/த) தகுதி பெற்றோர்	32	41	35
க.பொ.த (உ/த) தகுதி பெற்ற சத வீதம்	64%	73.2%	43%

எமது ஆசிரியர் குழாம்...

க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள்

பாடங்கள்	சித்தியடைந்தோர் வீதம்				
	2012	2013	2014	2015	2015
தமிழ்மொழி	95%	97%	87%	87%	87%
இந்துநாகரீகம்	100%	100%	100%	100%	100%
கிறிஸ்தவ நாகரீகம்	100%	100%	100%	100%	100%
புவியியல்	67%	95%	78%	78%	78%
வரலாறு	87%	100%	-	-	-
மனையியல்	-	100%	-	100%	100%
நடனம்	-	100%	-	100%	100%
சங்கீதம்	100%	100%	-	100%	100%
நாடகமும் அரங்கியலும்	100%	100%	100%	100%	100%
பொருளியல்	50%	40%	75%	50%	50%
கணக்கீடு	-	40%	75%	75%	75%
வணிகக்கல்வி	100%	80%	50%	75%	75%

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை

2012

சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை	-	10
உயர்புள்ளி	-	191

செல்வி வைஸ்ணவி யோகநாதன்

2013

சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை	-	17
உயர்புள்ளி	-	176

செல்வி சுபானுசா திவாதரன்

2014

சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை	-	20
உயர்புள்ளி	-	184

செல்வன் யோகேஸ்வரசர்மா சஞ்சுதன்

2015

சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை	-	19
உயர்புள்ளி	-	183

செல்வன் ஆனந்தராசா துசான்

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள்

2012

செல்வி கெ. ஜொய்சிலின் நிவேதா

செல்வி மு. கஜேந்தினி

2013

செல்வி த.தனுசியா

2014

செல்வி வே. கிருஸ்ணவி

செல்வி கு. பிரவீனா

பாடசாலை ஆசிரிய ஆளணியினர் - 2016
இடைநிலைப் பிரிவு ஆசிரியர்கள்

இல	ஆசிரியர் பெயர்	கல்வித் தகைமை/தொழில் தகைமை
01	Sr.மரிய ஜீவந்தி A.C	Dip – in – Edu
02	திருமதி சு.மகேஸ்வரதாசன்	விசேட பயிற்சி விஞ்ஞானம் (A/L)
03	திரு.பொ.சகலகலாநிதி	பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி (A/L)
04	திருமதி கு.குமரகுருபரன்	விசேட பயிற்சி விஞ்ஞானம் (A/L)
05	திருமதி வேல்சுலோயினி முகுந்தன்	விசேட பயிற்சி ஆங்கிலம்
06	திருமதி சந்திரா தயாபரன்	விசேட பயிற்சி சங்கீதம் (AL)
07	திருமதி உமாதேவி யோகநாதன்	விசேட பயிற்சி சங்கீதம் (AL)
08	திருமதி தயாநிதி திருக்குமரன்	B.A, Dip – in – Edu
09	திருமதி சிவகௌரி ஐங்கரன்	தேசிய கணித டிப்ளோமா
10	திரு.பொன்னுத்துரை சிவநஞ்சன்	B.Sc, Dip – in – Edu
11	திரு.சரவணமுத்து கருணாகரன்	B.A, Dip – in – Edu
12	திருமதி விஸ்னுகுமாரி நக்கீரன்	BFA, Dip – in – Edu
13	திரு.ஜெ.ஜெயதரன்	பயிற்றப்பட்டஆரம்பப் பிரிவு (A/L)
14	செல்வி.சு.முத்துலிங்கம்	விசேட பயிற்சி மனைப்பொருளியல்
15	திருமதி ச.மதியரசன்	பொதுக் கலைப்பட்டதாரி
16	திரு.S.ஜெனார்த்தனன்	B.Com
17	திரு.செ.லதீசன்	கற்பித்தலில் தேசிய டிப்ளோமா கணிதம்
18	திரு.தெ.ஈஸ்வரன்	கலைப்பட்டதாரி நூலகம்
19	திருமதி த.ஐங்கரன்	வர்த்தகப்பட்டதாரி
20	திருமதி ம.கமலநாதன்	பயிற்றப்பட்ட இந்துசமயம் (A/L)

21	திருமதி ந.சுஜிந்தன்	தேசிய டிப்ளோமா நடனம்
22	திருமதி மீராமனோகரன்	B.Com (டிப்ளோமா)
23	திருமதி மே.தயாபரன்	விசேட பயிற்சி விஞ்ஞாளம் (A/L)
24	திருமதி வி.ஜெகதீஸ்வரன்	கலைமாணிப் பட்டதாரி
25	செல்வி தயாளினிஅன்னலிங்கம்	பயிற்றப்பட்ட ஆங்கிலம் (A/L)
26	திருமதி தி.விமலநாதன்	வர்த்தகப் பட்டதாரி.
27	திருமதி சி.ஜெயராம்	B.F.A
28	திருமதி சி.நந்தகுமார்	B.Com
29	திரு.சி.சேரரூபன்	பயிற்றப்பட்ட ஆங்கிலம்
30	திருமதி த.கேமலதாஸ்	B.A, Dip – in – Edu
31	திருமதி அ.சுந்தரச்செல்வன்	B.A, Dip – in – Edu
32	திரு.இ.ஸ்ரீகரன்	Bio Science , Dip – in – Edu
33	தி.க.கனகராசா	பயிற்றப்பட்ட உடற்கல்வி
34	திரு.அன்ரன் கிருபைநாயகம்	B.A Dip – in – Edu

ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் - 2016

இல	ஆசிரியர் பெயர்	கல்வித் தகைமை/தொழில் தகைமை
01	திருமதி சி.தங்கராசா	பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி (A/L)
02	திருமதி T.தேவராஜா	பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி (A/L)
03	செல்வி ம.யோகராணி	பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி (A/L)
04	திருமதி க.செந்தில்வேல்	பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்லி (A/L)
05	திருமதி சு.இராஜவரஉதயம்	பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி (A/L)
06	திருமதி ச.ஜெயக்குமார்	கற்பித்தலில் தேசிய டிப்ளோமா ஆரம்பக்கல்வி
07	திருமதி கௌரி சுபீஸ்கரன்	பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி (A/L)
08	திருமதி பி.இந்திரதேவன்	பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி (A/L)
09	திரு.க.தெய்வீகன்	கற்பித்தலில் தேசிய டிப்ளோமா ஆரம்பக் கல்வி
10	திருமதி ற.ஸ்ரீஸ்கந்தராஜா	பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி (A/L)
11	திருமதி ச.குணசிங்கம்	B.A
12	திருமதி ஜெ.மயில்வாகனம்	பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி (A/L)
13	திருமதி சாந்தினி வியவரதன்	BEd
14	திருமதி உ.பாலசுப்பிரமணியம்	பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி
15	திருமதி யா.பாலேந்திரன்	ஆரம்பக்கல்வி, தேசிய டிப்ளோமா

கல்விசாரா ஊழியர்கள்

இல	ஆசிரியர் பெயர்	கல்வித் தகைமை/தொழில் தகைமை
01	திருமதி அ.கேதிஸ்வரநாதன்	ஆய்வுகூடப் பணியாளர்
02	செல்வி ம.பிரிந்தா	பாடசாலைப் பணியாளர்
03	திரு.ஆ.விநாயகவேல்	பாடசாலைப் பணியாளர்
04	திரு.க.பஞ்சமூர்த்தி	காவலாளி

கற்றனைத்தூறும் அறிவு

பா.திலக்ஷனா

அறிவு எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதது. மனித வாழ்வு அறிவையும், உணர்வையும் அடிப்படையாகக் கொண்டமைந்தது எனலாம். அதன்வழி பொறிகளில் உணர்ச்சியும், புலன்களால் அறிவும் அடையப்படும். அந்த அடிப்படையில், உணர்வையும் அறிவையும் வளர்க்கும் கருவியாகவே கல்வி திகழ்கிறது. அறிவு என்பது பகுத்தறிவு, சிந்தனை, சீர்தூக்கல், துணிவு போலப் பல வகைப்படும்.

அறிவைப் பெறுவதற்கு உறுதுணையாக அமைவதே கல்வியாகும். பல நூல்களைக் கற்பதன் வாயிலாகவே கல்வியைப் பெறமுடியும். இதன் அர்த்தம் எல்லா நூல்களையும் மேலோட்டமாக கற்பது என்பதல்ல. கற்கத் தகுந்த நல்ல நூல்களை ஆராய்ந்து ஐயம் திரிபற கற்க வேண்டும்.

அறிவும் உணர்வும் ஒவ்வோர் உயிர்க்கும் இன்றியமையாததாய் இருப்பதால் அவ்விரண்டும் ஒன்றுடனொன்று தொடர்புற்றுக் காணப்படுகிறது. எனவே கற்கின்ற அளவுக்கேற்ப மக்களின் அறிவு வளர்ச்சியடைந்து செல்லும். இதனையே வள்ளுவப் பெருந்தகை

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு" எனக் குறிப்பிடுகிறார்.

நிலத்தை தோண்டத் தோண்ட நீர் ஊற்றெடுப்பது இயற்கை. அந்தத் தன்மையைப் போன்றே, மக்களும் கற்க கற்க அறிவு பெருகிக் கொண்டே செல்லும் என்பது பொய்யாமொழிப் புலவனின் துணிபு.

நல்லறிவானது கல்வியில் வளர்ச்சியடையும். இந்நல்லறிவை அடைய நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து தொடர்ந்து கற்க வேண்டும். அதுவே உண்மையான அறிவைத் தரும். 'உண்மை அறிவே மிகும்" எனும் அடிகள் இதனையே எமக்குப் புலப்படுத்தி நிற்கின்றன. அறிவை வளர்ப்பதற்கு கல்வியும் கேள்வியும் வேண்டப்படுவன. கற்றல் என்பது பயிற்சியை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைகின்றது. இங்கு பயிற்சி என்பது பல நூல்களை கற்றுத் தேறுவதைக் குறிக்கிறது. எனவே தான்,

"நுண்மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம்
மண் மாண் புனை பாவையற்று"

என வள்ளுவர் குறிப்பிடுகிறார். எல்லா வகையான அழகுகளிலும் பார்க்க ஆராய்ந்தறிந்து நல்ல பல நூல்களைக் கற்றதே உண்மையான அழகாக அமையும் என்பதே இதன் அடிப்படை.

தாயின் மனதையும் திரியவைக்கும் கல்வியை நாம் சாதாரணமாக அடைந்துவிட முடியாது. கல்வியை எவ்வாறு கற்க வேண்டும் என்பதை புறநானூற்றுப் பாடலடிகள் கோடு காட்டி நிற்கிறது.

"உற்றழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்பதே புறநானூற்று அடிகளாகும். கல்வி பற்றி பழந்தமிழர் என்ன கருதினர் என்பதற்கு இப்பாடலடிகள் நல்லதோர் எடுத்துக்காட்டு. ஆசிரியருக்கு வேண்டிய நேரத்தில் உரிய உதவிகளை செய்தும், தேவையேற்படின், மிக்க பொருளைக் கொடுத்தும், இழப்போ வருத்தமோ ஏற்படின் அந்நிலைகளைக் கண்டு வேறுபடாது முயற்சியுடன் கற்பதே சிறப்பானது என இவ்விரு பாடலடிகளும் தெளிவுறுத்துகின்றன.

நாம் வெறுமனே கற்றுவிடுவதால் மாத்திரம், எமது அறிவு மிகும் எனக் கொள்ளமுடியாது. கற்றவற்றை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க, அதிலுள்ள சந்தேகங்கள் நீங்கி உண்மை அறிவு தெளிவுறும் கிணற்றிலிருந்து நீரை அள்ளி இறைக்க இறைக்க நீர் ஊற்றெடுப்பது போல கொடுப்பதற்கேற்ப எமது அறிவு வளர்ச்சியடைந்து செல்லும் என்பதே நூலோர் கண்ட உண்மை.

நல்ல நூல்களைக் கற்றுத்தேறுவதன் மூலமே நல்ல கருத்துக்களையும் - அறிவுபூர்வமான சிந்தனைகளையும் சமூகத்துக்கு வழங்கமுடியும். நவீன சமூக உணர்வில் நூலகத்தின் அவசியப் பாட்டால் எழும் இக் கருத்து நிலை சங்கச் செய்யுளிலும் மிளிர்வதை நாம் காணலாம்.

"நுண்ணூல் தடக்கையின் நாமரிப்பாக

வெல்லும் வாய்மொழிப் புல்லுடை விளைநிலம் பெயர்க்கும் பண்ணன்"

நூலறிவே கையாகவும், தனது செம்மையான நாவே மருப்பாகவும், வெல்லும் வாய்மொழிப் புலவர்களுக்கு வரம்பிற் புல்மரிந்த விளை நிலங்கள் அளிக்கும் பண்ணன் எனப் புலவர் குறிப்பிடுகின்றார். "நுண்ணூல்" "வாய்மொழி" என்னும் சொற்றொடர்கள் அக்காலத்தில் கற்ற புலவர்கள் நுண்ணறிவை வளர்க்கும் நூல்களைக் கற்றதினாலே "அறிவுடையார் ஆவதறியார்" என்னும் முதுமொழிக்கிணங்க, வெற்றியைத் தருவதான நல்ல கருத்துக்களையே அவர்களின் வாய் கூறும். இது நல்ல நூல்களைக் கற்தனால் அறிவு மிகும் என்பதை எமக்கு கோடிட்டுக் காட்டுகிறது.

மனிதர் தேடிப்பெறக்கூடிய எல்லா வகைச் செல்வங்களிலும் மேலானது கல்விச் செல்வ மாகும். எனவே "பிச்சை புகினும் கற்கை நன்றே" எனும் முதுமொழிக்கிணங்க, பிறரிடம் இரந்து பிச்சையெடுத்தாவது கற்றல்வேண்டும். அந்தக் கல்வியால் கிடைக்கப் பெறும் அறிவு வெள்ளத் தாலும் நெருப்பாலும் அழியாதது. கள்வராலோ, பகைவராலோ, அரசராலோ கவர்ந்து செல்ல முடியாதது. கல்வியினால் அறிவு வளரும். கல்வியை எவ்வளவுக்கு எவ்வளவு கற்கின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு அறிவு பெருகும்.

அறிவுடையோரே வாழ்க்கையில் முன்னேற்றமடைவர். ஏழைகளாயினும் கீழோராயினும் கற்றவனுக்கே முதலிடம். அரசர்களுக்கு அவர்களின் நாட்டில் மட்டுந்தான் மதிப்பு. ஆனால் கற்றோனுக்கு சென்ற இடமெலாம் சிறப்பு. எனவே தான், "அறிவுடையோரே ஆளுதல் வேண்டும்" அறிவுடைமையே பண்பும் இன்பமுமாகும்." எனும் கருத்துக்கள் நம் பண்பாட்டில் வெகு ஆழமாகப் பதிந்துள்ளன.

"நீரளவே யாகுமாம் நீராம்பல் தான் கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம்" என்பது ஔவையார் வாக்கு.

நாம் கற்கின்ற நூல்களின் அளவிற்கேற்பவே எமது அறிவு மிகும் என்பதையே ஔவைப் பிராட்டி இப்பாடலில் "நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு" எனும் அடிகளூடாக தெளிவுபடுத்து கிறார். 'ஓதுவதொழியேல்', "கண்டதும் கற்க பண்டிதனாவான்", 'கேள்வி முயல்', 'நூல் பல கல்' எனும் அடிகள் கற்றலின் அவசியப்பாட்டை எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

எமது வாழ்நாட்கள் மிகச் சிலவாகும். அதன் காரணமாக, எமது வாழ்க்கையை நல்வழிப்படுத்துவதற்கு நல்ல பல நூல்களை தேர்ந்தெடுத்து கற்கவேண்டும். இந் நூலறிவின் மூலமே எமது வாழ்வை செம்மையாக நடத்திச் செல்லமுடியும்.

"கல்வி கரையில் கற்பவர் நாள் சில
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந்த அமைவுடைய கற்பவே நீரொழிய பாலுண் குருகின் தெரிந்து"

என்பது நாலடியார் பாடலடிகள். கல்விக்கு அளவில்லையாதலாலும், அதனைக் கற்பவரின் வாழ்நாட்கள் மிகச் சொற்பமானவையாகவே காணப்படுவதாலும், சற்று நிதானமாக சிந்தித்தால் அச்சில வாழ்நாட்களிலும் பிணிகள் பலவிருப்பதாலும் நீரும், பாலும் இருக்குமிடத்து நீரைவிட்டு பாலை மட்டும் குடிக்கும் அன்னப் பறவை போல பொருத்தமுடைய நூல்களை தேர்ந்தெடுத்து, அவற்றை தெளிவாக ஆராய்ந்து கற்பதே நமக்குப் பொருத்தமாக இருக்கும். அதுவே நமது அறிவை பெருக்குவதற்குரிய வழியுமாகும்.

உசாத்துணை நூல்கள் - தமிழ்க்கட்டுரைகள் (Google)

வாசமலராய் சில துளிகள்.....

திருமதி ச.மதியுரசன்
ஆசிரியர்.

மன்னார்ப் பதி செய்த மாதவத்தின் பேறெனவே
மண்ணுலகும் விண்ணுலகும் மாண்புறவே அவதரித்தீர்
மாதாவாம் மரியன்னையவர் நாமத்தை முதற்கொண்டே
மரிய றொசாறியோ என்னும் நல் நாமம் தனைப்பெற்றீர்

கல்லூரிக் கல்வியதைக் கற்றுணர்ந்து தேறிய பின்
கவனமெல்லாம் இறைபணியிற் செலுத்தியே - நீர்நல்ல
கன்னியரின் அறவாழ்வில் களிப்புடனே சங்கமித்தீர்

அன்பும் எளிமையும் பொறுமையும் தாழ்ச்சியும்
இன்பமுடன் அணிகளென நீர் அணிந்து உம்மிடத்தில்
துன்பமென்று வந்தவரை துயரகற்றி வாழவைத்தீர்
அச்சுநகர் அன்றொரு நாள் ஆனந்தம் கொண்டிடவே
இச்சையுடன் அன்னையவள் இறைபணிப்பாய் வந்தமர்ந்தார்.

வெள்ளுடையை உடுத்தியதால் நீர் சிறப்புப் பெறவில்லை
உமக்கணிந்த காரணத்தால் உடை சிறப்புப் பெற்றதம்மா

ஏழையென்னும் செல்வமென்றும் எந்தவொரு பேதமின்றி
நாளைய நம் சந்ததிதான் நலம் பெறவே உழைத்திட்டீர்
வாழையடி வாழையென நீர்வளர்த்த சந்ததியும்
வேளையொன்று பொழுதொன்றாய் வரைந்தே வளர்ந்ததம்மா

அன்போடு கண்டிப்பும் அரவணைப்பும் கொண்டவரே
உன்பணிபோல் அதிக நாள் யார்பணியும் நிலைத்ததில்லை.

தெளிவான சிந்தனையும் திருத்தமிகு முடிவுகளும்
வழிகாட்டல் ஆலோசனை வல்லமையும் ஒருங்கு பெற்றீர்
எழில்வதனப் புன்னகையை தேடுகின்ற எங்களது
வழியோரம் கசிகிறது விரிந்த உந்தன் அன்பாலே

சிகரம் தொடத் துடித்து சிறப்பான பணி செய்தீர்
சிந்திக்கும் நேரமெல்லாம் சிரித்த முகம் தோன்றுதம்மா

சீர் கல்வியோடு சிறப்பான விளையாட்டில்
பார்போற்ற மாணவர்கள் பதிவாக வேண்டுமென்று
யார் மூலம் என்றாலும் நன்மைகளைப் பெற்றளித்து
ஊர்மகிழ உழைத்தவரை உளம் மறந்து போகாது.

மாணவர்கள் மாண்பு பெற மகிழ்வுடனே நீர் உழைத்தீர்
மகத்தான ஆசிரியப் பணியதனை மிளிர வைத்தீர்
மண்ணுலகில் நாமிருக்கும் காலம் வரை உங்களை
மறந்திடவே முடியாது மதிப்புடைய தாயே

உங்களால் வாழ்வு பெற்ற மாணவர்கள் ஏராளம்
உங்களால் வாண்மை பெற்ற ஆசிரியர் ஏராளம்
உங்கள் கடிதம் எல்லாம் எங்களது உயர்வுக்கென
உம் பிரிவின் பின் உணர்ந்தோம் உயிர் மிக வலிக்குதம்மா

புகழுடையார் இறப்பதில்லை
புண்ணியங்கள் அழிவதில்லை
பூமியுள்ள காலம் வரை நிலைத்திடுமே உம்சிறப்பு
போய் வருக எம் தாயே

பாச நினைவுகளை பத்திரமாய் வைத்திருப்போம்
எம் இதயப் பொக்கிசத்தில்
நினைவுகள் உள்ளவரை
பிரிவுகள் உண்மையில்லை.

உம் அன்புச் சோதனையின்
உதவிக் கரம் பற்றி
உம் பாதச் சுவடுகளில் தடம்பதித்து நாமிங்கு
எம் பயணம் தொடர்ந்திடுவோம் உறுதியிது தானே

திருமதி.மதுரா கமலநாதன்
ஆசிரியர்.

விதியைப் பற்றிய உண்மைகள்

திருமதி.மதுரா கமலநாதன்
ஆசிரியர்.

நீங்கள் பிறப்பு, இறப்பு, மறுபிறவி இவற்றை நம்புகிறீர்களா? நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும் உண்மையும் அதுதான்! உங்கள் விதிக்கும் மறுபிறவிக்கும் தொடர்பு உள்ளது. இந்த வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் கஷ்டங்கள், கெடுதல்கள் எல்லாமே நாம் முன்ஜென்ம அல்லது பல ஜென்மங்களில் நாம் வாழ்ந்தபோது செய்த பாவங்களின் பலன்கள்தான். முற்பிறவிகளில் புண்ணிய காரியங்கள் செய்திருந்தால் அவற்றிற்கான நல்ல பலன்களை, சுகங்களை இப்பொழுது அனுபவிக்கலாம்.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

இந்த ஊழ்வினைப் பயனைத்தான் 'Doctrine of Karma' என்று கூறுகிறார்கள். இந்த கர்ம வினைகளைப் பற்றி நாம் தெரிந்து கொண்டால். இந்த விதிப்பயன், கர்மவினை இவற்றை நாம் கட்டுப்படுத்த இயலும். நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும் நமது ஒவ்வொரு செய்கை யும் நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் நமது கர்மாவை அனுசரித்தே இருக்கிறது. நாம் பிறக்கும் போதே சில கர்மவினைகளையும் நம்முடன் கொண்டு வந்து விடுகிறோம். இந்த கர்ம வினை களை ஒரு சமநிலைப்படுத்தாத வரை அவை ஒவ்வொரு ஜென்மத்துக்கும் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். நாம் இந்த ஜென்மத்தில் வாழ்க்கையில் முன்னேறவேண்டுமானால் முன் ஜென்ம வினைகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். இவ் வினைகளை இந்த ஜென்மத்திலேயே தீர்த்து விட வேண்டும். இந்தக் கர்மவினைகளிலிருந்து விடுதலைபெற முக்கியமான சில உண்மைகளை தெரிந்து கொள்வது நல்லது.

"ஊழையும் உப்பக்கம் காண்பர்
உலைவின்றித் தாழாது உளுற்று பவர்"

என்ற வள்ளுவரின் வாக்குப்படி உங்கள் விதியை மனதின் தெளிவான உறுதியான சக்தி யால் மாற்றிக் கொள்ளலாம். இறைவனால் இத்தகைய அனுமதி உங்களுக்கு கொடுக்கப்பட் டுள்ளது. உதாரணமாக ஒரு பீங்கான் தட்டு மேஜையில் இருந்து விழுகிறது. அது தரையில் மோதுகிறது. அது உடனே உடைகிறது. இது இயற்கையாக நடக்கக்கூடியது. ஆனால் நாங்கள் உஷாராக இருந்து அந்தத் தட்டு கீழே விழப்போகிறது என்று தெரிந்தால் அந்தத் தட்டு கீழே தரையில் விழும்போது கையில் பிடித்துக்கொள்ளலாம் அல்லது அதைத் திருப்பிவிட்டு அதை மெதுவாக விழச் செய்து அதிகம் உடையாதபடி செய்யலாம். இது போலவே உங்கள் கர்மாக்களை மாற்றிக் கொள்ளலாம்.

எப்படி எமது கெட்ட கர்மாக்கள் (வினைகள்) நம்மை பலவீனமடையச் செய்யும் என்பதை ஓர் உதாரணத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். பிசிக்ஸ் (Physics) பாடத்தில் ஒரு துருவத்தி லிருந்து வரும் சப்த அலைகள் செயல்படாதிருக்க வேறு ஒரு துருவத்திலிருந்து வரும் சப்த

அலைகளை எதிராக அதன் மேல் பாச்சும்போது அந்த சப்த அலைகள் பலமிழந்து போய் வருகிறது என்று தெரிந்திருப்பார்கள். இது போலவே நாம் நமது எண்ணங்கள், செயல்பாடுகள், நோக்கங்களை மாற்றிக் கொண்டோமானால் இந்த கெட்ட கர்மாக்களை செயலிழக்கச் செய்து விடலாம். உதாரணமாக வெறுப்பு, எதிர்ப்புத் தன்மைகளை வெல்ல நாம் அன்பையும், அமைதி யையும் கடைப்பிடிக்கலாம்.

உங்கள் மனதின் ஓட்டமும், நீங்கள் எப்படி உங்களைப் பார்க்கிறீர்கள் என்பதையும் பொறுத்து உங்களைச் சுற்றி இருக்கும் உலகம் உங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தன்மை உடையதாக இருக்கிறது.

உங்களது எண்ணங்களை, நோக்கங்களை மாற்றிக் கொண்டால் நீங்கள் நிச்சயம் உங்கள் எதிர்காலத்தையும் விதியையும் மாற்றிக் கொள்ளமுடியும். ஒவ்வொரு விளைவுக்கும் ஓர் எதிர் விளைவு இருக்கிறது. ஒவ்வொரு செய்கைக்கும் பலன் இருக்கிறது. நல்லதோ கெட்டதோ அதைச் செய்வது உங்களது விருப்பம் தான். இதுதான் கர்மாவைத் தொடர்பு கொள்ளக்கூடியதாகும். நல்ல எண்ணங்கள், நல்லவற்றையே விரும்புவது செய்வது ஆகியவை இயற்கையின் நியதிக்கு உட்பட்டவையே. ஆகவே நீங்கள் உங்கள் கெட்ட அதிஷ்டத்தை நல்ல அதிஷ்டமாக மாற்றிக் கொள்வதும் மேலும் உங்களது விதியை கட்டுப்படுத்தவும் வேண்டிய சக்திகள் எல்லாம் உங்களிடம் தான் இருக்கிறது. வேறு யாரிடமும் இல்லை. சுருங்கச் சொன்னால் "உங்கள் வாழ்க்கை உங்கள் கையில்!

இப்போது முதல் நான் யாருக்கும் கெடுதல் செய்யவோ கெடுதல் நினைக்கவோ மாட்டேன் என்று ஒரு சபதம் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த சபதத்தைச் செய்து கொள்ள நீங்கள் தவறினால் யாராலும் உங்களுக்க உதவமுடியாது. துர் அதிஷ்டந்தான் உங்களைத் தொடரும்.

ஒவ்வொருவருடனும் அன்புடன் பேசிப் பழகுங்கள். அவர்கள் சொல்கிற நல்ல கருத்துக் களை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றதை விட்டு விடவும் அவர்கள் எவ்வளவு கெட்டவரானாலும் கூட அவரும் ஒரு நல்ல விஷயத்தைச் செல்லலாம் அல்லவா?

சுயநலமில்லாது இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். யாரையும் உங்களுக்கு மேலாகவே வைத்து நல்லெண்ணத்தை எண்ணுங்கள். "குணநலம் சான்றோர் நலனே" அதன்படி கெட்ட செயல்களுக்கு எதிராக நல்லதையே நினைத்து நல்லதையே செய்யுங்கள். யாரையும் ஏமாற்றவோ கெடுதல் செய்யவோ எண்ணாதீர்கள்.

எப்போதும் உண்மையே பேசுவது என்று உறுதி எடுத்து செயற்படுங்கள். பகைமை உணர்வை அன்பால் மாற்றுங்கள். கஞ்சத்தன்மையை விட்டு தாராளமானவராக இருக்கவும். கொடுமையை அமைதியுடன் எதிர்கொள்ளுங்கள். உங்களது உள்ளக் கிளர்ச்சிகளை ஒதுக்கி விட்டு நல்ல படியாக வாழ எண்ணுங்கள். எல்லா மனிதர்களையும் நேசிக்கவும். இதனால் உங்களுக்குப் பல நன்மைகள் ஏற்படும் நீங்கள் ஓர் அறைக்குள் போகும்போது முதலில் உங்கள் பின்னால் இருப்ப வரை முதலில் போகவிட்டு நீங்கள் போகவும். மற்றவர்கள் உங்களுடன் பேசும்போது அவர்கள் பேசுவதை உன்னிப்பாக கவனியுங்கள். நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதைத்தான் அறுவடை செய்கிறீர்கள்.

ஆகவே நல்லதையே எண்ணுங்கள். நல்லதையே செய்யுங்கள். எம்முடைய நன்மை தீமைக்கு காரணம் நாங்களேதான் இவ்வாறாக நாம் நல்லபடியே எண்ணிச் செயற்பட்டால் கெட்ட விதியினைக் கூட நல்லபடியாக மாற்றிக் கொள்ளலாம்.

இலத்திரனியல் வங்கிமுறை Electronic Banking

வே.ஐந்துஜா
தரம் 13 வர்த்தகப் பிரிவு.

நிதிமுறைமைக்குள்ளே செயற்படும் வங்கி, வங்கியல்லாத நிதிநிறுவனங்களின் சேவைகள் இக்காலத்தில் இலத்திரனியல் முறையில் இடம்பெறுகின்றது.

இலத்திரனியல் பணமாற்றம் ELECTRONIC FUNDS TRANSFER

இலத்திரனியல் தொகுதி ஒன்று அல்லது தொலைபேசி, கணனி அல்லது காந்தப்பட்டி மூலமாக எவ்விதமாகவோ பண அசைவு இலத்திரனியல் பணமாற்றமாகக் குறிப்பிடப்படும்.

(ELECTRONIC FUNDS TRANSFER IS ANY MOVEMENT OF FUNDS BY MEANS OF AN ELECTRONIC TERMINAL, A TELEPHONE, A COMPUTER, OR A MAGNETIC TAPE) குறித்த பண அளவு ஒரு கணக்கிலிருந்து குறைத்து (வரவுவைத்து) வேறு கணக்கில் சேர்த்தல் (செலவு வைத்தல்) கட்டளை இந்த முறையின் கீழ் இலத்திரனியலால் நிகழ்த்தப்படுகின்றது. விற்பனை சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு செய்தல், இல வங்கிமுறை போன்ற சந்தர்ப்பங்களிலேயே பெரும்பாலும் தன்னியக்க வங்கி இயந்திரம் மூலமாகவே (ATM) இடம்பெறும்.

❖ தன்னியக்க வங்கி முறை இயந்திரம் (AUTOMATED BANKING MACHINES. (ABM)

இது AUTOMATED TELLER MACHINE = ATM எனவும் குறிப்பிடப்படும். பணத்தைப் பெற்றுக்கொள்ளுதல், வைப்புக்களைப் பொறுப்பேற்றல், பரீட்சை மீதியிலிருந்தும் ஒரு கணக்கிலிருந்தும் மற்றொரு கணக்குக்கு பணமாற்றம் செய்தல் என்பன இந்த இயந்திரத்தின் மூலமாக இலத்திரனியல் முறையில் செய்யமுடியும். ABM சேவை ஒருநாளில் 24 மணிநேரமும், உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. INTERAC, PLUS போன்ற உலகம் பரந்த ABM வலையமைப்பு இன்று நடைமுறையில் உள்ளது. விரைவாக விருத்தியடைந்து வரும் வாடிக்கையாளருடைய பெரும் அங்கீகரிப்புக்கு உள்ளாகி இருப்பதால் ABM இயந்திரங்கள் ஆயிரக்கணக்கில் உலகம் முழுவதிலும் நிறுவப்பட்டு உள்ளது. உலக வியாபக ஓய்வில்லாத மூடப்படுவதில்லாத வங்கிமுறையாக இது குறிப்பிடப்படுகின்றது.

❖ விற்பனை நிலையத்தில் கொடுப்பனவு முறை POS = POINT - OF - SALE SYSTEM

கொள்வனவு இடம்பெற்ற சந்தர்ப்பத்திலேயே வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கிலிருந்து நேரடியாக பணத்தை வசூலித்துக் கொள்ளும் வாய்ப்பு POS முறையின் கீழ் வணிகருக்கு உரித்தாகிறது. பெரும்பாலான வியாபார நிலையங்களில் பணஎண்ணல் பீடத்திற்கு அருகாமையில் இந்த முறை செயற்படும் அமைப்பினைக் காணமுடியும். கொள்வனவின் ரூபாய்களுக்குரிய வரவுத்தாள் DEBIT CARD அல்லது சிலவேளைகளில் ABM CARD அட்டை இந்த அமைப்பு அல்லது இலத்திரனியல் உபகரணத்துக்குள் புகுத்தப்பட்டு (SLIDE) உரிய தொகை தனது வங்கிக் கணக்கிலிருந்து குறைத்து (வரவு) வியாபார உரிமையாளருடைய வங்கி கணக்கில் சேர்க்கப்படும் (செலவு) இது தொடர்பில்

போதுமான பணம் வாடிக்கையாளருடைய வங்கிக்கணக்கில் இருத்தல்வேண்டும். இரு தரப்பினருக்கும் இந்தமுறை அனுகூலமாகும். உடனடியாக நிதியை அணுகமுடியும். காசோலைகளுக்கு ஏற்படும் செலவு மீதமாகின்றது. நேரம் மீதமாகின்றது. காசோலை சிலவேளை மதிப்பிழப்புக்கு உள்ளாகின்றது. வரவுத்தாள் மூலமாகக் கொடுப்பனவு செய்யும்போது இவ்வாறான நிலை தோன்றமாட்டாது.

❖ இல்ல வங்கிமுறை HOME BANKING

இன்ரநெற், தனிப்பட்ட வங்கிமுறையும் தொலைபேசி வழியும் ஊடாக நுகர்வோருக்கும், வியாபாரிக்கும் தனது வீட்டில் இருந்தவாறே 24 மணித்தியாலங்களும் வங்கிக் கருமங்களைச் செய்யவேண்டிய வாய்ப்பு இன்று வந்துள்ளது. இது வலையமைப்புக்குச் சமனாகும். கொள்வனவும், விற்பனையும் வெப்தளம் ஊடாக நிகழ்த்தப்படமுடியும். இதன்மூலம் வாடிக்கையாளருக்கு தனது வங்கிக்கு செய்து கணக்கிலிருந்து, கொடுப்பனவு செய்தல், பணத்தை ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு மாற்றுதல், மீதியைப் பரீட்சித்தல் கணக்கு விபரங்களைப் பரிசோதனை செய்தல்முடியும்.

WITH THE ADVENT OF THE INFORMATION SUPER HIGHWAY THE BANKING OF TOMORROW IS ALREADY IN SOME HOMES TODAY.

❖ டெலி வங்கி முறை TELE BANKING

வீட்டில் அல்லது நிறுவனத்திலிருந்து தொலைபேசி மூலமாக வங்கிக் கருமங்களைச் செய்தல் டெலிவங்கிமுறை ஆகும். இந்த முறையினால் மின்சாரப்பட்டியல், தொலைபேசிப் பட்டியல் அல்லது வேறுவிதமான கொடுப்பனவுகளை தொலைபேசியைப் பயன்படுத்தி தமது வங்கியில் அல்லது நிதிநிறுவனத்தினூடாக பேணிவரும் கணக்கினூடாக கொடுப்பனவுகளைச் செய்யும் முறை. இந்த வசதியை அனுபவிக்க தன்னியக்கமாக நிறைவேற்றும் தொழில் நுட்பம் வங்கியிலும், நிதிநிறுவனத்திலும் இருத்தல்வேண்டும்.

கல்வி

ர.ராகவி
தரம் 11C

காவியங்கள் படைத்திட வந்த
கார்குழலின் கீதமாக
ஓவியமாய் வரைந்திடும்
அற்புதக் காவியம் கல்விதானே

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக என்றார் வள்ளுவர்
கற்றபின் அதற்கு
தகுந்தவாறு நீ நிற்பாயாக

விழுமியப் பண்புடனே விண்ணவர்கள் வாழ்த்திட
வீழ்ந்திடாமல் கல்விதனை
விளக்கமாய் கற்பாய் நீ
மகிழ்வுடனே.

ஆலயங்கள் தொழுது நிதம்
ஆன்மீக நலத்துடனே
ஆண்டாண்டு காலம் வாழ
அறிவை நிதம் வளர்ப்பாயே

உண்மையாய் இருந்திடு நீ
உலகையே காத்திடு நீ
மேன்மையை அடைந்திடவே
மென்மையாய் வாழ்ந்திடு நீ

எம் அதிபரின் அன்புணர்ந்து
அவருக்காய் கற்றிடுவோம்
ஆன்மீக அமைதிக்காக
ஆக்ரோஷமாய் பள்ளிக்காய் உழைத்திடுவோம்

பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்

திருமதி.சி.தங்கராசா
ஆரம்பக்கல்வி

பாடசாலைச் சூழலுக்குப் பிரவேசிக்கின்ற முதலாந்தர பிள்ளைகளிடம் இருக்கவேண்டிய தயார் நிலையை இரு பிரதான இயல்புகளுடன் தொடர்புபடுத்த முடியும். அவையாவன பிள்ளை களிடம் இயல்பாகவே வளரவேண்டிய இசைவாக்கமும், தேவையான தேர்ச்சிகளை பெற்றுக் கொள்வதுமேயாகும். அவ் இயல்புகளை மூன்று பரிமாணங்களில் நோக்கலாம். அதாவது பிள்ளையிடமுள்ள பாடசாலைக்கான தயார் நிலை, குடும்பத்தின் அல்லது பெற்றோரின் தயார்நிலை, பாடசாலையில் பிள்ளைகளுக்குள்ள தயார் நிலை ஆகியனவாகும். பிள்ளைகளிடமுள்ள பாடசாலைக்கான தயார் நிலையைக் கண்டறிதலை அடிப்படையாகக் கொண்டுள்ள இச் செயற்பாட்டில் மிகவும் முறையாகவும், ஆய்வு ரீதியாகவும் அபிவிருத்தி செய்துள்ள செயற்பாடுகளில் தொகுதியைப் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம் எனும் இந்நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்வதன் அடிப்படை நோக்கம் முன்பள்ளியிலிருந்து பாடசாலைக்கு இடம்மாறும்போது பிள்ளையிடம் நிகழ வேண்டிய மாற்றங்களை இலகுபடுத்தவும், பிள்ளைகளிடம் எந்தளவு அடிப்படை அனுமதித்திறன்கள் விருத்தியடைந்துள்ளது என அறிந்து கொள்ள ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஒத்துழைப்பதற்குமாகும். இதன்மூலம் வகுப்பறையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை எளிதாக்க உதவுகின்றது. எவ்வாறாயினும் பிள்ளைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு பயன்படுத்தக் கூடாது என்பதை உறுதியாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பாடசாலைக்கு அனுமதிக்கப்படுகின்ற பிள்ளைக்கு பாடசாலைச் சூழல் புதியதாகும். இச்செயற்பாட்டின் மூலம் ஆசிரியர்களுடனும் அடுத்த பிள்ளைகளுடனும் தொடர்புபட்டு செயற்படவும் விருப்பமான மகிழ்ச்சிகரமான அனுபவங்களை வழங்குவதற்கு சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுக்கிறது.

முதலாந் தரத்தில் ஆசிரியர்கள் புதிய பிள்ளைகளுக்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடு களை ஆரம்பிப்பது சவாலான அனுபவமாகும். தமது வகுப்பிற்கு புதிதாகவரும் பிள்ளைகள் யார்? அவர்களது தேவைகள், விருப்பு, வெறுப்புகள் யாவை? அவர்களது இயலுமைகள் எவை? போன்று தமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை இலகுவாக்க மகிழ்ச்சிகரமான ஆரம்பச் செயற் பாடுகள் உதவுகின்றது.

வீரமாமுனிவர்

கெ.நிசாலிகா

திருக்குறள், தேவாரம், திருப்புகழ், நன்நூல், ஆத்திசூடி ஆகிய நூல்களை பிறமொழியில் மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர் ஆவார். இவர் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத் திற்கும் சிறப்பாக பணிகளை செய்தார். தமிழகத்தில் வாழ்ந்த புலவர்களுள் பல்துறை வித்தகராகத் திகழ்ந்தவர் வீரமா முனிவரே.

தோற்றம் : - 08.11.1680

மறைவு : - 04.02.1747

பிறப்பு : - இத்தாலி நாட்டில் வெனிஸ் மாநிலத்தில் மாந்துவா எனும் மறை மாவட்டத்தில் உள்ள காஸ்திகிளியோ என்ற சிற்றூரில் பிறந்தார்.

இயற்பெயர் : - கான்ஸ்டன்டைன் யோசப்பு பெஸ்கி

1709 : - கிறிஸ்தவ மறையை பரப்பும் நோக்கில் யேசு சபை குருவானார்.

1710 : - தமிழகம் வந்தார்.

மறைபரப்பு முயற்சிக்காக முதலில் தமிழை கற்றுக்கொண்ட இவர் தமிழில் வியத்தகு புலமை பெற்று இலக்கணம், இலக்கியம், அகராதி படைத்து தமிழுக்குச் செழுமையூட்டினார். தமது பெயரினை தைரியநாதன் என்று முதலில் மாற்றிக் கொண்டார். பின்னர் அப்பெயர் வடமொழி என்பதாலும், நன்கு தமிழ் கற்றதாலும் தமது இயற்பெயரின் பொருளைத் தழுவி செந்தமிழில் வீரமாமுனிவர் என மாற்றிக் கொண்டார்.

இவர் தமிழகம் வந்த பின்பு சுப்ரதீக் கவிராயரிடம் தமிழ் இலக்கண, இலக்கியம் கற்று இலக்கிய பேருரைகள் நடத்துமளவிற்கு புலமை பெற்றார். இலக்கியச் சுவடிகளை பல இடங் களுக்குச் சென்று தேடி எடுத்ததால் "சுவடி தேடும் சாமியார்" எனவும் அழைக்கப்பட்டார். இவற்றில் காண அரிதான பல பொக்கிஷங்கள் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தமிழ் கற்க ஏதுவான தமிழ் - அகராதியை உருவாக்கினார். அதில் 1000 தமிழ்ச் சொற் களுக்கு லத்தீன் விளக்கம் அளிக்கப்பட்டது. இதுவே முதல் தமிழ் அகராதி ஆகும். பின்பு 4400 சொற்களை கொண்ட தமிழ் - போர்த்துக்கேய அகராதியை உருவாக்கினார். திருக்காவலூர்த் திருத்தலத்தையும் ஞாபக் குறிச்சியில் உள்ள அடைக்கலமாதாவையும் போற்றும் வண்ணம் "திருக்காவலூர் கலம்பகம்" பாடியுள்ளார்.

பல பெயர்களைக் கொண்ட பொருட்களின் பெயர்ச் சொற்களைத் தொகுத்துப் பெயரகராதி எனவும்பொருட்களின் பெயர்களைத் தொகுத்து பொருளகராதி எனவும் சொற்கள் பலவாகக் கூடி நின்று ஒரு சொல்லாக வழங்குவதைத் தொகுத்து தொகையகராதி எனவும் எதுகை மற்றும் ஓசை ஒன்றாக வரும் சொற்களை வரிசைப்படுத்தி தொடையகராதி எனவும் அழைத்து தமிழுக்கு செழுமை சேர்த்தவர். "சதுரகராதி" கண்ட பெருமையும் வீரமாமுனிவரையே சாரும். தமிழ் மொழியில் தோன்றிய நிகண்டுகளில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது இந்தச் "சதுரகராதி" ஒரு மொழி அகராதி "சதுரகராதி" இருமொழி "அகராதி தமிழ் - இலத்தீன் - அகராதி" மூன்று மொழி அகராதி போர்த்துக்கீஸ் - இலத்தீன் - தமிழ் - அகராதி உருவாகியதால் "தமிழ் அகராதியின் தந்தை" என போற்றப்பட்டார்.

வீரமாமுனிவரின் தமிழ் படைப்புக்கள்

- தென்றல் விளக்கம் என்ற நூலில் எழுத்து, பொருள், அணி யாப்பு, சொல் ஆகிய ஐந்து இலக்கணங்களை தொகுத்தார்.
- கொடுந்தமிழ் இலக்கணம் என்ற நூலில் தமிழில் முதல் முதலாகப் பேச்சுத் தமிழை விபரிக்க முனைந்தார்.
- உரைநடையில் வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக் கண்ணாடி, செந்தமிழ் இலக்கணம், பரமார்த்த குருவின் கதை, வாமன் கதை ஆகிய நூல்களை படைத்தவர்
- காவியத்தில் தேம்பாவணி இவர் இயற்றியது.
- தேம்பாவணி காவியத்தை இயற்றியதாக வீரமா முனிவருக்கு "செந்தமிழ்த் தேசிகர்" எனும் பட்டம் வழங்கப்பட்டது.
- 1728 புதுவையில் இவரின் பரமார்த்த குருவின் கதை என்ற நூல் முதன் முதலாக அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்த நகைச்சுவைக் கதைகள் Jeande lafomaine (1695 - 1695) எனும் பிரான்சியரால் எழுதப்பட்டது. ஐரோப்பாவில் பிரபலமாக இருந்ததை பெஸ்கி தமிழிலும் மொழி பெயர்த்தார் என்று சிலர் கருதுகின்றனர். இது தமிழில் முதல் முதல் வந்த நகைச்சுவை இலக்கியம் ஆகும். தேம்பாவணி மூன்று காண்டங்களில் 36 படலங்களைக் கொண்டு மொத்தமாக 3615 விருத்தப்பாக்களால் ஆனது.
- தமிழகத்தில் வாழ்ந்த புலவர்களுள் பல்துறை வித்தகராகத் திகழ்ந்தவர் வீரமாமுனிவர். இலக்கண அறிவு, இலக்கிய புலமை, மொழியியல் உணர்வு, பக்தி இலக்கிய ஆற்றல், ஆய்வியற் சிந்தனை என பல்வகையிலும் சிறந்தவர். அவர் தம் திறமையை பயன்படுத்தி தமிழுக்கு வீரமாமுனிவர் ஆற்றியுள்ள பணிகள் தமிழக வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும். தமிழுக்காகவே வாழ்ந்து தொண்டு செய்து புகழ் எய்திய வீரமா முனிவர் 04.02.1747 நாள் அம்பலக்காட்டு குருமடத்தில் இயற்கை எய்தினார்.

அப்துல்கலாம்

அ.ஜென்சிகா

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், மிகப்பெரிய பொருளாளர், இந்தியாவின் 11ஆவது குடியரசு தலைவர் இந்திய ஏவுகணை நாயகன், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, சிறந்த ஆசிரியர் மற்றும் அனைவராலும் மதிக்கத்தக்க அற்புதமான பேச்சாளர், வருங்கால இளைஞர்களின் முன் மாதிரிகையாக கருதப்படும் நம் எல்லோருக்கும் தெரிந்த ஏ.பி.ஜே.அப்துல்கலாமின் வாழ்க்கை வரலாற்றை அறிவோம்.

பிறப்பு

1931ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 15ஆம் நாள் ஜைனுலாபதினுக்கும், ஆஹியம்மாவுக்கும் மகனாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் பாம்பன் தீவில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிறிய நகராட்சியான இராமேஸ்வரத்தில் பிறந்தார். இவர் ஒரு இஸ்லாமிய குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இளமைப்பருவம்

அப்துல்கலாம் இராமேஸ்வரத்திலுள்ள தொடக்கப் பள்ளியில் தனது பள்ளிப்படிப்பை தொடங்கினார்.ஆனால் இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால், இளம் வயதிலே இவர் தன்னுடைய குடும்பத்திற்காக வேலைக்கு சென்றார். பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் இவர் செய்தித்தாள்கள் விநியோகம் செய்தார். இவருடைய பள்ளிப்பருவத்தில் இவர் ஒரு சராசரி மாணவனாகவே வளர்ந்தார்.

கல்லூரி வாழ்க்கை

தன்னுடைய பள்ளிப்படிப்பை முடித்த பிறகு திருச்சிராப்பள்ளியில் உள்ள "செயின்ட் ஜோசப் கல்லூரியில்" இயற்பியல் பயின்றார். 1954ஆம் ஆண்டு, இயற்பியலில் இளங்கலை பட்டம் பெற்றார். ஆனால், இயற்பியல் துறையில் ஆர்வம் இல்லை என உணர்ந்த இவர் 1955ஆம் ஆண்டு தன்னுடைய விண்வெளி பொறியியல் படிப்பை சென்னையில் உள்ள எம்.ஐ.டி யில் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

விஞ்ஞானியாக ஏ.பி.ஜே.அப்துல்கலாம்

1960ஆம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO) விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய அப்துல் கலாம், ஒரு சிறிய ஹெலிகாப்டரை இந்திய ராணுவத்திற்காக வடிவமைத்து கொடுத்தார். பின்னர் இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்த அவர், துணைக்கோள் ஏவுகணைக்

குழுவில் (SLV) செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார். 1980 ஆம் ஆண்டு SLV - III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி- 1 என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச் செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. இத்தகைய வியக்கத்தக்க செயலைப் பாராட்டி மத்திய அரசு இவருக்கு இந்தியாவின் மிகப் பெரிய விருதான "பத்ம பூஷன்" விருது வழங்கி கௌரவித்தது. 1963 ஆம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் பல பணிகளை சிறப்பாக செய்த இவர் 1999ம் ஆண்டு "பொக்ரான்" அணு ஆயுத சோதனையில்" முக்கிய பணியாற்றியுள்ளார். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய ஏ.பி.ஜே அப்துல் கலாம், இதுவரை ஐந்து ஏவுகணை திட்டங்களில் பணிபுரிந்துள்ளார். அவர் அனைவராலும் இந்திய ராணுவ ராக்கெட் படைப்பின் பிதாவாக போற்றப்படுகிறார்.

குடியரசு தலைவராக ஏ.பி.ஜே அப்துல்கலாம்

2002ம் ஆண்டு நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11வது குடியரசு தலைவராக யூலை 25ஆம் நாள் 2002ல் பதவியேற்றார். குடியரசு தலைவராவதற்கு முன், இந்தியாவின் மிகப்பெரிய விருதான "பாரத ரத்னா விருது" மத்திய அரசு இவருக்கு வழங்கி கௌரவித்தது. மேலும் "பாரத ரத்னா" விருது பெற்ற மூன்றாவது குடியரசு தலைவர் என்ற பெருமையை பெற்றார். 2007ம் ஆண்டு வரை குடியரசு தலைவராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார். 2007ம் ஆண்டு குடியரசுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட நினைத்த கலாம், பிறகு பல காரணங்களால் அந்த தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முடிவு செய்து விலகினார்.

அப்துல்கலாம் பெற்ற விருதுகள்

1981	-	பத்மபூஷன்
1990	-	பத்ம விபூஷன்
1997	-	பாரத ரத்னா
1997	-	தேசிய ஒருங்கிணைப்பு இந்திராகாந்தி விருது
1998	-	வீர சவர்கார் விருது
2000	-	ராமானுஜன் விருது
2007	-	அறிவியல் கௌரவ டாக்டர் பட்டம்
2008	-	பொறியியல் டாக்டர் பட்டம்
2009	-	சர்வதேச வோன் கார்மான் விங்ஸ் விருது
2010	-	பொறியியல் டாக்டர் பட்டம்
2012	-	சட்டங்களின் டாக்டர்
2012	-	சவரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் விருது

ஏ.பி.ஜே அப்துல் கலாம் எழுதிய நூல்கள்

- அக்னி சிறகுகள்
- இந்தியா 2020
- எழுச்சி தீபங்கள்
- அப்புறம் பிறந்தது ஒரு புதிய குழந்தை

இறுதிவரைக்கும் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்த ஏ.பி.ஜே அப்துல் கலாமின் எளிமையான வாழ்க்கையும், அவரது இனிமையான பேச்சும் எல்லோரையும் கவர்ந்தது என்பதில் வியப்பில்லை. "எதிர்கால இந்தியா இளைஞர்கள் கையில்" என்ற அவர் "கனவு காணுங்கள்! அந்த கனவை நினைவாக்க பாடுபடுங்கள்" என்னும் வாக்கியத்தை இளைஞர்களின் மனதில் வேரூன்ற செய்தார்.

உலகம் போற்றும் விஞ்ஞானியாக கலாம் தன்னுடைய பொன் மொழிகளாலும், கவிதை களாலும், வாசகங்களாலும் அனைவரின் மனதிலும் நீங்கா இடம்பிடித்துள்ளார்.

மரணம்

அப்துல்கலாம் அவர்கள் யூலை 27, 2015 ஹில்லாங்கில் உள்ள இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேஜேமென்ட்டில் மேடையில் பேசிக்கொண்டிருந்த போதே மயங்கி விழுந்து மறைந்தார்.

அப்துல் கலாம் தன்னை ஒரு ஆசிரியர் என்று கூறிக்கொள்வதில் தான் பெருமையடைவதாக கூறி இருந்தார். முன்னாள் குடியரசு தலைவர் என்ற அடைமொழியை விட ஆசிரியர் என்பதிலேயே அலாதி இன்பம் பெற்றார் கலாம்.

இப்படியான கலாமை எமது உலகம் இழப்பது பெரியதொரு பொருளை இழப்பதற்கு சமம் ஆகும்.

மனிதமொன்று மண்ணிலே

திரு.ஜெ.ஜெயதரன்
ஆசிரியர்.

கார்த்திகை எட்டில்
காற்றினில் எட்டி வந்தது ஒரு செய்தி
கரைந்தது எம் தலைவியின் உயிர் என்று
விரைந்தது எம் கால்கள் அதைத் தடுப்பதற்கு முடியவில்லையம்மா.

மன்னார் மண் பெற்ற மகத்தான மனிதமொன்று
அன்னார் என வாய் உரைக்க பறந்து சென்ற மாயமென்ன
இன்னார் யார் என்று அடையாளம் தந்தாய் எமக்கம்மா
தன்னார்வம் கொண்ட உயரிய உயிர் ஒன்று எங்கு சென்றது.

துறவறம் எனும் தூய பணியில் துல்லியமாய்த் துலங்கியே
பேரவலம் கொண்ட மனிதருக்குள் மாண்புடனே பணி செய்தீர்
போர் அவலம் கொண்ட சூழலிலும் பார் போற்ற செய்த சேவைதனை
யார் மறப்பார் நும் பணிதனையும் நினைவுகளையும்

திரேசாவின் பள்ளியில் அள்ளியே வழங்கிய கல்வியை
ஏக்கத்துடன் விழிநீர் சொரிந்து வழிதெரியாப் பிள்ளைகளாய்
துக்கத்துடன் துவண்டு நிற்கின்றோம்
பக்கத்தில் நீங்கள் இல்லையே அம்மா

கல்லூரியின் கண்கள் கலங்குதம்மா
பல்லுயிரும் வந்து பள்ளியில் உமைத் தேடுதம்மா
அல்லும் பகலும் உம் பாதம் பட்ட மண்
சொல்லும் உம் பணிதனை எந்நாளும்

சுத்தத்தின் சுந்தரியே, ஒழுக்கத்தின் ஓவியமே
தலைமையின் தலைமகளே, முகாமையின் முதுகெலும்பே
விலைமதிப்பற்ற பத்தினியே ஒருதரம் வந்து போ
மறுதரம் மனம் ஆறுகின்றோம் வாராயோ

நீர் இருந்த பள்ளியில் யார் கண் பட்டதுவோ
கார் மேகம் சூழ்ந்தது போல் பார்மீது இடிவிழுந்தது
வேரறுந்த மரங்கள் போல்
யாருமற்ற அனாதைகளாய் அந்தரிக்க விட்டுச்சென்றீர்

நன்றி கூறும் நற்பழக்கமும்
பரிவு காட்டும் பாசக்குணமும்
பிரிவுபசாரத்தில் எடுத்துரைக்க ஏக்கத்தோடு காத்திருந்தோம்
அருவியாய் கண்ணீர் வடிக்க எமைவிட்டுச் சென்றீரோ

காலத்தின் நிபந்தனையில்
காலன் அவன் வந்தும்மை காவிச் சென்றுவிட்டான்
ஞாலத்தில் உமைப் பிரிந்தும் கல்விதனைத் தொடருவோம்
வானத்தில் இருந்து உம் பிள்ளைகளைக் காத்தருளும்.

வாசிப்பை நம் சுவாசிப்பாய் மாற்றுவோம்....

திரு.தெ.ஈஸ்வரன்.
ஆசிரியர்.

ஆறறிவால் உலகை ஆளும் மனிதனுக்கு இந்த அண்ட சராசரங்கள் பற்றிய அறிவை வழங்க வல்ல இறைவனின் அற்புத கொடையே வாசிப்பாகும். ஒரு குழந்தை தனது தாய் வயிற்றில் இருக்கும் போதே வாசிப்பினைக் கிரகிக்கின்றது. அதாவது கருவுற்ற தாய் நல்ல நூல்களை வாசிக்கும்போது பிள்ளையின் மூளை சிறப்பாக விருத்தியடைகின்றது என்பது ஆய்வுகளின் முடிவாகும். பல்வேறு திறன்களை வளர்க்கும் வாசிப்பு என்பது சிறுவயதிலிருந்தே ஆரம்பிக்கப் படவேண்டும். அதுவே பிற்காலத்தில் பல்வேறு நற்பழக்கங்களுக்கு அவர்களை இட்டுச்செல்லும். இவ்வாசிப்பு என்பது ஒரு கலையாகும். அது தானாக உருவாகி வளர்வதல்ல. மாறாக பழக்கப்படுத்து வதனூடாகவே அதனை வழக்கப்படுத்திக் கொள்ளமுடியும்.

பொழுதுபோக்காகவோ, ஓய்வு நேரத்திலோ, மகிழ்ச்சியான சமயத்திலோ வாசிப்பைச் சிலர் நாடுவதுண்டு. இன்னும் சிலர் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகவோ, அறிவை விருத்தி செய்வதற்காகவோ வாசிப்பை மேற்கொள்வதுண்டு. இவ்வாறு பல்வேறு நோக்கங் களைக் கொண்ட வாசிப்பானது சிந்தித்தல், ஆராய்தல், காரணம் கண்டறிதல், கற்பனை செய்தல் மற்றும் நியாயம் கண்டறிதல் போன்ற பல்வேறு திறன்களைக் கொண்ட செயன்முறையாகும். வாசிப்புத்திறன் இருக்கும் ஒருவருக்கு பேச்சில் தெளிவும், ஞாபகசக்தியும், சிறப்பான கருத்தாழமும் இயல்பாகவே அமைந்திருக்கும். இத்திறன்களானது பொதுஅறிவு நிரம்பப்பெற்றவர்களாக அவர்களை மாற்றுகின்றது.

சிறு வயதிலே, மாணவப் பருவத்திலே வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டிருப்பது அவர் களின் அறிவு மற்றும் ஆற்றல் மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருக்கும். இன்று உலகம் போற்றுகின்ற தலைவர்கள் யாவருமே சிறந்த வாசிப்புப்பழக்கத்தைக் கொண்டிருந்தவர்களே. மகாத்மா காந்தி, அறிஞர் அண்ணா, நேரு, ஆபிரகாம்லிங்கன் போன்ற பல தலைவர்களை உதாரணமாக குறிப்பிடலாம். எனவே சிறு வயதிலிருந்தே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். இதற்கு சிறந்த இடம் ஒன்று பாடசாலை மற்றொன்று வீடு ஆகும். பாடசாலையிலே நூலகமானது மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்க்கின்ற கருவியாக அமையவேண்டும். மாணவர்கள் நூலகத்தைத் தேடிவரும் வகையில் நூலக செயற்பாடுகளை ஒழுங்கமைக்க வேண்டும். சிறுவர்கள் பாடத்தோடு சம்பந்தமான புத்தகங்களைவிட புதிய விடயங்களை அறிந்துகொள்ளக்கூடிய புத்தகங்களை வாசிப்பதிலேயே ஆர்வமுடையவர்களாக விளங்குவர். அதிலும் ஆரம்ப மற்றும் இடைநிலை வகுப்பு மாணவர்கள் சிறுசிறு கதைப் புத்தகங்களை வாசிப்பதிலேயே நாட்டமுடையவர்களாகக் காணப்படுவர் பாடத்திட்டங்களை மட்டும் கொண்ட

புத்தகங்களை வாசிக்குமாறு வற்புறுத்துவதால் வாசிப்பின்மீது மாணவர்களுக்கு வெறுப்பேற் படுகின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நமது கல்வி முறைமையிலே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கான எந்தவொரு முயற்சியும் பாடசாலை பாடத்திட்டத்திலே உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். போட்டி மனப்பாங்கு நிறைந்த கல்விச் சூழலிலே பெற்றோர்கள்கூட பிள்ளைகளை பரீட்சைக்கான ஆயத்தப்படுத்தலில் தான் அதிக கவனம் செலுத்துகின்றார்களே தவிர சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கான வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுப்பதில்லை என்றே சொல்லலாம்.

பிள்ளைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை உருவாக்குவதில் பெற்றோரின் பங்கும் இன்றியமையாததாகும். பிள்ளைகளை வாசிப்பின் பால் ஈர்ப்பதற்கு பல்வேறு உத்திகளை பெற்றோர்கள் பின்பற்றலாம். அந்தவகையில் பிள்ளைகளுக்கு புத்தகங்களை அன்பளிப்பாக வழங்குவதுடன் படுக்கைக்கு செல்லுமுன் ஏதாவது ஒரு விடயத்தை வாசிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளச்செய்யலாம். அத்தோடு புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்ற வாசிப்பு சாதனங்களை அதிகமாகச் சேகரித்து வைப்பதுடன் அவற்றைப் பிள்ளைகள் படிக்கும் மேசை களிலும், இறாக்கைகளிலும் மாத்திரம் வைக்காமல் பல்வேறு இடங்களிலும் அவற்றை வைத் திருப்பதன் மூலம் பிள்ளைகளுக்கு அவற்றின்மீது ஓர் ஈடுபாட்டை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

பிள்ளைகள் எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்கும் வாசிப்புத்திறனானது உதவுகின்றது. மேலும் பிள்ளைகளின் கற்பனைத் திறனையும் வாசிப்பானது அதிகரிக்கச் செய்கின்றது. இது சிறந்த ஆக்கத்திறன் கொண்ட பிள்ளைகளை உருவாக்குகின்றது. சில பிள்ளைகள் வாசிப்பதற்கு இடர்படுவார்கள். இவ்வாசிப்புச் சிக்கலானது பல்வேறு காரணங்களால் ஏற்படலாம். பிள்ளைகளில் பார்வைக் குறைபாடு, குரல் பிரச்சினை, சொற்களை உச்சரிக்க முடியாத தன்மை போன்ற பல்வேறு பிரச்சினைகள் பிள்ளைகளிடத்தே காணப்படலாம். இவற்றினை அவர்கள் வெளிப்படுத்துவதற்கும் தயக்கம் காட்டலாம். இப்பிரச்சனைகளை இனங்கண்டு திருத்துவதனூடாக வாசிப்பிலே காணப்படும் இடர்பாடுகளையும் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்று கூறுவார்கள். ஆனால் நாம் பெற்றது எவ்வளவு என்பதை யார் அளவிடுகின்றார்கள் வாசிப்பின் மூலம் நமது தேடல் விரிந்து செல்லும்போது தான் மேலே குறிப்பிட்ட அளவு எவ்வளவு நம்மிடம் உள்ளது என்ற வினா நம்மிடம் தோன்றும். நவீன சாதனங்களின் பெருக்கம் இன்று வாசிப்பிற்கான பல்வேறு கதவுகளைத் திறந்துவிட்டுள்ளது. ஆனால் நாம் அக்கதவுகளூடாக உலகத்தைத் தரிசிக்காமல் ஆடம்பரமான ஜன்னல்களூடாகவே உலகைப் பார்க்க விழைகின்றோம். இதுதான் நாம் வாசிப்பைவிட்டு வெகுதூரம் சென்றுவிடுவதற்கு வழிசமைக்கின்றது.

அண்மையில் இணையத்தளம் ஒன்றிலே காணக்கிடைத்த தகவல் ஒன்றின்படி, இலங்கை சமூகவியல் கள ஆய்வு ஒன்றில் பாடங்களை வீட்டில் வாசிக்கச் செய்வதை பெற்றோர் தண்டனை யாகவே பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்துகின்றார்கள் என்ற உண்மை வெளிப்படுத்தப்பட் டிருக்கின்றது. அதாவது வீட்டில் துருதுருவென்று எந்நேரமும் குழப்படி செய்துகொண்டிருக்கும் பிள்ளையைக் கட்டுப்படுத்துவதற்காக அப்பிள்ளையை ஓர் இடத்தில் இருத்தி "நகராமல் இருந்து பாடப்புத்தகத்தை வாசி " என்று கூறும் பெற்றோரை நம் தமிழ்க் குடும்பங்களில் காணலாம். இது பிள்ளைக்கு சிறு வயதிலேயே வாசிப்பு என்பது ஒரு தண்டனையான விடயம் என்ற மனப்பதிவை ஏற்படுத்திவிடும். இது மாத்திரமன்றி தூக்கம் வராதவர்கள் நூல் ஒன்றைக் கையிலெடுத்து தம் தூக்கத்தை வரவழைத்துக்கொள்ளும் பழக்கத்தையும் நம் சமூகங்களில் காணலாம்.

இவ்வாறான அணுகுமுறைகளை விடுத்து வாசிப்பை உண்மையான நம் சுவாசிப்பாகவும், வருங்கால தூண்களான நம் மழலைச் செல்வங்களின் பொக்கிசமாகவும் மாற்றினால் வாழ்வை வளமாக்கலாம், உலகையும் வசமாக்கலாம்.

தலைமைத்துவத்தில் பாடசாலைகளின் பங்களிப்பு

திருமதி சு.மகேஸ்வரதாசன்
பிரதி அதிபர்.

ஒரு மனிதனின் வளர்ச்சிக் காலகட்டத்தின் முக்கிய பங்கை பாடசாலையே வகிக்கின்றது என்றால் அது மிகையாகாது. உடல், உள, ஆன்மீக ரீதியான வளர்ச்சியின் பிரதான கால கட்டங்கள் பாடசாலையிலேயே ஆரம்பித்து விருட்சமாக பரிணமிக்கின்றது. ஆரம்பத்தில் மத நிலையங்கள் கல்விக் கூடங்களாக இருந்தன. அங்கு உடல் உள ஆன்மீக விருத்தியில் நிறைவு பெற்றுக் காணப்பட்டனர். பின்னர் தனியார் அரசாங்க பிரிவேனாக்கள் ஆகியன பாடசாலை களை பொறுப்பேற்று நடாத்தினர். இங்கிருந்து வெளியேறும் மாணவர்கள் பிற்காலத்தில் சமுதாயத்தில் சிறந்த தலைவர்களாகப் பரிணமிக்கின்றனர். ஆகவே பாடசாலைகள் சிறந்த தலைவர்களை உருவாக்கும் பயிற்சிப் பட்டறைகளாக உற்பத்தி நிறுவனங்களாக மிளிருகின்றன.

பாடசாலையை ஒரு உற்பத்தி நிறுவனம் எனக் கூறலாம். இங்கு ஆக்க காரணிகளாக நிலம், தொழில், மூலதனம், முயற்சி முதலியனவற்றை உள்ளீடுகளாக கொண்டு உற்பத்திச் செயற்பாடுகள் நடைபெற்று (கற்றல்/கற்பித்தல்/தலைமைத்துவம்/மன்ற செயற்பாடு/சாரணியம்) முடிந்ததும் வெளியீடுகளாக சிறந்த சமூகப் பொருத்தப்பாடுள்ள தலைவர்களை சமூகத்திற்கு வெளிவிடல் ஆகும்.

அறிவு, திறன், மனப்பாங்கு பாடசாலைகளில் கட்டியெழுப்பப்படுகின்றது. இதன் உச்ச பயன் பாட்டை பெறும் நோக்கில் இன்று மாணவர் மையக் கற்பித்தல் மேற்கொள்ளப்படுவதுடன் அனை வருக்கும் கல்வி வழங்கப்படுகின்றது. இதனால் பெற்றோர் தம் குழந்தைகளை பாடசாலைகளுக்கு குழந்தைப்பருவத்தில் அனுப்பி நல்ல பிள்ளைகளாக சிறந்த மனிதராக ஆக்குவதனையே இன்று காணுகின்றோம். இதனை ஆசிரியர் கீதத்தில் மிகவும் சிறப்பாக

"அன்னை மடியில் அரவணைத்தபிள்ளை
பள்ளி செல்லும் பிஞ்சுப் பாலகனாய் அவன்
தன்னந் தனிமையைப் போக்கியே உள்ளத்தில்
நம்பிக்கை தன்னையே ஊட்டிடுவோம்
என்பதாகும்.

மேற்கூறிய செயற்பாட்டிற்கு ஏற்ப சூழலை பகுப்பாய்வு செய்து அதற்கு ஏற்றவகையில் பாடவிதான செயற்பாடுகளும் பாடத்திட்டங்களும் பாடபோதனைகளும் நடைபெற்று வருகின்றன. சூழலை இனங்கண்டு பகுப்பாய்வு செய்வதற்கு முகாமைத்துவ ரீதியில் அணுகுவதே சிறந்தது. முகாமைத்துவ ரீதியில் சூழலை SWOT ஆய்வு மூலம் பகுப்பாய்வு செய்யமுடியும்.

S	-	என்பது	Stregnth	-	பலம்
W	-	என்பது	Weakness	-	பலவீனம்
O	-	என்பது	Opportunities	-	சந்தர்ப்பங்கள்
T	-	என்பது	Threats	-	அச்சுறுத்தல்

மேற்படி மாணவரது பலம் பலவீனம் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அச்சுறுத்தலை இனங் கண்டு மாணவர்களிற்கு காலத்திற்கேற்ப பாடத்திட்டங்களை வகுத்து கல்வியை வழங்கி சிறந்த மாணவரை உருவாக்க முடியும். இதனால் தான் இன்று தகவல் தொழில்நுட்பம், கணினிக் கல்வி என்பன பாடசாலைகளில் போதிக்கப்பட்டு வருகின்றன. இவற்றிற்காக பாடசாலைக்கான வளங்களை முகாமைத்துவ ரீதியில் ஐந்து பகுதிகளாக கருதமுடியும்.

Man - மனிதன்
Money - பணம்
Materials - பொருட்கள்
Machine - பொறிமுறைகள்
Methods - முறைகள்

ஆகிய ஐந்து வளங்களின் உதவியுடன் நேரம் (Time) தகவல் (Information) எண்ணக்கரு (Concepts) ஆகியவற்றையும் வளங்களாக இணைக்க வேண்டும். சிறந்த மாணவரை உருவாக்கும்போது அதனூடாக அங்கேயே தலைமைத்துவமும் உருவாக்கப்படுகின்றது. இதற்காக பாடசாலையில் ஒழுக்காற்று குழு, மன்றங்கள், சாரணியம், முதலுதவி, மாணவத் தலைவர்கள் போன்ற இச்செயற்பாடுகள் மூலம் தலைமைத்துவத்தை மாணவரிடையே கட்டியெழுப்பக் கூடியதாக உள்ளது. மாணவத் தலைவர்கள் (Prefects) என அழைக்கப்படுவர்.

P - Personality - ஆளுமை
R - Responsibility - பொறுப்புடமை
E - Education - கல்வி
F - Friendship - நட்பு
E - Enthusiastic - அபிமானம்
C - Characteristic - நன்னடத்தை
T - Tolerant - சகிப்புத்தன்மை

இவர்கள் மேற்கூறிய பண்புகளை உடையவர்களாகவும் "தோல்விகள் யாவும் வெற்றி என்னும் கோபுரத்தின் தூண்கள்" என்பதற்கு இணங்க யாவற்றையும் எதிர்கொண்டு அனுப வங்களாக ஏற்கும் திறனுடையதும் தூரநோக்கு (Vision) இலட்சிய நோக்கு (Mission) நோக்கம் (Aims) குறிக்கோள் (Objectives) செயற்பாட்டு நடைமுறைகள் (Procebures) பிரமாணங்கள் (Rules) நிகழ்ச்சித் திட்டங்கள் (Programme) ஆகியவற்றின் உதவியுடன் நல்ல மனப்பாங்குடன் வழிநடத்தும் நல்லவர்களை பாடசாலை உருவாக்கவேண்டும். இதற்கேற்ப ஒவ்வொரு பாடசாலை யும் தத்தமக்கேற்ப பிரத்தியேகமான மகுடவாசகம் இலட்சினை ஆகியவற்றை உருவாக்கி யுள்ளனர். எமது பாடசாலையின் மகுடவாசகம் "உண்மையும் தூய்மையும்" என்பதன் ஊடாக நல்ல சமூக பொருத்தப்பாடுடைய பெண்களை உருவாக்கித் தருகின்றது.

ஆகவே (School) என்பது

S - Sincerely - விசுவாசம்
C - Character - நன்னடத்தை
H - Honesty - நேர்மையான
O - Orderlines - ஒழுங்கான
O - Obedient - கீழ்ப்படிவான
L - Liberel - தாராளமான

என்பதை குறித்து நிற்கிறது. நல்ல விசுவாசமுள்ள, நன்னடத்தை கொண்ட நேர்மையான ஒழுங்கான, கீழ்படிவுள்ள தாராள மனப்பான்மை கொண்ட நன் மாணாக்கரை உருவாக்கி சிறந்த சமுதாயத்தவர்களை பாடசாலைகள் உருவாக்கி வருகின்றன என்பதை யாராலும் ஏற்கமுடியும்.

நமக்காகக் கல்லூரி, கல்லூரிக்காக நாம்

திரு.பொ.சகலகலாநிதி
B.A , Dip in Edu, SLTS - I

எழுபது ஆண்டுகளில் எம் இனிய கல்லூரி
என்றென்றும் இனிக்குமே இதயம் ஏங்கும்

சின்ன திரேசாவின் வழிவந்த எங்கள் கல்லூரி
யா/புனித தெரேசாள் கல்லூரியாய் வளம் பெறுமே என்றும்
நடந்து வந்த பாதையெலாம் நற்பாதையாய்
நன்றாய் அமைந்து நற்பெருமை பெறுவோமே

அறிவும் ஒழுக்கமும் ஆலமரமாய் அமைந்ததென்றும்
அன்னை பூமியாய் வல்லமை ஆற்றல் பெறுவோமே
ஒவ்வோர் புதிய ஆண்டும் ஓர் அரிய சாதனைகள்
தங்கமான மாணவச்செல்வங்கள் தரம் உயர செய்திடுமே

கோப்பாய் கோட்டத்தில் கொலுவிருக்கும் கல்லூரி
பெருமை மிக்க பொக்கிசமாய் திகழும் என்போம்
இக் கல்லூரியால் நாம் பெருமை பெற வேண்டும்
எம்மால் இக்கல்லூரி பெருமை பெறவேண்டும்.

சிற்றம்பலம் ஏபிரகாம் காடினரின் சிந்தனையில் உருவாகி
ஒன்று ஒன்பது நான்கு ஆறில் அடிக்கல்லும் நாட்டினரே அழகாக

வளம் எல்லாம் ஒளிவீச வாழ்த்துக்கள் வந்திடுமே
அழகு சோலை வானவில்லாய் வசந்தமும் வாழ்த்திடுமே
அன்பையும் நன்றியையும் அரவணைப்பால் கொண்டு நிதம்
மானிட விழுமியத்தை மலர செய்து மாண்புற செய்திடுமே
ஆளுமை மிக்க மாணவ செல்வங்களை உருவாக்கி
தேசம் எங்கும் புகழ் பரப்ப சிட்டுக்களாய் பறந்திடுவோம்.

நான் விரும்பும் கவிஞர்

சி.தஷித்தா
தரம் - 13

எனக்குக் கவிஞர்களையே மிகவும் பிடிக்கும். ஏனெனில் அவர்கள் தான் உள்ளத்தை ஈர்க்கும் உயர்ந்த கருத்துக்களை உணர்ச்சித் துடிப்புடன் வெளிப்படுத்துபவர்கள். மொழியைச் சரியாகப் பயன்படுத்துபவர்கள் கவிஞர்களே.

"கவிஞனே கடவுளிலும் மேலானவன்" என்றார் மகாகவி தாகூர். கடவுள் படைத்தவை அழிந்து போகின்றன" கவிஞன் படைத்தவை அழிவதில்லை. இதுவே அதற்குக் காரணமெனவும் அவர் கூறினார்.

கவி தாகூரின் கூற்று முற்றும் உண்மையே திருவள்ளுவர், கம்பர், இளங்கோ, காளிதாசன், பாரதி போன்ற கவிஞர்கள் காலத்தை வென்று இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது கவிதைகள் மக்கள் உள்ளங்களில் நிலைத்து நிற்கின்றன. இந்த வகையில் காலத்தால் அழியாத படைப்புக்களை ஆக்கித் தந்த பாரதியே நான் விரும்பும் கவிஞராவார்.

இவர் தமிழ்நாட்டில் உள்ள எட்டயபுரம் என்னும் ஊரில் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி பிறந்தார். இவருடைய தந்தையாரின் பெயர் சின்னச்சாமி ஐயர் தாயாரின் பெயர் இலக்குமி அம்மாள். இவரது இளமைப்பெயர் சுப்பிரமணியன் பாரதியார். இளமையிலே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். அம்மொழிகளுள் அவருக்குத் தமிழிலேயே அதிக விருப்பம் இருந்தது. தமிழ்மொழி போல் இனிதான மொழி எங்கும் இல்லை என்பது இவரது கருத்தாகும்.

பாரதியார் சிறுவயதிலேயே கவிதை எழுதும் திறமை பெற்றிருந்தார். இவரது கவித் திறமையை மெச்சிய எட்டயபுரம் சமஸ்தானத்தினர் இவருக்குப் பாரதி என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர். தமது பதினோராவது வயதிலேயே பாரதி என்னும் பட்டத்தைப் பெற்ற சுப்பிரமணியன் சுப்பிரமணிய பாரதியார் ஆனார். கவிதை மழை பொழியத் தொடங்கினார். புதுமைக்கவி புரட்சிக்கவி என உலகோர் பாராட்டும் வகையில் கவிதைகளை எழுதினார். நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல் என்றார். கவிதை அவரது தொழில் என்றும் அந்த தொழில் மூலம் நாட்டுக்கு உழைப்பேன் என்றும் கூறினார். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகக் கனல் கக்கும் தேசியப் பாடல்களை எழுதினார். இதன் பொருட்டுப் பல இன்னல்களுக்கு உள்ளானார். மொழியால் இனத்தால் மதத்தால் பிரிந்து கிடந்த பாரத நாட்டை ஒன்றுபடுத்தி ஒருமைப்பாட்டு உணர்வை ஊட்டிய பாரதி தமது கவிதைகள் மூலம் தேசத்தின் விடுதலைக்கு உரமூட்டியவர். உள்ளத்தில் உள்ளது கவிதை உணர்ச்சி உருவெடுப்பது கவிதை என்று கவிதைக்கு இலக்கணம் கூறினார். கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. கவிமணியின் இப்பாடலுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் பாரதி. பாரதியின் கவிதைகளில் உணர்ச்சிப் பெருக்கு விஞ்சி நிற்பதாக நாம் காணலாம்.

"தனியொருவனுக்கு உணவில்லை எனில் இந்த
ஜகத்தினை அழித்திடுவோம்
தேடுகல்வி இல்லா ஊரைத் தீக்கிரையாக்குவோம்'
நாணும்அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்

'சத்திரியனுக் கொருநீதி தண்டச்
சோறுஉண்ணும் பார்ப்புக்கு வேறொருநீதி
சாத்திரம் சொல்லிடுமாயின் - அது
சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்"

என்னும் பாடல் வகைகள் வாசிப்போர் மனதில் உணர்ச்சிப் பெருக்கினை உருவாக்கு வனவாகும்.காக்கைக்குருவி எங்கள் சாதி எனக் கவிதை சொன்ன பாரதி பாலர்களுக்காகப் பாப்பாப் பாட்டு பாடியதோடு பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு என்னும் அருமையான காவியங்களையும் படைத்துள்ளார். தேசியம், தெய்வீகம், சமூகம், தத்துவம் எனப் பல்வேறு பாடுபொருள்களில் அவரது கவிதைகள் அமைந்துள்ளன. பெண் விடுதலையை பாரதி பெரிதும் விரும்பினார். புதுமைப் பெண்ணின் குரலாக ஒலித்தார். பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாவித்திட வேணும் என ஆசை கொண்டவர் பாரதி. வீரம், அறிவு, உணர்ச்சி. வேகம் இத்தனையும் பாரதியின் கவிதையில் உண்டு. இதனாலேயே பாரதியின் பாட்டு வையத்தைப் பாலிக்க வைத்து வருகிறது. தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில் இலகு பாரதிப் புலவன் தோன்றினான். என்றொரு கவிஞர் பாரதியினைக் குறிப்பிடுகின்றார். அடிமைத்தன எதிர்ப்பு, வீரம், தமிழ்பற்று, பெண் உரிமை உணர்வு, தொழில் வளர்ச்சி, தேசிய உணர்வு என்பன எல்லாம் பாரதியின் கவிதைகளில் பளிச்சிடுகின்றன. இவரது தேசிய பாடல்கள் கோழைகளையும் வீரம் உடையவர்களாக்கும். இதனால் உளம் நெகிழ்ந்த நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்பிள்ளை அவர்கள்

படித்தறியா மிக ஏழைக் கிழவனேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பானாகில்
துடித்தெழுந்து தன் மெலிந்த தோளைக் கொட்டித்
துளை மிகுந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வில்
இப்போது இலக்கணமே என்றென் றார்த்திங்கு
அடித்துரைத்தே கொள்வா னென்றால்

அப்பாட்டின் மொழி பேசும் மழலைகள் விரும்பும் கனிவோடு கூடிய கவிதை பல படைத்த கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை அவர்களும் பாரதியின் பாட்டில் மனதைப் பறிகொடுத்த வராவார். பாரதியின் பாடல்கள் அவரைக் கிறுகிறுக்கச் செய்துவிட்டமையை வெகு ஆழமாக கூறுகின்றார்.

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா - அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா - அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா'

எனத் தமது ஆற்றாமையைக் கூறி அவர்தம் பெருமையைப் புகழ்கின்றார் பாரதி. யாருடன் நெருங்கிப் பழகி அவர்தம் புலமையை நன்கறிந்து அவரது தாசனாக விளங்கியவர் பாவேந்தர் பாரதிதாசன். புது வழிகாட்டிய புதுமைக் கவிஞர் பாரதியை நான் பெரிதும் விரும்புகிறேன். அவரது கவிதைகள் உள்ளவரை அவர் புகழ் உலகெலாம் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை பாரதி நாமம் வாழ்க.

மறைந்த அதியரின் காலத்து நிகழ்வுகள்....
நினைவுகளாக...



சிந்திக்க சில வரிகள்

ரீ.கொனிக்கா
12 கலைப்பிரிவு

- நீ மற்றவருக்குக் கொடுக்காததை மற்றவரிடம் இருந்து நீ எதிர்பார்க்காதே.
- ஓர் குழந்தையின் அழுகையின் அர்த்தம் புரிந்த அகராதி அம்மா எனும் புத்தகம்.
- எதனையும் முழு மனதுடன். ஆர்வமும் உற்சாகமும் சேர்ந்து நம்பிக்கையுடன் கூடவே துணிவுடனும் மேற்கொண்டால் வெற்றி நிச்சயம்.
- ஒருமுறை பேச முன்னர் இருமுறை யோசித்து பேசு துயரில்லை.
- தேள் உடலில் ஓர் இடத்தில் கொட்டினாலும் உடலெங்கும் வலிக்கிறது. நாம் பிறருக்கு ஒரு தீமை செய்தாலும் அது அவர்களுக்குப் பல துன்பங்களை விளைவிக்கும்.
- வெற்றியை தேடி நீ செல்லாதே, உன் மீது முழு நம்பிக்கை வை. வெற்றி உன்னைத் தேடி வரும்.
- உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும், உனக்குள் இருக்கின்றது.
- நல்லதை நினை, நல்லதை பேசு, நல்லதைச் செய், அழியாத ஆனந்த உலகத்தை நீ சீக்கிரம் அடைவாய்.
- மிருக பலத்தால் அல்லாமல், ஆன்மீக பலத்தால் மட்டுமே உலகம் எழுச்சி பெறும்.
- நம் உழைப்பு இல்லாமல் எதையும் பெறமுடியாது என்பது இயற்கை வகுத்த சட்டம்.
- உலகில் வாழும் ஏதாவது ஓர் உயிருக்காவது உன்னால் மன மகிழ்ச்சி ஏற்படுமானால் உன் வாழ்வில் இலட்சியம் நிறைவேறிவிட்டது.
- ஒழுக்கம் என்பது மீண்டும் மீண்டும் செய்யப்படும் பழக்கங்களால் தான் உருவாகின்றது.
- பெண்கள் பிறந்த வீட்டின் பெருமையையும் புகுந்த வீட்டின் குறைகளையும் பேசாதிருப்பதே உத்தமம்.
- துன்பம் வரும்போது சோர்வடைய வேண்டாம். ஏனெனில் நெருப்பிலிட்டு அடித்து தீட்டும் தங்கமே அணிகலன் ஆகின்றது.
- என்னதான் மாபெரும் போர் வருவதை எதிர்வு கூறினாலும் இருதரப்பும் அமைதியாக இருந்தால் அது பொய்த்துவிடும்.
- கோபத்தை வெளிக்காட்டும் வார்த்தைகளை ஆவேசமாக அள்ளிக் கொட்ட முற்படும் நாவைக் காத்து ஒருமுறை பேசு முன்னர் இரு முறை யோசி
- நாடுகள் பல பூமி ஒன்று, அணிகள் பல ஆணிப் பொன் ஒன்று, உயிரினங்கள் பல மூச்சுக்காற்று ஒன்று.
- ஒருவர் கற்க வேண்டிய நூல்களை பிழையறக்கற்று கற்றவாறு நடக்கவேண்டும்.
- மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு அவர்கள் தங்களுடைய மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலின் வேற்றுமையில் தான் அடங்கியிருக்கிறது.
- உனக்கு வெளியே எதிரிகள் இல்லை. உனது உண்மையான எதிரிகள் அகங்காரம், பொறாமை, பேராசை, கோபம் மனோவிகாரம், சுயநலம் முதலியனவே
- நகைச்சுவை உணர்வு உள்ளவர்கள் அன்பு உள்ளவர்களாக இருப்பார்கள்
- மற்றவர்களுடைய நன்மை குறித்து சிறிதளவு நினைப்பதும் கூடச் சிங்கத்திற்குச் சமமான ஆற்றலை நமது இதயத்திற்குப் படிப்படியாக தருகின்றது.
- நேர்மையான முறையில் வெற்றிக்கு முயற்சித்தால் நிச்சயம் அது நமக்கு கிடைக்கும்.

- நாம் செய்யும் விடயத்தில் தடைகள் ஏற்படின் அதனை தடைக்கல்லாக நோக்காமல் வெற்றிப்படிக் கற்களாக நோக்க வேண்டும்.
- உழுது விளைவிக்காத எந்த நிலமும் ஒரு போதும் உதவாது போய்விடும்.
- துன்பமான நேரத்தில் மனம் நம்பிக்கையை இழக்காது முயற்சிக்க வேண்டும்.
- சுமக்க முடியாத துன்பம் ஒருவனுக்கு வரும்போதுதான் மனம், சொல் இரண்டும் இலேசாகி விடுகின்றன.
- செல்வத்தினால் வருவதைவிட சாதனையால் வரும் புகழ் நிலைத்து நிற்கும்.
- நீங்கள் கடவுளின் குழந்தைகள், அழியாத பேரின்பம் அது ஒன்று தான்
- ஆன்மீக இலட்சியத்தை புறக்கணித்துவிட்டு மேலைநாட்டு நாகரீகத்தின் பின் நீ செல்வாயானால் அதன் விளைவாக மூன்றே தலைமுறைகளில் உனது இனம் அழிந்து போய்விடும்.
- தானம் என்பது நாமே வலியச் சென்று நன்மை செய்வது
- சுயநலம் அற்ற நன்மையின் அளவு தான் வெற்றியின் அளவை எல்லா இடத்திலும் நிர்ணயம் செய்கிறது.
- உண்மையான பெரிய மனிதர்களுக்கு முதல் அடையாளம் பணிவாக இருத்தல்
- கூட்டத்தின் பின்னே செல்பவன் தனக்கு பின்னே கூட்டம் வரும் என எதிர்பார்ப்பது தவறு
- நீ யாருக்காக வாழ்கின்றாயோ அவர்களுக்காக சிலதை விட்டுக் கொடு உனக்காக யார் வாழ்கின்றனரோ அவர்களை யாருக்காகவும் விட்டுக் கொடுக்காதே
- மனச்சாட்சிக்கு அடங்கி நடந்தால் எளிதில் தீங்கு செய்யமுடியாது
- நாம் வாழும் வாழ்க்கை நிரந்தரமற்றது என உணர்பவன் மனிதர்களில் மாணிக்கமாகின்றான்.
- சுயநலம் தன்னை மேம்படுத்துவது பற்றியே சிந்தித்து கொண்டிருக்கும், பொதுநலம் சமூகத்தின் மேம்பாட்டை பற்றியதான சிந்தனையாக இருக்கும்.
- முயற்சி செய்து கொண்டிருந்தால் வெற்றி ஒருநாள் நிச்சயம் கிடைக்கும்.
- உலகில் சகலரிலும் அன்புகாட்டு, ஆனால் நம்பி விடாதே, நீ அவர்கள் நம்பும்படி நட
- மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டு வாழ்பவன் எதற்கும் பயம் கொள்ளத் தேவையில்லை.
- உனக்கு தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள் இருக்கின்றது.
- உணர்ச்சிவசப்படாதவர்களும், பற்றற்றவர்களும் இந்த உலகிற்கு மிகுந்த நன்மையைச் செய்திருக்கிறார்கள்.
- கஸ்டங்கள் என்பது நாம் முன்செய்த வினைகளை கொண்டே வருகின்றது.
- தண்ணீரின் நிறமும் சுவையும் அது உள்ள நிலத்திற்கேற்ப அமையும். நல்லோரின் பெருமை அவர்களுக்குள்ள உதவும் பண்பினால் மட்டுமே அமையும்.
- சாதிக்க நினைப்பவன் எப்போதும் அதிகம் சோதிக்கப்படுகின்றான். பிறரை அதிகம் நேசிப்பவன் அதிகம் காயப்படுகின்றான்.
- எளியவர்களுக்காக செய்யும் தொண்டு இறைவனுக்கு செய்யும் தொண்டை விட மேலானது.
- வறுமை, துன்பம் போன்ற இடர்களை நாம் எதிர்கொள்ள பழகிக்கொண்டால், எமது வாழ்க்கையில் விடிவு வெகு தூரத்தில் இல்லை.
- நம்மை விட மேலான மகான்களிடம் உங்களை ஒப்படையுங்கள் அந்த நம்பிக்கை நிச்சயம் உங்களை கரை சேர்க்கும்.
- செடியில் பூக்கும் அனைத்து மலர்களும் இறைவனுக்கு சொந்தமானவையாகும்.
- நாம் மகிழ்வுடன் இருக்கும்போது மற்றவர்களை மகிழ்வித்துப் பார்ப்பதே ஆத்மார்த்த சந்தோசம். இதற்காகவே இறைவன் உறவுகளை படைக்கின்றான்.
- மனிதனின் அதிஷ்டம் அவன் தலைவிதியில் அல்ல. அவன் நடத்தையில் தான் இருக்கின்றது.

தமிழில் புதுக்கவிதை - சுருக்க அறிமுகம்

ச.கருணாகரன்.
B.A (Hons) Ta(Spl),P.G.D.E

1.1. அறிமுகம்

கலை இலக்கிய வடிவங்களிலே பிரக்ஞை பூர்வமாக விளங்குவது கவிதை. இது சொற்களின் வழியே இயங்குவதோடு சொற்களைக் கடந்தும் இயங்குகின்றது. கவிதையினுள் மௌனத்திற்கு இடம் உண்டு. மௌனங்கள் உடைந்து சிதறுகின்றபோது கவிதை பிறக்கின்றது எனலாம். நெடுங் காலத் தமிழ்க் கவிதை மரபில் கவிதை என்பது ஏதாவது ஒரு கருத்தைச் சார்ந்தே இயங்குவதாக நாம் அறிகின்றோம். தமிழ்க்கலை இலக்கிய வரலாற்றிலே இதற்கு இரண்டாயிரம் ஆண்டு பழைமை பேசப்பட்டாலும் கருத்தியல் சார்ந்து பிரித்துப் பார்க்கும் புதுக்கவிதை மரபிற்கு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு சுழற்சியே உண்டு. தற்காலக் கவிதை, இருபதாம் நூற்றாண்டுக் கவிதை, புதிய கவிதை போன்ற பெயர்களைப் பெற்றிருக்கும் இவ்வடிவம் "புதிர்க்கவிதை, நவகவிதை, உரைக்கவிதை, உரைவிடுபா, சீர்திருத்தக் கவிதை, யாப்பு மீறிய கவிதை, பழகுதமிழ்க் கவிதை எனப் பாரதி பிச்சைமூர்த்தி, சுப்புரெட்டியார், சி.சு.செல்லப்பா, கைலாசபதி, வானமாமலை போன்றோரால் அழைக்கப்படுகின்றது.[1]

மேற்கத்தேய தொடர்பாடல் வந்ததென்று பலராலும் கருதப்படும் புதுக்கவிதைக்கு பலரும் பலவிதமான வரையறைகளைத் தந்துள்ளனர். எனினும் அவற்றின் காத்திரத் தன்மை சிந்தனைக் குரியதே. "எளிமையும் நேர்மையும் மட்டுமே இதன் குணம்" என்று கூறிய 'பாப்லோ நெருடா' கவிதை என்பது ரொட்டியைப் போல படித்தவர்களும் விவசாய மக்களும் ஒரே மாதிரிப் பகிர்ந்து கொள்ளும்படி இருத்தல் வேண்டும்.[2] என்று விளக்குவது நோக்கத்தக்கது. ந.பிச்சைமூர்த்தி அவர்கள் "புறத்தாக்குதல்களின் விளைவாக உணர்வுகள் மனதில் ஏற்படுத்துகின்ற ஆழந்த மெய்யான ஒரு அனுபவம்[3] என்றும் சி.சு.செல்லப்பா அவர்கள் "சூசனச் சொற்கள் ஆரம்பம் முதல் இறுதிவரை விடைப்பு, விடைப்புத் தளராமை, விசையுள்ள மொழிநடை முத்தாய்ப்பான கருத்து வெளிப்பாடு[4] என்றும் கூறுகின்றார். இத்தகைய புதுக்கவிதைக்கு தமிழகத்திலும் ஈழத்திலும் தனித்துவமான இடம் உண்டு. எமது ஆய்வு வசதி கருதி முதலில் தமிழகத்தில் புதுக்கவிதை பற்றி நோக்கலாம்.

1.2. தமிழகத்தில் புதுக்கவிதை

உணர்வுகளோடு சார்ந்து விளங்கும் கவிதை மரபியல் ரீதியாகச் செய்யுள் என்றே பேசப்பட்டு வந்துள்ளது. தொல்காப்பியர் காலத்தில் இது பாட்டு என்றும் வழங்கப்பட்டு வந்தது. அவர் காலத்தில் இருந்து இருபதாம் நூற்றாண்டு வரை தொடர்ந்து வந்த இச்செய்யுள் மரபு இந்நூற்றாண்டில் நெகிழ்வுற்று புதுக்கவிதையாகித் தேசத்தின் பொதுக்கவிதை என்ற பரிமாணத்தைப் பெற்றது. "தமிழ்க் கவிதையில் மறுமலர்ச்சி பெற்ற இப்புதுமைக்கு புதுக்கவிதை என்ற பெயர் 1960களில் தான் சேர்ந்தது.[5] என்று வல்லிக்கண்ணன் குறிப்பிடுவர்.

முறைப்படுத்தப்பட்ட கல்வி நிலை, அறிவியல் முன்னேற்றம், சமூக நிகழ்வுகள் ஆகியவற்றால் தமிழின் பழைய கவிதை மரபியல் சிதைந்து புதிய சிந்தனைப் போக்கில் கவிதை உருப்பெறத்

தொடங்கியது. உபநிடதச் சிந்தனை மரபும், வால்ட்மிட்டனின் கவிதையில் ஆழ்ந்த புலமைத் துவமும் கொண்ட பாரதியிடத்திலே இது வசனக்கவிதையாக ஊற்றெடுக்கிறது. இதனால் தமிழகத்தில் புதுக்கவிதையை நாம் பாரதி காலத்தில் இருந்து தொடங்கி பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1.2.1. பாரதி காலம்

1.2.2. பிச்சைமூர்த்தி காலம்

1.2.3. மணிக்கொடி காலம்

1.2.4. எழுத்துக் காலம்

1.2.5. வானம்பாடிக்காலம்

1.2.6. தற்காலம்

1.2.1. பாரதி காலம் :-

இருபதாம் நூற்றாண்டு தமிழ்க்கவிதை உலகின் தலைமகன் பாரதி நவயுகத்தை நாவாரக் கூவி அழைத்தவனாகவும், நவீனத்துவத்தின் கதவுகளை அகலத் திறந்துவிட்டவனாகவும் காணப் படுகின்றான். இவனிடத்திலே மரபை உடைத்துக்கொண்டு 'மித்ரா' கூறுவது போல

"கங்கை போல் காவிரி போல்
கருத்தூறும் புதுக்கவிதை
தங்கு தடையின்றித்
தவழ்ந்தோடி ....."[6]

வருவதனைக் காணமுடிகின்றது. "அமெரிக்க கவிஞன் விட்மனின் கவிதை பற்றிய தெளிவான பார்வையும், புரிதலும் பாரதிக்கு இருந்ததை அவருடைய கட்டுரைகள் மூலமாகவே அறியலாம்[7]. இத்தகைய புரிதல்களைக் கொண்டுதான் பாரதி கவிதைகளில் எளிமைத் தன்மையைப் புகுத்தி வசனக் கவிதையைப் படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பழமையைப் பழமையாகவும் புதுமையைப் புதுமையாகவும் காணும் வரலாற்று ஆசிரியர்களின் குருட்டுணர்வினை நீக்கி பழமைக்குள் நின்றுகொண்டு புதுமை செய்தவனாக இப்பாரதி விளங்குகின்றான். இவனது கையில் தான் தமிழ்க் கவிதை ஒரு புதிய பரிமாணத்தையும் காத்திரத்தன்மையினையும் பெறுகின்றது.

"சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது
சொற் புதிது சோதிமிக்க
நவகவிதை"[9]

என்று கூறி புதுமைத் தன்மையினைப் புகுத்தியுள்ளார். உபநிடத விளக்கங்களும், வேதமந்திர ஒலிகளும், ஆன்ம விடுதலையும், இறையுணர்வும், புதுமைப் போக்கும், சமகால - முற்கால மேலைத்தேய கவிஞர்களின் தாக்கங்களும் பாரதிக்குள் உறைந்திருந்தது. கவிதை அமைப்பு முறை, சொற்கட்டுமானங்கள் போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி கவிதையில் எளிமைத் தன்மையையும் தோற்றுவித்தது எனலாம்.

"எளிய பதம் எளிய நடை எளிதில் அறிந்து
கொள்ளும் சந்தம் பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு....."[10]

என்ற வகையில் அவரது கவிதை ஆளுமை விரிந்து சென்றுள்ளதைக் காணலாம்.

சாதாரண மக்களது வாழ்வில் இடம்பிடித்துள்ள இசை மெட்டுக்களாகிய சிந்து, கண்ணி போன்றவற்றையும் கவிதையில் பதிவாக்கி அறிவியல் பார்வையோடு கவிதை நாடக உத்திகளையும்

கொண்டு பலதொனிகளிலும் காட்சிகளை அமைத்து தத்துவம், தர்க்கம், அழகியல் முதலிய பல்வேறு நிலைகளிலும் கவிபாடிய பாரதியின் முயற்சி தமிழ்ப் புதுக்கவிதைக்கு முதல் வழிகாட்டியாகும்.

1.2.2. பிச்சைமூர்த்தி காலம் : -

பாரதி தொடக்கிய வசனக்கவிதையை அடுத்த கட்டத்திற்கு வளர்த்து புதுக்கவிதையாக்கி தமிழ்க் கவிதை மரபிற்குப் பொலிவூட்டியவர் ந.பிச்சமூர்த்தியாவார். "1930 களின் பிற்பகுதியில் பாரதிக்குப் பிறகு புதுக்கவிதை முயற்சியில் ஆர்வத்துடன் முதன் முதலாக ஈடுபட்டவர் பிச்சமூர்த்தி 10 என்று வல்லிக்கண்ணன் குறிப்பிட்டுச் செல்வர். தமிழ்ப்புதுக் கவிதையின் தந்தையாக விளங்கிய பிச்சமூர்த்தி மணிக்கொடி, கிராம ஊழியன் போன்ற இதழ்களில் தன் முயற்சிகளைத் தொடங்கி "வசனக் கவிதை ரீதியில் கவிதை எழுதுகிற போதே மரபு வழிக்கவிதை போல் தோற்றம் காட்டுகிற ஓசை நயமும் செவிநுகர் செந்சொல் ஓட்டமும் நிறைந்த கவிதை இயற்றுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார்"[11] சிறுகதைத் துறையிலும் நாட்டம் கொண்டிருந்த பிச்சமூர்த்தி அவர்கள் "பி" என்ற பெயரில் 1934ல் மணிக்கொடி இதழில் 'காதல்' என்ற வசனக் கவிதையை வெளியிட்டார்.[12]

ஆரம்பத்தில் ஆங்கிலத்திலும் தனது படைப்புக்களை வெளியிட்ட பிச்சமூர்த்தி அமெரிக்கக் கவிஞர் விட்மனையும், பாரதியையும் சரியாகப் பயன்படுத்தி தனது கவிதையாளுமை விருத்தியைச் செப்பனிட்டுக் கொண்டமை நோக்கத்தக்கது. "தனது புதுக்கவிதை முயற்சிக்கு யாப்பு மரபே காணாத அமெரிக்கக் கவிஞர் வால்ட்மிட்டன் எழுதிய 'புல்லின் இதழ்கள்' என்ற கவிதைத் தொகுப்புத்தான் வித்திட்டது[13] என்று அவரே கூறிச்செல்கின்றார். கட்டற்ற மனப்பதிவுகள், தத்துவம், காதல், போருணர்வு, சமூக இழப்புக்கள் போன்ற பல விடயங்களையும் நையாண்டித் தன்மை யோடு கவிதையில் பதிவாக்கியவர் இவர் தனக்குப் பிறகு பல குழுக்களை உருவாக்கிய மூல வித்தாய் இருந்ததாலும் பலபல புதிய உள்ளடக்கங்களோடு புதிய சோதனைகளை மேற்கொண்ட தாலும் தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றில் இவரது கவிதை புனைகளம் பெயர் சொல்லும் காலமாகியது.

1.2.3. மணிக்கொடி காலம் : -

தமிழின் நவீன இலக்கிய வடிவங்களை பல்தள நிலைக்கு நகர்த்திச் சென்றது மணிக் கொடி இதழ் ஆகும். இவ்விதழினூடாக தமிழ் இலக்கிய மரபிற்குப் பல ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் அறிமுகமாகினர். ஆரம்பத்தில் அதிகளவான புதுக்கவிதைகளை வெளியிட்டு தனக்கென்று ஒரு இடத்தைப் பெற்றுக்கொண்டது இவ்விதழ். ஆனாலும் இதன் வளர்நிலை நீண்டகாலத்திற்கு நிலைத் திருக்கவில்லை என்பது தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும் இலக்கிய ஆர்வலர்கள் - படைப்பாளிகளுக்கும் கிடைத்த துரதிஷ்டமே எனலாம். ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், புதுமைப்பித்தன் ஆகியோரது படைப்புக்களைத் தாங்கி இவ்விதழ் ஆரம்பத்தில் வெளிவந்தது. "தன்னம்பிக்கை, எள்ளல், அழகு, அமைதி, தத்துவம், போர்மறுப்பு, காதலின்பம், புராணக்கவிதைகளைப் புதுப்பித்தல் போன்ற உள்ளடக் கங்களை மணிக்கொடிக்கால எழுத்தாளர்கள் ஏற்றிருந்தனர்.[14] புதுக்கவிதை வரலாற்றில் நாயகனாக விளங்கும் கு.ப.ராஜகோபாலனது பல கவிதைகள் இவ்விதழிலே வெளிவந்துள்ளது. இவருடைய கவிதையில் பெரும்பாலானவை பெண்மையை வியந்து போற்றும் அகத்துறை சார்ந்தவையாகவும், வாழ்க்கையின் சிக்கல்களைக் கொண்டவையாகவும் காணப்படுகின்றன. வாழ்வின் இனிமைகளை இரசித்து மகிழவேண்டும் என்ற உணர்வு அவரது கவிதைகளில் தொனிக்கக் காணலாம்.

சிறுகதை என்ற இலக்கிய வகையைத் தொடர்ந்து வசனக் கவிதைப் பரிசோதனைகளுக்கு இடம் தந்து விவாதங்களைத் தொடங்கி வைத்த மணிக்கொடியிலே சிறுகதைத் துறையில் ஒளி வீசிய புதுமைப்பித்தனும் கவிதை எழுதினார். "மரபுக் கவிதையின் செய்யுட்சாயலைப் புறக்கணிக்காமல் மொழிப் பண்பாட்டு விழுமியங்களின் மரபுகளை ஒட்டிப் பேச்சுச் சந்தத்துடன் புதிய அமைதி விளங்கப் புதுமைப்பித்தன் கவிதை படைத்துள்ளார்.[15] பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன் போன்றோரைத் தொடர்ந்து "திரிலோக சீதாராம், வைதீஸ்வரன், துரைசீனிச்சாமி போன்றோரும்

கவிதை எழுதி வந்தனர்.[16] தமிழ்ப்புதுக்கவிதை வரலாற்றிலே இம்மணிக்கொடி இதழ் சமகாலத்து இதழ்களைவிட மேலோங்கி இருந்ததாலும், இக்காலத்தில் புதுக்கவிதைகளை அதிகமாக வெளியிட்டது என்பதாலும் புதுக்கவிதைகளைச் சமூகத்திற்கு வழங்க முயன்ற ஏனைய இதழ் களுக்கு வழிகாட்டியாக விளங்கியமையாலும் இவ்விதழுக்குப் புதுக்கவிதை வரலாற்றில் தனித்துவ மான இடம் இருப்பதை மறுப்பதற்கில்லை.

1.2.4. எழுத்துக்காலம் : -

தமிழ்ப் புதுக்கவிதை மரபிலே மணிக்கொடி காலத்தைத் தொடர்ந்து பன்முகப்பட்ட உள்ளடக் கங்களையும் கொண்டு புதுக்கவிதை புனைந்தோரை உள்ளடக்கிய காலகட்டமாக எழுத்துக் காலகட்டம் விளங்கியது. இது ஆரம்பத்தில் அதிகமான புதுக்கவிதைகளை வெளியிடாத போதிலும் தொடர்ந்த காலப் பகுதிகளில் புது மணம் கொண்ட கவிதைகளை வெளியிட்டது. "சுந்தரராமசாமி, சி.சு.செல்லப்பா, வா.இளையபெருமாள், கஸ்தூரி ரங்கன், சக்ரதாரி, சுப.கோ. நாராயணசாமி ஆகியோர்.[17] கவிதைகளை எழுதினர். இவர்களைத் தொடர்ந்து "எழுத்து இரண்டாவது மூன்றாவது இதழ்களில் ந.பிச்சமூர்த்தி, மயன் (க.நா.சு) போன்ற பழையவர்களுடன் தி.சோ.வேணுகோபாலன், டி.கே.துரைசாமி (நகுலன்), பசுவையா (சுந்தரராமசாமி) போன்ற புதியவர்களின் புதுக்கவிதை களும் பிரசுரமாகின.[18] இவ்வெழுத்திலே புதுக்கவிதைகளையும் புதுக்கவிதை பற்றிய கட்டுரை களையும் மேலை நாட்டுப் புதுக்கவிதைக் கோட்பாடுகளையும் வெளியிட்டனர். வாசகர்களின் எதிரொலிகளைப் புலப்படுத்தாமல் புதுக்கவிதை பற்றிய பல பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டு இருந்தாலும் புதுக்கவிதை - வசனக்கவிதை பற்றிய பிரக்ஞை பூர்வமான விவாதங்கள் நடத்தப்பட்டு பிரசுரிக்கப்பட்டமையினாலும் தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றிலே இக்காலம் தனித்துவம் பெறுகின்றது எனலாம்.

1.2.5. வானம்பாடிக்காலம் : -

புதுக்கவிதைத் துறையிலே பாடுபொருள் பரவலாக்கப்பட்டு எழுதிய காலகட்டமே வானம்பாடிக் காலமாகும். இக்காலக் கவிஞர்களை வானம்பாடிக் கவிஞர்கள் என்று அழைப்பர். மரபறிந்து மரபில் இருந்து விடுபடத்தொடங்கிய தமிழ்க் கவிஞர்களும், மார்க்ஸியப் பார்வை கொண்ட இடதுசாரிச் சிந்தனையாளர்களும் இணைந்து குழுவாக செயற்பட்டனர். "புவியரசு, சிற்பி, அபி, தமிழன்பன், மேத்தா, நா.காமராசன், சக்திக்கனல், தேனரசன், ஜெனகப்பிரியா, இரா.மீனாட்சி, தமிழ் நாடன், ஞானி, ரோகினி, தமிழவன், கங்கை கொண்டான், மீரா, பட்சிராஜன், வி.எஸ் சத்யா, நாகராஜன்.[18] போன்ற பலர் புதுக்கவிதைகளை எழுதினர். இவர்கள் பழமை மீறிய சமூக உணர்வு கொண்ட கவிதைகளையும், புறப்பார்வை கொண்ட கவிதைகளையும் எளிமைக்கான உணர்த்து முறையில் தந்தனர்.

1.2.6. தற்காலம் : -

தமிழ்ப் புதுக்கவிதை மரபில் தற்காலத்தில் முன்னைய காலத்தைவிட சிற்றிதழ்களின் எண்ணிக்கை பல்மடங்காக அதிகரித்ததன் காரணத்தால் புதுக்கவிதைகளும் நிறைவாகவே வெளிவந்தன. "புதுக்கவிதை பெரும் அலைகளாக எழுந்து பரந்து வீசத்தொடங்கிய இக்கால கட்டத்தில் தரமானவற்றுடன் ஏராளமான கவிதைப் போலிகள் எழுதப்பட்டும், வெளியிடப்பட்டும் வருவது தவிர்க்க முடியாது.[19] இப்போலிகள் சிலரைப் புதுக்கவிதை பற்றிய தவறான புரிதலுக்கும் இட்டுச் செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தில் சாதி, சமயம், மூடநம்பிக்கைகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த சமுதாயத்தை வேருடன் சாய்க்கும் வகையில் வீறார்ந்த பல கவிதைகள் படைக்கப்பட்டன. "சிற்பி, மேத்தா, அக்னிபுத்திரன், தமிழன்பன், அப்துல்ரகுமான், வைரமுத்து, கிவீந்திரன், தணிகைச்செல்வன், பிரம்மராஜன், தேவதச்சன், பொன்மணி வைரமுத்து, மார்க்கிச கவிஞர் பொன்மணி, சுகுமாரன், ஞானக்கூத்தன், நீலமணி, மாலதிமைத்திரி, சல்மா, கனிமொழி,

குட்டி ரேவதி, கலாப்பிரியா, தேவமகள், அரசு, மணிமேகலை, மீனாட்சி, ரோகினி, நிர்மலா, சுரேஸ், திரிசடை, லீலாவதி, செல்வி, பாலா போன்ற நீண்ட பட்டியலைக் கொண்ட பலரும் புதுக்கவிதை எழுதினர். இவ்வெழுத்தாளர்கள் பொதுவாக கையூட்டு, சாதிப்பிரிவு, காதல், இந்தி எதிர்ப்பு, வரதட்சனைக் கொடுமை, வேலையின்மை, குழந்தை ஏக்கம், திருமண ஏக்கம், வேலைக்குப் போகும் பெண்கள் நிலை போன்ற பல சமூகவிடயங்களையும் தமது கவிதைகளில் பதிவாக்கிச் சென்றனர் - செல்கின்றனர்.

1.3 ஈழத்தில் புதுக்கவிதை

ஈழத்துத் தமிழ்க் கவிதை பற்றி அகலவிரிவான பார்வையினை முன்வைப்பவர்கள் ஈழத்துப் பூதந்தேவனார் வரை தொட்டுச் செல்வர். ஈழத்துக் கவிதைப் போக்கிற்கு இத்தகைய ஒரு பழைய நிலைப்பட்ட பாரம்பரியம் இருப்பது இன்றும் எம்மவரைப் பெருமை கொள்ள வைக்கின்றது என்பது நிதர்சனமே. பழம் பெருமையினைத் தனதாக்கிக் கொண்ட ஈழத்துக் கவிதைப் போக்கு இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து பிறிதொரு பாய்ச்சலைப் பெற்று இன்றுவரை நீண்டு நிலைத்துள்ளது. இக்காலப்பகுதியில்தான் தாய்நாடு - சேய்நாடு என்ற உறவில் தமிழ கத்தில் சிறப்புப் பெற்றிருந்த புதுக்கவிதை ஈழத்திலும் தலைதூக்குகிறது. ஆரம்பத்தில் ஈழத்துக் கவிஞர்களிடையே தமிழகக் கவிஞர்களின் தாக்கம் இருந்தது யாவரும் ஒப்ப முடிந்த முடிவாகும்.

ஈழத்துப் புதுக்கவிதை வரலாற்றிலே ஆரம்பத்தில் நெகிழ்ச்சித் தன்மை கொண்ட கவிதை களை எழுதத்தலைப்பட்டவர்கள் ஆறுமுக நாவலரின் எதிர்ப்புக்கு ஆட்பட்டே இருந்தனர். "நாவலரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சமயம் சாராத - அதாவது சைவசமயம் சாராத இலக்கியங்களை ஒதுக்கித் தள்ளும் உதாசீனப்போக்கும் இதுவே யாழ்ப்பாணக் கவிஞரான சுப்பையாவினால் எழுதப் பட்ட கனகிபுராணம் போன்ற நல்ல கவிதை நூல் சிதைந்து போனதற்குரிய காரணமாகும்.[21] என்று மூ.பொ.அவர்கள் கூறிச்செல்வது நோக்கத்தக்கது. இவருடைய இக்கருத்தை இவரது பரம்பரையினரும் கைக்கொண்டதன் காரணத்தால் அவர்களுடைய காலப்பகுதியில் புதுக்கவிதை அதீத அழுத்தத்தைப் பெற முடியவில்லை எனலாம். ஈழத்துப் புதுக்கவிதை மரபு உண்மையில் முப்பதுகளில் முளைகொள்ளத் தொடங்கியபோதும் அதன் முழு நிறைவான வளர்ச்சியை நாற்பது களில் தொடங்கிய மறுமலர்ச்சிக் காலத்தில்தான் தரிசிக்க முடிகிறது. இக்காலத்தில் பல இளங் கவிஞர்கள் சேர்ந்து மறுமலர்ச்சிச் சங்கம் அமைத்து அதன் பெயராலேயே இயங்கி வந்தனர். "இம்மறுமலர்ச்சியுடன் சம்பந்தப்பட்டவர்களாக நாவற்குழியூர் நடராசன், வரதர், அ.ந.கந்தசாமி, மஹாகவி சாரதா போன்றோர் காணப்படுகின்றனர். இவர்கள் ஈழத்துப் புதுக்கவிதை முன்னோடிகள் என்றும் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களிடத்திலே தமிழகக் கவிஞர்களாகிய பாரதி, பாரதிதாசன், பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன் போன்றோரின் தாக்கங்கள் நேரடியாக நோக்கத்தக்கது.

ஈழத்துப் புதுக்கவிதை முன்னோடிகளில் தரக்கணிப்பு மிக்கவராகக் கொள்ளப்படுபவர் மஹாகவியாவார். இவரை நீக்கி நாம் ஈழத்துப் புதுக்கவிதைத் துறையை திருப்திப்படுத்த முடியாது என்பது தெளிநிலையாகும். ஈழத்து கவி மரபின் பல புதுமைகளின் கர்த்தாவாகத் திகழ்ந்து கிராமிய வழக்குச் சொற்களையும் பேச்சு மொழிச் சொற்களையும் தனது கவிதைகளிலே சரளமாகக் கையாண்டு சென்றுள்ளார். சிறந்த "மானிடநேசியான' இவர் சாதாரண மக்களின் வாழ்க்கை முரண்பாடுகளையே கருவாகக் கொண்டு யாப்புக் கவிதையின் ஓசை நயங்களிலே மாற்றங்களைப் புகுத்திப் பேச்சோசைச் சொற்களை இணைத்துப் பேச்சுத் தமிழை எழுத்துத் தமிழாக மாற்றிக் கவிதை புனைந்தார்.

மஹாகவியின் பெரும்பாலான கவிதைகள் கிராமிய மணங்கமழும் தன்மை உடையனவாய் காணப்படுவதும் அவரது வெற்றிக்கு ஒரு காரணம் எனலாம். இதுபற்றி எம்.ஏ.நுஃமான் அவர்கள் "மஹாகவியின் பெரும்பாலான கவிதைகள் யாழ்ப்பாணக் கிராமிய வாழ்வைக் கருப்பொருளாகக் கொண்டவை. கிராமியத்தை மஹாகவி போல் தமிழ்க்கவிதையில் கொண்டு வந்த பிறிதொரு

கவிஞன் இல்லை எனலாம்.[22] என்று கூறிச் செல்வர். மஹாகவியைப் போன்றே நாவற்குழியூர் நடராசன், அ.ந.கந்தசாமி, சாரதா போன்றோரும் தனித்தனிக் கவனிப்புக்கு உரியவர்கள் ஆகின்றனர். இவர்களுடைய கவிதைப் போக்கு பழைமைக்கு எதிர் நிலை கொண்ட போதும் பாரதியின் பல்தளப் பரிமாணங்கொண்ட புதுமைக்கு ஆட்பட்டு இருந்தமை நோக்கத்தக்கது.

இவ்வாறு மறுமலர்ச்சியாளர்களினால் வளர்நிலை பெற்று வந்த ஈழத்துப் புதுக்கவிதை மரபு இதன் அடுத்த கட்டத்தில் ஐம்பதுகளில் இடதுசாரிப் பார்வையுடைய முற்போக்கு முகம் கொள்ளத்தொடங்கியது. இம்முற்போக்கு எழுத்தாளர்களிடையேயும் பாரதியின் தாக்கம் இருந்ததை யாரும் மறுப்பதற்கில்லை. "கிவீந்திரன் என்ற புனைபெயரில் அ.ந.கந்தசாமி எழுதிய 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற கவிதை முற்போக்கு அணியின் கவிதைப் போக்கிற்கு உதாரணம். பாரதியார் எழுதிய 'கரும்புத் தோட்டத்திலே' என்ற கவிதையை நினைவூட்டும் இக்கவிதை மலையகத் தமிழர் இலங்கையில் படும் அவலத்தைக் காட்டுகின்றது.[23] இக்காலத்தில் கவிதை எழுதிய வடபிராந்திய கவிஞர்களிடையே ஆத்மார்த்தப்பண்பு மேற்கிளம்பாவிடினும் தென்பிரதேசக் கவிஞர்களான நுஃமான், நீலாவணன், சண்முகம் சிவலிங்கம் போன்றோருடைய கவிதைகளிலே இப்பண்பு இலங்கிக் கொள்கின்றது. ஈழத்துக் கவிதை மரபில் இக்காலத்தில் தனித்து இடம்பிடித்து தம் ஆளுமைத் தன்மையை நிலைநாட்டியவர்களாக சில்லையூர் செல்வராசன், இ.முருகையன் போன்றோர் காணப்படுகின்றனர். கவிஞர்.இ.முருகையன் மரபுக்கவிஞராக விளங்கியபோதும் புத்தி பூர்வமாக மரபுவடிவத்துக்குள் பேச்சோசைப் பண்பைப் புகுத்திப் புதிய சொற்பிரயோகங் களைக் கையாண்டு மரபுக்குள் நின்று புதுமை செய்தமை குறிப்பிடத்தக்கது. இது புதுக்கவிதை யாளர்களுக்கு ஒரு முன்னோடித் தன்மையாய் அமைந்தது எனலாம்.

ஈழத்து புதுக்கவிதை வரலாற்றில் எழுபதுகள் காலகட்டத்தில் பல கவிஞர்கள் புதுக்கவிதைத் துறையில் ஈடுபட்டு தங்கள் காத்திரத்தன்மைகளை வெளிக்கொணர முற்பட்டனர். அவர்களுள் சு.வில்வரத்தினம், மு.பொன்னம்பலம், பா.சத்தியசீலன், சேரன், கருணாகரன், அ.யோகராசா, மு.புஸ்பராசன், சுபத்திரன், புதுவை இரத்தினதுரை, தா.இராமலிங்கம், சபா ஜெயராசா போன்றோர்களோடு மரபு நிலைக்குப் பச்சைக் கொடி காட்டும் ச.வே.பஞ்சாட்சரம், சோ.பத்மநாதன், கல்வயல் குமாரசுவாமி போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்களாகின்றனர். இவர்களுள் பலர் புதுக்கவிதையை அதன் இலட்சணப் பொலிவுடன் நகர்த்திச் சென்றுள்ளனர். அடுத்த கட்டத்தில் குறிப்பாக எண்பதுகளில் ஈழத்தின் புதுக்கவிதைத் துறையிலே புரட்சிகரமான பல மாற்றங்கள் நிகழ்ந்து கொள்கின்றன. இக்காலத்தில் தாயகம் கோரிப் பல தமிழ் இளைஞர்கள் தலைதூக்கி ஆயுதப் போராட்டத்திற்கு ஆயத்தமாகினர். இதனால் இவ் இயக்கங்கள்சார் - சாராத பலரும் இன உணர்வைச் சித்தரிக்கும் கவிதைகளை அதிகளவிலே உருவாக்கினர். அத்தோடு பெண்கள் சம்பந்தமான பெண்ணியக் கருத்துக்களும் இக்காலத்தில் அழுத்தம் பெறத் தொடங்கின. குறிப்பாக சிவசங்கரி, சிவரமணி, ஔவை போன்ற பெண் கவிஞர்கள் தோன்றி கவிதை பாடியமை கவனிப்புக்குரியதாகின்றது. இக்காலகட்டக் கவிதைப் போக்கின் தனித்துவத்தன்மையினை இயம்புவது "மரணமும் அவலமும் வாழ்வாகிவிட்ட இக்காலத்தின் குரலாக முப்பத்தொரு கவிஞர்கள் எழுதிய எண்பத்திரண்டு அரசியல் கவிதைகள் கொண்ட நூல் மரணத்துள் வாழ்வோம்[24] என்னும் தொகுதியாகும்.

தொண்ணூறுகளுக்குப் பிற்பட்ட ஈழத்துப் புதுக்கவிதைப் பாரம்பரியத்திலே ஏராளமான கவிஞர்கள் மேல்கிளம்பி கவிதை புனைந்த போதும் அவர்களுள் நீண்டு நிலைத்தவர்கள் - நிலைக்கப் போகின்றவர்கள் எத்தனை பேர் என்பது கேள்விக்குரியதே. இக்காலப் பகுதியில் ஆத்மாவைத் துளைக்கின்ற தரக்கணிப்புமிக்க கவிதை எழுதுபவர்களாக முன்னையவர்கள் சிலரோடு சோலைக்கிளி, அஸ்வகோஸ், நிலாந்தன், ஆழியாள், நட்சத்திரன் செவ்விந்தியன், அமரதாஸ், முல்லைக்கமல்,

எஸ்போல், தானா விஸ்ணு, கி.பி அரவிந்தன், சக்கரவர்த்தி, பாலகணேஸ் போன்றோரோடு மரபுடைக்க விரும்பாத ச.முகுந்தன், த.ஜெயசீலன் போன்றவர்களும் காணப்படுகின்றனர்.

ஈழத்துப் புதுக்கவிதை மரபிலே புலம்பெயர் கவிதைகளும் நோக்கத்தக்கவை. மேற் குறித்த வர்களில் ஆழியாள், கி.பி.அரவிந்தன், நட்சத்திரன், செவ்விந்தியன், சேரன், சக்கரவர்த்தி போன்ற இன்னும் சிலரைக் குறிப்பிடமுடியும். இவர்களது பாடுபொருள்களாக ஈழத்துத் தமிழர்களின் அவல வாழ்வும் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களின் வாழ்வியற் கோலங்களும் தன்னுணர்வு சார்ந்த விடயங்களும் காணப்படுகின்றன.

1.4. மரபுக்கவிதையும் புதுக்கவிதையும்

தமிழ்க் கவிதை மரபுக்கு பழம்பெரும் வரலாறு இருப்பது தெரிந்ததே. சங்ககாலத்தில் இருந்து தற்காலம் வரைக்கும் ஏறத்தாழ இருபது நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாறு இதற்கு உண்டு. தொல்காப்பியர் காலத்தில் இக்கவிதை பல்வேறு பெயர்களால் (பாட்டு, செய்யுள்) அழைக்கப்பட்டு வந்தது. காலந்தோறும் பல மாறுதல்களுக்கு உட்பட்டு பாரதியிடத்திலே வசனக் கவிதையாகி பிச்சமூர்த்தியிடத்திலே புதுக்கவிதையாக மலர்ந்து வியாபகம் பெற்றுள்ளது. தமிழ் இலக்கிய உலகின் நவயுகனாக விளங்கிய பாரதிக்கு முற்பட்ட காலத்தில் இக்கவிதை யாப்பிலக்கணத்திற்கு உட்பட்டதாக மட்டுமே நிலவி வந்தது. இவர்தான் தமிழ் கவிதையை புதியதொரு மரபிற்கு இட்டுச் சென்றார் என்று கருதலாம். சங்ககாலத்தில் இருந்து புலவர்கள் வரையறுக்கப்பட்ட யாப்பி லக்கணத்தில் நின்றே தமது கவியாளுமையை வெளிப்படுத்தினர். சங்ககாலப் பகுதியில் "ஆசிரியப்பாவகையே மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளன. கவிதைகளின் உள்ளடக்கமும் காதல், வீரம், பிரிவு, கொடைச்சிறப்பு என்று குறிப்பிட்ட சில வரன்முறைக்குட்பட்டனவாகவே அமைந் துள்ளன.[25] இதேபோல் சங்கமருவிய காலக் கவிதைகளும் யாப்பிலக்கண வரையறைகளுக்குள் நின்றாலும் அவற்றின் பாடுபொருளிலும் வெளிப்படுத்தும் முறையிலும் மாற்றங்களைக் கொண்டு விளங்கின. அறம், நீதி, ஆசார ஒழுக்கக் கருத்துக்களே இக்கால இலக்கிய விடயமாகின. இதனால் இவ்வுள்ளடக்க வெளிப்பாட்டு முறைக்கு ஏற்ற வெண்பா யாப்பு அதிகளவாகப் பயன் படுத்தப்பட்டது. இவ்வாறு காலந்தோறும் உருவ உள்ளடக்கங்களுக்கு உட்பட்டுவந்த தமிழ்க் கவிதை மரபு "பதினாறாம் நூற்றாண்டில் சித்தர் பாடல்களோடு புதிய மெருகு பெறுகின்றது.[26] இவர்களிடத்தே சமய வழிபாட்டுச் சடங்குகள் மற்றும் உருவழிபாட்டின் எதிர்ப்புக் குரல்கள் வலுவடைந் திருந்ததோடு நேரடியாகவும், குறியீடாகவும் சொல்லும் தன்மையும் ஓரளவுக்கேனும் இசைத் தன்மையைக் கலக்கும் பண்பும் இடம்பெற்றிருந்த தன்மையைக் காணலாம்.

இத்தகைய சிறு சிறு மாறுதல்களோடு உருண்டோடி வந்த கவிதை மரபு அறிவியல்துறை, மொழி, மக்களின் சமூகத் தேவைகள், ஆங்கிலேயராட்சி போன்றவற்றின் விருத்தியோடு யாப்பும் மரபுக்குள்ளே அடங்க மறுத்துப் பாரதியிடத்தில் சென்று பிச்சமூர்த்தியூடாக தமிழ்க் கவிதை மரபில் புதுக்கவிதையாக வீறுகொள்கிறது. மரபுத்தளையில் இருந்து விடுபட்ட கவிஞர் 'மேத்தர்'

" இலக்கணச் செங்கோல்

யாப்புச் சிம்மாசனம்

எதுகைப் பல்லக்கு

மோனைத் தேர்கள்

தனிமொழிச் சேனை

பண்டித்தபவனி

இவை எதுவும் இல்லாத

கருத்துக்கள் தம்மைத்தாமே

ஆளக் கற்றுக்கொண்ட

புதிய மக்களாட்சி முறையே

புதுக்கவிதை"[27]

என்று விபரித்துச் செல்கின்றார்.

இவ்வாறு மரபுத்தளையில் இருந்து விடுபட்ட புதுக்கவிதை எழுபதுகளில் எழுச்சி பெற்று விளங்கியது எனினும் மரபுக்கவிதை, புதுக்கவிதை என்ற பிரச்சினை ஏற்படுத்தப்பட்ட வண்ணமே இருந்தது. எழுத்துக் காலப் பகுதியில் புதுக்கவிதைக்கு சிறப்பான இடம் அமைந்த போதும் வானம்பாடிக் காலத்தில்தான் உச்சம் பெறுகிறது எனலாம். புதுக்கவிதை பற்றிக் கரிசனையுடன் பல விளக்கங்களை முன்வைத்தவராக சி.சு.செல்லப்பா காணப்படுகின்றார். இப்புதுக் கவிதை பற்றி விளங்கிக் கொள்வதில் பலருக்கும் சிக்கல்கள் காணப்படுகின்றன. புதுக் கவிதை யென்பது வடிவமாற்றம் பற்றியதா? உள்ளடக்கம் பற்றியதா? என்பது பிரச்சினைக்குரியதாகின்றது. 'நான் உணவு உண்டேன்' என்ற வசனத்தை

நான்
உணவு
உண்டேன்

என்று எழுதினால் அது புதுக்கவிதை என எண்ணும் போக்கு பலரிடமும் ஏற்பட்டது. அவ்வாறில்லாமல் புதுக்கவிதையின் கவித்துவத்தினை நோக்கி அது கவிதையா? இல்லையா? என்பதைக் கண்டறிய வேண்டியது வாசகர்களின் கடமையாகும். இவ்விடத்தில் பேராசிரியர் நுஃகுமான் அவர்கள் புதுக்கவிதை பற்றிக் கூறிய கருத்து நோக்கத்தக்கது. "மரபுக்கவிதை புதுக் கவிதை என்ற பாகுபாட்டில் ஆரம்பம் முதல் எனக்கு உடன்பாடில்லை. ஒரு கவிதை யாப்பிலா - யாப்பை மீறியா எழுதப்படுகின்றது என்பது முக்கியமில்லை. அது கவிதையாக இருக்கின்றதா? என்பதுதான் முக்கியம். நல்ல கவிதை மோசமான கவிதை என்ற பாகுபாடே விமர்சன பூர்வமானது. இது எப்படியாயினும் புதுக்கவிதை என்ற சொல் வழக்கு இன்று நிலைத்துவிட்டது. மரபுக் கவிதையைப் போல் புதுக்கவிதையிலும் நல்லவை கொஞ்சம்தான் தேறும். மேல் இருந்து கீழ்நோக்கி வரிசை முறையில் எழுதப்படுவதெல்லாம் கவிதை என்ற மனப்பாங்கைப் புதுக்கவிதை இயக்கம் தோற்றுவித்துவிட்டது.[28]

அடிக்குறிப்புக்கள்

1) பொன்மணி வைரமுத்து, சங்க இலக்கியத்தில் புதுக்கவிதைக் கூறுகள். ப- 83

2) சுப்பிரமணிய பாரதி.சி,புதுக்கவிதையும் புதுப்பிரஞ்ஞையும்.ப.-24

3) பிச்சமூர்த்தி.ந,குயிலின் சுரதி முன்னுரை.ப.07

4) செல்லப்பா.சி.சு,பிச்சமூர்த்தி கவிதைகள்.ப-16

5) வல்லிக்கண்ணன்,புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்.ப-01

6) பாலா.என்,புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை.ப-16

7) ராஜமாத்தாண்டன்,புதுக்கவிதை வரலாறு.ப-31

8) கைலாசபதி.க,பாரதி ஆய்வுகள். ப-11

9) மேலது,ப-31

10) வல்லிக்கண்ணன். புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்.ப-14

11) மேலது,ப-15

12) ராஜமார்த்தாண்டன். புதுக்கவிதை வரலாறு.ப-34

13) மேலது. ப-34

14) பொன்மணி வைரமுத்து. சங்க இலக்கியத்தில் புதுக்கவிதைக் கூறுகள்,ப-127

15) அரங்கராசு. தமிழ்ப் புதுக்கவிதை ஒரு திறனாய்வு.ப-124

16) பொன்மணி வைரமுத்து, சங்க இலக்கியத்தில் புதுக்கவிதைக் கூறுகள்.ப-121

17) மேலது. ப-123

18) ராஜமார்த்தாண்டன், புதுக்கவிதை வரலாறு. ப-51

19) பொன்மணி வைரமுத்து, சங்க இலக்கியத்தில் புதுக்கவிதைக் கூறுகள்.ப-125

20) மேலது,பக்-127,129

21) பொன்னம்பலம்.மு. திறனாய்வு சார்ந்த சில பார்வைகள்.ப-28

22) கொழும்புத் தமிழ்ச் சங்கம் (மாதாந்த மடல்), ஓலை ப-15

23) பொன்னம்பலம்,மு. திறனாய்வு சார்ந்த சில பார்வைகள்,ப-39

24) மேலது, ப-36

25) ராஜமார்த்தாண்டன். புதுக்கவிதை வரலாறு. ப-9

26) மேலது , ப-10

27) கமலரூபன்.பொ. எண்பதுகளின் பின்னர் ஈழத்தில் புதுக்கவிதை, ப-04

28) கலை இலக்கியச் சஞ்சிகை, ஞானம் ஆகஸ்ட் 2000. இதழ் 03, ப-20

நெஞ்சத்தின் குமுறல்

சிரோமி , தட்சாயினி
தரம் - 7B

மண்ணிலுள்ள சிறந்த பாடசாலையாம்
புனித தெரேசா
அதை சீருடனே வளர்த்திட வந்து
உதித்தார் றொசாறியோ

நேரிசை வெண்பா ஒன்று உம் - புகழை
செப்பிட போதுமானதோ
நேர்மையின் வடிவமும்
நீதான்

பிரம்ம தேவனால் படைக்கப்பட்ட - பூலோகத்து
சிற்பியும் நீர் தான்
பல மாணவரை ஒளிரச் செய்த - புதுமை
ஆனவரே

உம்மை எம்மால் மறக்க
முடியாது அம்மா
நினைவுகள் இருக்கும் வரை
நெஞ்சங்கள் மறப்பதில்லை

இராமாயணம்

ந.டிக்சிகா
13 கலைப்பிரிவு

இதிகாச இலக்கியங்களில் இராமாயணமும் ஒன்றாகும். இது வடமொழியில் ஆதிகவி என்னும் வால்மீகியால் அருளப்பட்டது. இந்து சமயத்தின் பேரிலக்கியங்களில் முதன்மை யானது. அது பேரிலக்கிய மரபிற்கு மூலமாகி விட்டது. இராமாயணம் சிறப்பு பெற அதுவே காரணமாகியது.

இராமாயணத்தின் மகத்துவம் கருதி இந்தியாவிலே ஹிந்தி, தமிழ், வங்காளி, ஒரியா, அசாமியமொழி, நேபாளம், தெலுங்கு, மராட்டி, மலையாளம், கன்னடம் போன்ற பலமொழி களில் இராமாயணம் பாடப்பட்டது. இது ஹிந்தி மொழியில் துளசிதாசரால் பாடப்பட்டது. இது தமிழ்மொழியில் கம்பரினால் பாடப்பட்டமையால் கம்பராமாயணம் எனப்பட்டது. இது ஏழு காண்டங்களையுடையது. ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தை ஒட்டக்கூத்தர் எழுதினார். அந்தவகையில் இராமாயணத்திலுள்ள ஏழு காண்டங்களும் கீழ் வருமாறு.

1) பால காண்டம்
2) அயோத்திய காண்டம்
3) ஆரணிய காண்டம்
4) ஹிஸ்ஹிந்தா காண்டம்
5) யுத்த காண்டம்
6) சுந்தர காண்டம்
7) உத்தர காண்டம்

அக்கால அரசியல் அமைப்பு, சமூக அமைப்பு, குடும்பநிலை, பெண்களின் நிலை என்பவை பற்றி அறிய இராமாயணம் சிறந்த ஆதாரமாகவுள்ளது. இந்து சமய வழிபாட்டு மரபில் முக்கியமானதாக விளங்கும் இராமன் அவதார புருஷனாக எடுத்துக்காட்டப்படுகின்றான். பக்தி நெறி பற்றி அறிய இந்நூல் ஆதாரமாகவுள்ளது. மேலும் சகோதர பாசம், குடும்ப உறவு, பெற்றோர் மதிப்பு என்பன பற்றி கூறும் பேரிலக்கியமாக இராமாயணம் விளங்குகின்றது.

இராமாயணத்தின் செல்வாக்கு இந்திய தேசத்தில் மட்டுமன்றி இலங்கை, நேபாளம், சீனா, தென்கிழக்காசிய நாடு, புலம்பெயர்ந்த நாடுகளிலும் பரவலடைந்தது. உண்மை, நேர்மை, சத்தியம் பற்றிய விழுமியங்களுக்கு ஆதாரமாக விளங்கும் இலக்கியமே இராமாயணம். இலக்கியங் களின் வளர்ச்சியில் காவியங்கள், சமயம் சார் தோத்திர நூல்கள் பல தோன்றவும் இராமாயணமே முன்னோடியாக திகழ்ந்தது. வைதீக தர்மத்தையும் பிற்கால இந்து சமய மரபுகளையும் பண்பாட்டை யும் இணைக்கும் இலக்கியம் இராமாயணம். பண்டைய இந்துகளினது பண்பாடு மரபுகளையும் விழுமியங்களையும் இலக்கிய மரபுகளையும் பிரதிபலிக்கின்ற கருவூலமாக இராமாயணமே திகழ்கின்றது. இதன் காரணமாக இந்து நாகரிகத்தின் செல்வாக்கு மேலோங்கியுள்ளது.

பிற்கால கல்வி நிலையங்களிலும் அரண்மனைகளிலும் அதிகளவில் விரும்பிப்படிக்கும் நூலாக இராமாயணம் உள்ளது. இது ஒரு தொடர்ச்சியான மரபாகிவிட்டது. இராமாயணத்தின் பிரதான கதாபாத்திரங்கள் புருஷ லட்சணங்களுக்கு முன்னுதாரணமாக கொள்ளப்பட்டன. அறக்கோட்டிற்கும்,

சமுதாய நெறிகளுக்குமிடையே இணக்கத்தை ஏற்படுத்தும் சாதனமாக இராமாயணம் உள்ளது. ஆலயங்களிலும் உலகியல் சார் நிறுவனங்களிலும் இராமாயண கதைகள் சிற்பங்களாயும், ஓவியங்களாயும் பொறிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு விளங்கும் இராமாயணம் குப்தர் காலத்திலேயே இறுதி எழுத்துருவம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இராமாயணம் கூறும் அறக்கருத்துக்கள்

இராமாயணத்தில் சொல்லப்பட்ட உயர்ந்த அறக்கருத்துக்கள் மக்களது வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டுகின்றது. தர்மம் வெல்லும். ஆனால் அதர்மம் என்றோ ஒருநாள் அழியும் எனும் அறக்கருத்து இராமாயணத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது. மேலும் தர்மவாதிகள் எண்ணிக்கையில் குறைவாகவும் அதர்மவாதிகள் எண்ணிக்கையில் அதிகமாகவும் காணப்பட்டிருப்பினும் இறுதியில் தர்மவாதிகளே வெற்றி பெறுவார் என்ற கருத்து விளக்கப்பட்டுள்ளது. இதற்கு சான்றாக இராமாயணம் சுட்டும் தர்மவாதிகளான தசரதன் புத்திரர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். அதர்மவாதி களான இராவணன் ஆகியோர் எண்ணிக்கையில் அதிகமானவராயும் காணப்பட்டிருப்பினும் இறுதியில் அதர்ம வாதிகள் அழிவடையதர்மவாதிகளே வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இராமாயணத்தில் நல்ல குண இயல்புடையவர்கள் சமுதாயத்தில் மதிப்பினை பெற்றுக் கொள்ள தீய குணமுடையவர்கள் சமுதாயத்தினால் வெறுக்கப்படுவார் எனும் கருத்து முன் வைக்கப்பட்டிருந்தது. இதற்கு சான்றாக தசரதன், இராமன், இலக்குமணன் போன்ற பலர் நல்ல குணமுடையவர் சான்றாகவும் இராவணன், சூர்பனகை, கூனி போன்றோர் தீயகுண இயல்பிற்கு சான்றாகவும் எடுத்துக்காட்டப்பட்டிருந்தனர். அத்தோடு இராமாயணத்தில் பெற்றோர் மதிப்பு முதன்மை பெற்றிருந்தது. இதற்கு சான்றாக தசரதனது கூற்றிற்கிணங்க இராமன் வனவாசம் சென்றிருந்ததனை குறிப்பிடலாம். இது "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்னும் முதுமொழியை சுட்டுகின்றது.

மேலும் குடும்ப அமைப்பின் சிறப்பும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. இதற்கு சான்றாக இராமன் சத்தியம், வீரம், பொறுமை, ஏகபத்தினி விரதம் என்பனவற்றிற்கு இலக்கணமாயும் சீதை கற்பு நெறிக்கு இலக்கணமாக விளங்கியதுடன் விருந்தோம்பல் பண்பு இருந்தமையையும் கூறலாம். இதற்குச் சான்றாக சீதை அசோகவனத்திலிருந்தபடி தானின்றி உபசரிக்கின்றாரோ என கலங்கு வதைக் கூறலாம்.

இங்கு மேலும் சகோதர பாசத்தின் உன்னத நிலை எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. இதற்குச் சான்றாக இராமன் வனவாசம் சென்றபோது அவனது தம்பி இலட்சுமணன் கூடச்சென்றதனையும் இராமன் வனவாசம் சென்றதையறிந்த பரதன் அரசாட்சியை பொறுப்பேற்கும்படி கூற இராமன் அதை மறுக்க இராமனின் பாதணிகளை எடுத்து சென்று அரியாசனத்தில் வைத்து ஆட்சி புரிந்தமையைக் கூறலாம். மேலும் மக்கள் அனைவரும் சகோதரர்களாக மதிக்கப்பட வேண்டும். உயிரினங்கள் யாவும் சமமானவை எனும் கருத்தும் வலியுறுத்தப்பட்டது. இதற்கு சான்றாக அரச குலத்தை சேர்ந்த இராமன் வேடர்குலத்தை சேர்ந்த குகனையும், வாரை குலத்தை சேர்ந்த சுக்கிரீவனையும், அரக்கர் குலத்தைச் சேர்ந்த விபீசனனையும் நண்பராக சகோதரராக கருதி இருந்தமை குறிப்பிடத்தக்கது. மற்றும் இராமாயணத்தில் பக்திக்கு இலக்கணமாக அனுமானும் நன்றி மறவாமை, செஞ்சோற்றுகடனுக்கு கும்பகர்ணனும், நட்பிற்கு இலக்கணமாக குகன் - இராமன் மற்றும் பிரபஞ்சம் பற்றிய கருத்தும் இராமவதாரமும் இராமாயணத்தில் எடுத்துக் காட்டப்படுகின்றது.

ஊடகங்களும் தமிழ்மொழி வளர்ச்சியும்

ர.சுரேக்கா
A/L (2016)

ஆதிகாலத்தில் இருந்து இன்றைய சமூகம் வரை எல்லா மட்டங்களிலும் ஒரு வகையிலான தொடர்பு முறைகள் இருந்து வருகின்றன. இத்தொடர்பு முறைகள் சமூக நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதற்கும், பண்பாட்டுக் கையளிப்பினை மேற்கொள்வதற்கும் வழி ஏற்படுத்துகின்றன. ஆதிகாலத்தில் தூது, முரசறைதல் என்ற நிலையிலிருந்து பாரிய மாற்றம் பெற்று பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம் என எத்தனையோ ஊடகங்கள் வளர்ச்சி பெற்றுள்ளது. அவை தாம் வளர்ந்ததோடு மட்டுமல்லாமல் சமூகத்திற்கு தேவையானவற்றையும் வளர்த்துக்கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இச்சாதனங்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றி வருகின்ற பங்கு விதந்து கூறக் கூடியதாகும்.

மிகப் பழமை வாய்ந்த தொடர்பு ஊடகமான பத்திரிகை தமிழ் இலக்கிய உணர்ச்சிக்கு அரும்பங்காற்றி வருகிறது. பத்திரிகைகள் இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படையானது. எழுத்துரு வாக்கம், நிலைபேறாக்கம், புதுமையாக்கம், எழுத்துச் சீர்திருத்தம் போன்றவற்றிற்கும் பத்திரிகைகள் முன்னோடியாக விளங்குகின்றன எனலாம்.

இந்தியாவில் கி.பி 1780 இல் பத்திரிகை இதழ் வெளிவந்தது. 1831இல் "தமிழ் மகஸீன்" என்ற இதழ் வெளிவந்தது. தமிழில் வெளிவந்த முதல் இதழ் இதுவாகும். இதனைத் தொடர்ந்து தினவர்த்தமானி, சுதேச மித்திரன் போன்றன தோற்றம் பெற்றன. இவை செய்திகளோடு அவ்வப் போது இலக்கிய விடயங்களையும் வெளியிட்டன. பாரதியாரால் தொடங்கப்பட்ட இந்தியா, விஜயா போன்ற பத்திரிகைகளும் திரு.வி.கா வினால் தொடங்கப்பட்ட தேசபக்தன், நவசக்தி போன்ற பத்திரிகைகளும் தமிழ் இலக்கியப் பணியை முழு மூச்சுடன் செய்யத் தொடங்கின. "தேசபக்தன் உலகில் தமிழின் இனிமையை வளர்த்து பெருமை கண்டது.

தமிழ்மொழி வளர்ச்சியில் சஞ்சிகைகளும் தமது பங்களிப்பினை செலுத்தாமல் இல்லை. 'மணிக்கொடி', 'கலைமகள்', 'கலாமோகினி', 'கிராம ஊழியன்' , "ஆனந்த விகடன்' போன்ற சஞ்சிகைகள் தோன்றின. தமிழ் இலக்கிய வரலாற்றில் மணிக்கொடிக்கு தனியானதோர் இடமுண்டு. தற்காலத்தில் பல்லாயிரக்கணக்கில் விற்பனையாகும் "ஆனந்த விகடன்", "கல்கி", "குமுதம்", "குங்குமம்" போன்றன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புதியதொரு சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது.

இலங்கையில் 1841இல் யாழ்ப்பாணத்திலிருந்து "உதய தாரகை" என்ற சஞ்சிகை மாதம் இருமுறை வெளிவந்தது. 1891 இல் உதயாதித்தன், இலங்கை நேசன் போன்ற பத்திரிகைகள் வெளிவந்தன. இவை கிறிஸ்தவ மதமாற்றம் கருதி வெளியானது. ஆனால் இந்தப் பத்திரிகை களினூடாகவே வேற்றுமொழி இலக்கியங்களின் தாக்கம் தமிழ் இலக்கியத்திற்கு ஏற்படுகின்றது.

1930களில் ஆரம்பிக்கப்பட்ட தினத்தபால், வீரகேசரி, ஈழகேசரி ஆகிய பத்திரிகைகள் தமிழ் இலக்கிய வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு செயற்படத் தொடங்கின. இருப்பினும் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அதிக பங்கு கொடுத்தது ஈழகேசரியே ஆகும். ஈழகேசரியின் ஆசிரியராக

சோ.சிவபாதசுந்தரம் இருந்த காலத்தில் "ஈழகேசரியை" நவீன இலக்கிய வடிவங்களின் பரிசோதனை களமாக விளங்கச் செய்தார். இப்பத்திரிகை மாணவர் அனுபந்தம் என்ற பகுதியை வெளியிட்டு புதிய இளம் எழுத்தாளர்களை உருவாக்கியது எனலாம்.

தற்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன், தினமுரசு போன்ற பத்திரிகை களும் கொழும்பிலிருந்து வெளியாகும் தினக்குரல், வீரகேசரி, மித்திரன் போன்றவையும் சிறுகதை, கவிதை, விமர்சனம் போன்ற பலவற்றை வெளியிடுவதன் மூலம் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உதவுகின்றது எனலாம்.

எந்தவொரு விடயத்தையும் மக்களிடம் விரைவாகவும், தெளிவாகவும் எடுத்துச் செல்வதில் வானொலி, தொலைக்காட்சி என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. தமிழ்மொழி வளர்ச்சியில் வானொலியின் பங்கு குறிப்பிடக்கூடிய அளவு இடம்பெற்று வருகின்றது.

தமிழர்கள் வாழ்கின்ற பல்வேறு நாடுகளிலே இன்று தமிழ் வானொலி நிலையங்களின் செயற்பாட்டை அறியக்கூடியதாகவுள்ளது. லண்டனிலிருந்து "பி.பி.சி தமிழோசை" ஒலிபரப்பா கின்றது. கனடாவிலிருந்து "கீதவாணியும்" அவுஸ்திரேலியாவிலிருந்து "இன்பத்தமிழ் ஒலியும்" ஒலிபரப்பாகின்றன. இவ்வாறு சர்வதேச நாடுகளில் இவ்வானொலிகள் தமிழ்மொழியை உலகெங்கும் பறைசாற்றி நிற்கின்றது. தமிழையே மேம்படுத்த வேண்டும் மாற்றான் மொழியில் அகப்பட்டு எம்மொழி அழிந்துவிடக்கூடாது எனும் நோக்கிலேயே இவ்வானொலிகள் செயற்பட்டு வருகின்றன. நியூசிலாந்திலிருந்து ஒளிபரப்பாகும் தமிழ்தென்றல் வானொலியில் ஈழத்து தமிழ் இலக்கியங்களை பற்றிய பல விடயங்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

இலங்கையில் 1950களில் ஆரம்பிக்கப்பட்ட "இலங்கை வானொலி" 1967 இல் கூட்டுத் தாபனமாக மாற்றம் பெற்று அன்றிலிருந்து இன்றுவரை பல தமிழின் வளர்ச்சிக்கான நிகழ்ச்சி களை ஒலிபரப்பி வருகின்றது. இவ் வானொலியின் சிறப்பு அன்றிலிருந்து இன்றுவரை தொடர்கிறது.

இலங்கையில் தற்பொழுது பல தனியார் தமிழ் வானொலி ஒலிபரப்பு நிலையங்கள் இயங்குகின்றன. சூரியன் எப்.எம், சக்தி எப்.எம், வர்ணம் எப்.எம், வசந்தம் எப்.எம் போன்ற வானொலி அலைகளும் தமிழ் ஒலிபரப்புத் துறையில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியுள்ளன. இவ்வானொலி அலைகள் போட்டி போட்டுக்கொண்டு பல, தரமான தமிழ்மொழியை மேம்படுத்தும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றன. எனவே தமிழ்மொழியின் வளர்ச்சியில் இவ்விரண்டு வானொலிகளும் தமது அரிய பங்களிப்பை செலுத்தி வருகின்றன.

மக்களின் மனங்களில் விரைவாக மாற்றத்தை ஏற்படுத்தும் தொலைக்காட்சி பல விடயங் களை மக்களிடம் கொண்டு செல்கிறது. இந்தியாவிலே முப்பதிற்கும் மேற்பட்ட தமிழ் தொலைக் காட்சி நிலையங்கள் உள்ளன.அவற்றில் சன் ரீ.வி , ராஜ் ரீ.வி , கலைஞர் ரீ.வி போன்றவையும் இன்னும் பலவும் தமிழ் இலக்கியத்துறைக்கும் அவ்வப்பொழுது தமது பங்கினையாற்று கின்றன. இவற்றில் முழுமையான நிகழ்ச்சிகளும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கா விட்டாலும் தமிழ்மொழி வளர்ச்சியில் இத் தொலைக்காட்சிகள் சில நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி ஒளிபரப்பி வருகின்றன. இதன் மூலம் தமிழ்மொழி வளர்ச்சியில் மாற்றங்கள் நிகழாமல் இல்லை.

இலங்கையில் ரூபவாஹினி, ஐ, வசந்தம் ரீ.வி, சக்தி ரீ.வி போன்றன தமிழ் தொலைக்காட்சி அலைவரிசைகளாகும். மறைமுகமான வர்த்தக நோக்கங்களைக் கொண்டு செயற்பட்டாலும் தம்மால் முடிந்த வரை தமிழ்மொழியின் தொடர் வளர்ச்சிக்கு இத்தொலைக்காட்சிகள் தமது பங்களிப்பை தம்மால் முடிந்தவரை பல நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகின்றது. வார நாட்களில் ஒளிபரப்பாகும் தூவானம், குட்மோனிங் ஸ்ரீலங்கா, வார இறுதி நாட்களில் சுற்றிவரும் பூமி, பயணம் போன்றனவும் ஒளிபரப்பாகி வருவதன் மூலம் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு தொலைக்காட்சிகள்

உதவுகின்றன எனலாம். இக்காலகட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் அசுர வேகத்தில் வளர்ச்சி யடைந்து வருகின்றது. இத்தகவல் யுகத்தின் பிரதான சாதனம் இணையம் என்றால் மிகையாகாது.

இன்று இனம் சார்ந்து மட்டுமே பேசப்படும் ஆயிரக்கணக்கான மொழிகளில் தமிழும் ஒன்று. அது பல நாடுகளில் பேசப்பட்டாலும் தமிழர்களால் பேசப்படும் முதன்மையான மொழியாகக் காணப் படுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சி குறித்து பிற்காலத்தில் திரும்பிப் பார்க்கும் எந்த ஒரு ஆராய்ச்சியாளரும் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நடைபெற்ற ஒரு திடீர் திருப்பத்தை கண்டு கொள்ளாமல் போகமாட்டான். அந்த திருப்பம் தான் தமிழும் கணினிப்பொறி நுட்பமும் கைகோர்த்துக் கொண்ட ஒரு அற்புத நிகழ்வாகும். தமிழில் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்த ஊடகம் இணையம் ஆகும். இணையத்தில் தமிழர்களின் தொடர்பாடல் ஆசியாவில் உள்ள ஏனைய மொழிகள் அனைத்துடனும் போட்டி போடக்கூடியளவிற்கு முன்னேறி உள்ளது.

தமிழ் சம்பந்தமான பத்திரிகை, சஞ்சிகை, செய்தித்தாள், சினிமா, இணையத் தகவல்கள், ஆவணப்படுத்தல் என்பவற்றை இணையத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

நாம் ஒரு பன்னாட்டுத் தமிழ் உறவை வேறு ஊடகங்கள் மூலம் சாத்தியப்படுத்த முடியவில்லை. ஆனால் மகத்தான வியூகங்களை அமைக்காமலேயே அதனை இணையம் சாதிக்கின்றது. இவை யாவும் இணையத்தின் மூலம் தமிழ் மொழியில் ஏற்பட்ட வளர்ச்சிகளே.

இந்த வகையில் மொழி ஊடகங்களின் மூலமாகவே நிலைத்து நிற்கின்றது. தொடர்ந்து நிலவுகின்றது. பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்றவை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு தமது பங்கினை ஆற்றியுள்ளதையும், ஆற்றிக் கொண்டிருப்பதையும் நாம் அறியமுடிகிறது.

உசாத்துணை நூல்

தமிழ் கட்டுரைகள் (Google)

கற்றல் கற்பித்தலில் ஊக்கம்
Motivation in Relation To Teaching and Learning

கு.துஸ்யந்தன்
B.A, Dip in Edu, M.Ed

அறிமுகம் - Introduction

கற்பித்தல் என்பது ஒருவர் அறிவைப் பெறுவதையும் விளங்கிக் கொள்வதையும், ஆற்றல்கள், பண்புகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதையும் திட்டப்படுத்திக்கொள்ளும் ஒரு நடவடிக்கை யாகும். அதன் மூலம் கற்பவர் பயனைப் பெற்றுக் கொள்கிறார். கற்பவரின் ஊக்கம் இயங்கினால் கற்றல் சிறப்பாக நடைபெறும். இக்கற்றல் நிகழ்வானது சூழ்நிலையைப் பொறுத்து மூன்று வகையாக அமைந்து வரலாம் அவை வருமாறு

i) வழமையான முறை (Formal)
ii) வழமைக்கு மாறான முறை (Non Formal)
iii) வழக்கமற்ற முறை (Informal)

ஆசிரியர்களும் மாணவர்களும் தனிப்பட்ட வேறு வேறான ஆளுமையைப் பிரதிபலிக்கின் றார்கள். ஊக்கத்தை ஏற்படுத்துகின்ற ஆளுமைத் தன்மைகளும் உள்ளன. ஓர் ஆசிரியர்களுக்குக் கற்பித்தல் பற்றிய அறிவிருந்தாலும் அது போதுமானது அல்ல. அத்துடன் அவர் தொடர்பு கொள்ளும் திறன், நுட்பம் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். மாணவரைப் புகழ்தல், பாராட்டுதல் மாணவர் களின் நடத்தையை உரியமுறையில் கணித்தல் போன்றவற்றில் மாணவர்களின் ஊக்கத்தைத் தூண்டும் தன்மை அவரில் தொழிற்பட வேண்டும்.

சாதகமான, ஊக்கத் தன்மையான நடத்தையை மாணவனில் ஏற்படுத்த ஆசிரியரின் செயற்பாடுகள் மிகவும் உதவுவனவாக இருத்தல் வேண்டும். நான்கு வகையான மாறிகள் (variable) ஆசிரியரின் வெற்றிகரமான கற்பித்தலை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன. அத்துடன் ஊக்கப் படுத்துவனவாகவும் உள்ளன. அவ்வாறான செயற்பாடுகள் பின்வருமாறு அமையலாம்.

1) பாடசாலை வேலையில் ஊக்கம், பாடத்தை நன்கு விளக்குகிறார், சிறந்த உதாரணங்களைக் கூறுகிறார் (50%)

2) நற்பண்புகளுடன், மகிழ்ச்சியாக விளங்குகிறார். விகடமாக கதைக்கிறார் (40%)

3) அவர் மனிதநேயம், நட்பு, கூட்டாளித்தனம் உள்ளவர் எங்களில் ஒருவர் (30%)

4) மாணவர்களைப் புரிந்தவர், அவர்களைப் பற்றியும், அவர் வளர்ச்சி பற்றியும் ஆர்வமுள்ளவர் (26%)

மேற்கூறப்பட்ட விபரங்கள் விரும்பத்தக்க சிறந்ததோர் ஆசிரியரைக் குறிக்கின்றன. இவ்வாறே விரும்பத்தகாத ஆசிரியர் ஒருவர் பற்றியதும், அவரது செயற்பாடு பற்றியதுமான கருத்துப் பின்வருமாறு அமைந்திருக்கிறது.

a) அவர் சிரிக்கமாட்டார், இடைக்கிடையே அவரது குணம் மாறுகின்றது. கோபப்படுவார், அடிக்கடி தம்நிலையை இழப்பார் (50%)

b) பாடசாலை வேலைகளுக்கு உதவமாட்டார், திட்டமிட்டு வேலை செய்யமாட்டார், பாடங்களுக்கு விளக்கமளிக்க மாட்டார் (30%)

c) சில மாணவர்களுக்குச் சாதகமாக நடந்து கொள்வார். சில மாணவர்களை மட்டும் நேசிப்பார் (20%)

d) தானே பெரியவர் என்ற கொள்கையுடையவர், கர்வங்கொண்டவர் (20%)

அதிக வெற்றிகரமான ஆசிரியர்கள் எல்லாவகையான மாணவர்களுக்கும் வளைந்து கொடுக்கக்கூடியவராக இருப்பார்கள். பயங்கரமான அடங்காத ஆசிரியர்கள் ஒரு சிலவகை மாணவர்களுக்கே பொருந்தக்கூடியவர்களாயிருப்பர்.

Teacher Interaction Styles

ஆசிரியர் - மாணவர் தொடர்பினை மேம்படுத்திக் கற்றல் மனப்பாங்கு, ஊக்கம் என்பவற்றை வளர்க்க உதவும் பான்மையில் பின்வரும் செயற்பாடுகள் அமைந்திருக்கவேண்டும்.

- மாணவர்கள் இயல்பாகவே சிறந்த செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.
- புதிய முறையில் அல்லது மாற்றமான வழியில் மாணவர்கள் தாமாகவே உணர்ந்து செயற்பாட்டில் ஈடுபடக்கூடியதான ஒரு சூழ்நிலையை மாணவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்தல்
- மாணவர்கள் குறித்த சூழ்நிலையிற் செய்யும் தவறுகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய உதவுதல்.
- ஆசிரியர்கள், உணர்ச்சி பூர்வமானதும், உடனடியாகத் தீர்க்கக் கூடியதுமான பிரச்சினைகளை இனங்கண்டு, உரிய சூழ்நிலைகளையும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

வழிப்படுத்தற் கற்பித்தலுக்கு மாற்றமான முறையிற் கற்பித்தல்

Non Directive Versus Directive Teaching

வகுப்பறைச் செயற்பாடுகளில் ஆசிரியர், மாணவர் தொடர்புகள் பலவாறு உள்ளன. அவையாவன

- மாணவரை மையமாகக் கொண்டது (Learning Centred)
- ஆசிரியரை மையமாகக் கொண்டது (Teacher Centred)
- சுதந்திரமானது (Democratic)
- சர்வாதிகாரமானது (Auto Cratic)

என்ற வகையிற் கையாளப்படலாம். இதில் முதலிரு வகையான கற்பித்தல் வகைகளையும் ஆய்வுசெய்து பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன.

1. ஆசிரியரை மையமாகக் கொண்ட கற்பித்தலால் மாணவரின் சுதந்திரம் பாதிக்கப்படுவது மட்டுமன்றி மாணவர்களின் மனோநிலை அடக்குமுறைக்கு உட்பட்டதாகவும், சுதந்திர தன்மையை இழந்ததாகவும் இருக்கும்.
2. மாணவரை மையமாகக் கொண்ட தீர்வு காண்பதற்கும், அவன்தன் ஆர்வத்துக்கேற்ப விடயங்களைத் தேடிக் கற்பதற்கும் உதவும் வகையிலும். அவனது நடத்தை பிறரோடு இணைந்து வாழவும், கருத்துக்களை மற்றவர்களுடன் பரிமாறவும் துணை செய்யக் கூடியதாக அமையும். இது மனப்பாங்கு மாற்றத்தையும் (Attitude change) ஏற்படுத்தும்.

   மாணவர்களின் கற்றல் ஊக்கலுக்கான வேறுபாடுகள் Students' Variables Related to motivation and Learning.

   நாம் மாணவர்களுக்கிடையே கற்றற் திறமையில் வேறுபாடுகள் உள்ளன என்கிறோம். ஆனால், மாணவர்களின் ஆளுமையிலும், வேறுபாடுகள் உள்ளன. அவையும் மாணவர்களின் கற்றற்றிறனில் வேறுபாடுகள் தோன்றுவதற்கு காரணங்களாகும். ஊக்கம், கற்றல் என்பவற்றிலும் அவ்வேறுபாடுகள் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.

1. மாணவர் ஆளுமை – (Student Personality)

கற்பித்தல் முறைகள், மாணவர்களின் ஊக்கம் என்பன கற்றலுக்குப் பெரிதும் உதவுவனவாக உள்ளன. வெவ்வேறு மாணவர் குழுக்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட முடிவில் இருந்து கற்றலில் மாணவர்களின் ஆளுமை, நடத்தை என்பவற்றிற்குப் பெரிதும் சம்பந்தமுள்ளதென்பது அறியப்பட்டுள்ளது. ஒரு விடயத்தைக் கற்கவேண்டியது முக்கியம் என்பதும் அதையிட்டுக் கவலை கொள்வதும் மாணவர்களின் ஆளுமை மட்டத்தில் உருவானவையாகும். இவை மாணவர்களின் கற்றற் செயற்பாட்டை ஊக்குவிப்பதாக உள்ளன.

2. புகழுக்கும் இகழுக்கும் ஈடுகொடுக்கும் மாணவர்கள் (Student's Reaction to Praise and Blame)

புகழ்தல் என்பது ஒரு சக்திவாய்ந்த ஊக்கியாக இருக்கிறது. மாணவர்களைப் பாராட்டும் போது மேலும்மேலும் முன்னேறவேண்டும் என்று ஆசைப்படுவார். கற்றலில் கூடிய அக்கறை செலுத்துவர் ஒரு பரிசோதனை புகழ்தல், வாழ்த்துதல் மூலம் கூடிய பயன் விளைந்தது என்பது அறியப்பட்டது. அதேபோல் விமர்சித்தல் (Criticism) பழித்துரைத்தல் (Blame) என்பவைகளாலும் கற்றலில் முன்னேற்றம் ஏற்பட வழியுண்டு. ஆனால் ஆள்வேறுபாடுகளுக்கமைவாக இவை செய்யப்படுகின்றன.

3. வெற்றி தோல்விகளுக்கு ஈடுகொடுக்கும் மாணவர்

வெற்றி தோல்வி என்பது எமது ஒவ்வொருவரினதும் வாழ்வில் ஏற்படக்கூடியதே. அதைப் பற்றிய அனுபவம் ஒவ்வொருவரிடமும் இருக்கலாம். இது ஆள்வேறுபாட்டை விளக்குவதாக உள்ளது. ஒரு மாணவன் ஒன்றிலே வெற்றிபெறும் போது அவரது மனதில் மகிழ்ச்சி தோன்றுகிறது. தோல்வி அடைந்த மாணவர்கள் துயருற்றிருக்காது மீண்டும் மீண்டும் பரீட்சை எழுதி வெற்றிபெற வேண்டுமென முயற்சிக்கிறார்கள். அதில் வெற்றியையும் சிலர் கண்டுகொள்கிறார்கள். அவர்களது ஊக்கமும் விடாமுயற்சியும் வெற்றிக்கு வழிசமைக்கின்றன.

கற்றல் முறையில் மாணவர் வேறுபடல்
Student Differences in Learning Style

கற்றலில் பல்வேறு முறைகள் உள்ளன. ஆனால் ஒரு முறையைவிட இன்னொன்று சிறப் பானது என்று கூறிவிடமுடியாது. கற்றலானது வாசிப்பு மூலமாகவும் செயற்பாட்டு மூலமாகவும், கேட்பதன் மூலமாகவும் நிகழ்கின்றன. இங்கு இம்மூன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளால் கற்கமுடியும். ஊக்கம் வெற்றிகரமாக அமைந்தால் கற்றல் சிறப்பானதாக அமையும் எனக் கருதலாம். ஒரு மாணவனுக்கு உதவும் ஒரு வழிவகை பிறிதொரு மாணவனுக்குப் பயன்படாதிருக்கலாம். எனவே உபகரணங்களைப் பயன்படுத்தும் முறை (Instrument method) சிறப்பான முறையாக அமையும் எனலாம்.

ஊக்கக் கற்றலைத்தூண்டும் கற்பித்தல் முறைகள்
Teaching Techniques to enhance Motivation and Learning

மாணவர்கள் எல்லோரையும் ஒரே வகையில் ஒரே அளவில் ஊக்கத்தைத் தூண்டிக் கற்பிக்கக் கூடிய சிறந்த முறை இல்லை என்றே கூறலாம். ஏனெனில் ஆசிரியர் - மாணவர் ஈடுபாடு வேறுபட்டதாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் இருக்கிறது. எனவே, சகல மாணவர்களையும் வகுப்பறைக் கற்றலில் ஈடுபடுத்தும்போது அவர்களின் தனியாள் வேறுபாடுகளை அறிந்து அவர் களைப் பொதுவாக வழி நடத்தக்கூடிய கற்பித்தலில் ஈடுபடுவது ஆசிரியரின் பெரும் பொறுப்பாகும்.

இதன் பொருட்டுப் பின்வரும் கற்றல் முறைகளை மாணவர்கள் முன்னெடுப்பதற்கு ஆசிரியர் அறிவுறுத்த வேண்டும்.

(i) கற்றலில் செயல்முறையையும் ஓய்வையும் பிரயோகித்தல் Distribution of Practice and Rest in Learning

ஊக்கலின் மூலம் நடைபெறும் கற்றலானது கால இடைவெளியின்றித் தொடர்ந்து நடை பெறின் மூளை களைப்படைந்துவிடும் அதற்கு ஓய்வு தேவையாகிறது. இதனால் விட்டுவிட்டுக் கற்றல் தொடர்ச்சியாகக் கற்பதைவிட நன்மை பயப்பதாகும். இதனால் பாடங்களைத் தொடர்ந்து கற்காது இடைக்கிடை கவனத்தை வேறுபக்கம் செலுத்தக்கூடிய அப்பியாசங்களில் மாணவர் களை ஈடுபடுமாறு செய்தல்வேண்டும். சிறந்த ஆற்றல் நிகழ இந்த விதமான யுக்தி அவசியமாகும்.

ii) மேலதிகக் கற்றல் (Over Learning)

முன்பு இருந்த பழக்கம் மறந்த நிலையில் இருந்ததால் அதை ஞாபகப்படுத்துமாறு மீண்டும் கற்பதையே மேலதிகக் கற்றல் எனும் பதம் கருதுகிறது.

iii) முழுமையாகவும் பகுதியாகவும் கற்றல் (Whole and Part Learning)

கற்பதற்கு உரிய விடயம் பற்றி முழுமையாகத் தெரிந்துகொண்டு பகுதி பகுதியாகக் கற்றல் கற்றலில் சிறந்த முறையாகும். படிக்க வேண்டிய விடயம் விரிவாகவும் நீண்டகாலம் எடுக்கக்கூடியதாகவும் இருக்கும்போது இவ்வகைக் கற்றலை மேற்கொள்ளல் வேண்டும் என்பதையே இது குறிப்பிடுகிறது.

iv) குறுகிப்போகும் கற்றல் (Divergent versus Convergent Learning)

கற்ற விடயத்தை சுருக்கி விளங்கிச் சுருக்கமான விடைபெறக்கூடியவாறு தெளிவாகக் கற்கும் முறையே இதுவாகும்.

முடிவுரை - (Final Remarks)

ஊக்கம் , கற்பித்தல், கற்றல் என்பவை ஒன்றோடொன்று இணைந்த மிகவும் சிக்கலான செயற்பாடுகளாகும். இன்று அநேக நிலைமைசார் ஆசிரியர்களும், பல்வகைமை உடைய மாணவர்களும் இருப்பதால், கற்றல் - கற்பித்தல் தத்துவத்திற்கு அமையச் சிறந்த கற்பித்தலை மேற் கொள்ள முடியாதென்பது உண்மையானதே. மாணவர்களின் பல்வகைமைக்கு ஏற்பவும் அவர்தம் ஆர்வம், ஆற்றல் என்பவைக்கு ஏற்பவும் கற்றல் கற்பித்தற் செயற்பாடு அமையும் எனவும் கருதமுடிகிறது. பொதுவாக ஆசிரியர்கள் ஒழுங்கான முறையிலே கற்பித்தலைத் திட்டமிட்டால் வெற்றிகரமான கற்றற் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லலாம் என்பதில் ஐயமில்லை. எனவே நாம் ஒவ்வொருவரும் சிறந்த ஆசிரியராகத் திகழவேண்டும் என்ற எண்ணத்தை ஆசிரியர்கள் தம் மனதிலிருத்திச் செயற்படுதல் இன்றியமையாததாகும்.

உசாத்துணை

1. Http//Wikipedia.org/wiki
2. w.w.w.Education.Com
3. சின்னத்தம்பி.மா.(2009), ஆசிரியரை விளைதிறன் மிக்கவராக்கல், சேமமடு பதிப்பகம்.

எமது அதிபர்

ஜெ.லிவேனா
தரம் -7 B

விண்ணில் மின்னும் மீன்களிடையே
விளக்கி வாழ்ந்தார் எம் அதிபர்
மண்ணில் மக்கள் மகிழ வாழ்ந்தவர்
எம் அதிபர்

நிலவே நீயும் நீள் வானில்
நிலவுவதால் நில வென்றார் எம் அதிபர்
உலகே உமக்காய் ஒளி தந்தது
உலவும் எமக்கென உருமாறியது

வழியில் கார்மேகம் காண்பது போல
நான் உம்மை கண்டேன்
எழில் மீது தண்மதி உம் மீது
நான் இரக்கம் கொண்டேன்

நல்லது செய்ய வேண்டுமென
நான் நினைத்தேன்
எம் அதிபரை என்றும் மறக்காமல்
மனதில் வைத்து மகிழ்வேன்.

பாடசாலைகளில் விழுமியக் கல்வியின் அவசியம்

திருமதி சு.இராஜவரதயம்
ஆசிரியர்

"இந்து சமுத்திரத்தின் முத்து" எனப் போற்றப்படும் எமது நாடானது இன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடாகவுள்ளது. அபிவிருத்தியடைந்த உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கு எழுத்தறிவு வீதம் உயர்வாகவே உள்ளது. ஒரு நாட்டின் அபிவிருத்தியானது பெரும்பாலும் கல்வியிலேயே தங்கியுள்ளது. எனவே பாடசாலைக் கல்வியானது வெறும் இலக்கணக்கல்வியாக அமையாது சிறந்த விழுமியப்பண்புகளையும் பிள்ளைகளிடையே வளர்க்கக் கூடிய வகையில் கல்வி வழங்கப்படவேண்டும். இதற்கு கலைத்திட்டமும் முக்கிய காரணியாக அமையும். கணனி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் பல்வேறு நாடுகளிலும் விழுமியக் கல்வியின் அவசியம் நன்கு உணரப்பட்டுள்ளது.

விழுமியக்கல்வியானது குழந்தைப் பருவத்திலிருந்தே விதைக்கப்பட வேண்டிய தொன்றாகும். வெவ்வேறு சூழலில் இருந்தும் பல்வேறுபட்ட பழக்கவழக்கங்களுடன் முன்பள்ளி களில் காலடி எடுத்துவைக்கும் குழந்தைகளுக்கு நல்ல விழுமியப்பண்புகளை ஊட்டவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது தொடர்ந்துவரும் காலங்களிலும் படிப்படியாக எல்லா வயதுப் பிள்ளை களுக்கும் போதிக்கப்படவேண்டும். எனவே ஆசிரியர்கள் இவ்விடயத்தில்கூடிய கரிசனை உள்ளவர் களாக இருக்கவேண்டும். ஆசிரியர்கள் பிள்ளைகளில் மிக்க அன்புடையவராக இருப்பது சிறப்பான விடயமாகும். ஆசிரியர் மட்டுமன்றி அன்றாட வாழ்க்கையிலும் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் அன்பான முறையிற் பேசுவதன் வாயிலாக அவர்களை நல்ல சிந்தனையுள்ளவர்களாக ஆக்கமுடியும்.

உண்மை, நேர்மை, அன்பு, அறம், கீழ்ப்படிவு, இரக்கம், ஏனையோருக்கு உதவுதல் போன்ற அனைத்து விழுமியப்பண்புகளையும் வழங்கும் வகையில் கல்வி அமைய வேண்டும். 'மகாத்மா காந்தி கல்வி பற்றிக் கூறும்போது" உடல், உள்ளம், ஆன்மீகம் எனும் மூன்றினாலும் நிலைபெறச் செய்வதே கல்வி" என்கிறார் சுவாமி விவேகானந்தர் கல்வி பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். "முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக்கொள். அப்போது எஜமானாகும் தகுதி தானாகவே உனக்கு வந்து சேரும்" என்கிறார். எனவே கல்வியியலாளர்கள் நாம் அனைவரும் ஒழுக்கமுள்ள வர்களாக வாழவேண்டுமென்பதை ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

ஆகையினால் ஔவையார், யேசுநாதர், நபிகள் நாயகம், பாரதியார் போன்றோர் கூறிய விழுமியப்பண்புகளை பிள்ளைகள் விரும்பும் விதத்தில் கதை மூலமோ, நாடக வடிவிலோ, விளையாட்டினூடாகவோ அவர்களிடம் வளர்க்கமுடியும். விளையாட்டுக்கள் அனுபவங்களை ஏனை யோருக்கு கூறும் விதத்தில் அமைதல் நல்லது. அவ்வாறாயின் சமத்துவப்பண்பு, விட்டுக்கொடுத்தல், வெற்றி தோல்வியை ஏற்கும் மனோபக்குவம் போன்ற நற்பண்புகள் பிள்ளைகளிடம் உருவாக வாய்ப்பேற்படும்.

நவீன யுகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் சூழலுடன் அல்லது சமூகத்துடன் இயைபாக்கமடைந்து வாழவேண்டியிருப்பதால் நடை, உடை, பாவனை, பேசும் மொழி என்ப

வற்றில் சிலமாற்றங்களை ஏற்படுத்துவது அவசியம். ஆனால் நல்ல விழுமியப் பண்புகளிலிருந்து நாம் ஒருபோதும் நழுவிவிடக்கூடாது. இன்று உலகநாடுகள் பலவற்றுள் இப்பண்புகள் மிக வேகமாக அழிவடைந்து செல்வதை பத்திரிகை மூலம் நாம் அறிவோம்.

காலங்காத்தாலை கண்விழித்தெழுந்து பெற்றோரை வணங்கிப்பாடசாலை செல்லும் பிள்ளைகள் எத்தனைபேர்? டாக்டராக, எஞ்சினியராக, பொறியியலாளர்களாகவென பல்வேறு தொழில்களில் பிள்ளைகளை உருவாக்கிய பெற்றோர்களில் பெரும்பான்மையினர் மூப்படைந்த பின்னர் முதியோர் இல்லங்களில் சேர்க்கப்படுவதை யாவரும் அறிவீர்கள்.

எனவே நல்லதொரு சமூக வளர்ச்சிக்காக, வளம்மிக்க நாடாகத் திகழ்வதற்காக ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமயப்பெரியார்கள், சமூக உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து மானிட எழுச்சிக்காகக் குரல்கொடுப்போம்.

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" இந்த நாடு நாளை அவர்கள் கைகளிலே.

அன்னை தெரேசா

எஸ்.மகதி
தரம் 5A

- உலகம் போற்றும் சமூக சேவையாளர்களில் அன்னை தெரேசாவும் ஒருவராவார்.
- இவர் தமது சேவையால் மக்கள் மனங்களில் இடம்பெற்றவர்.
- இவரது இயற்பெயர் அக்னஸ் கான்ஸ்காபோஜா என்பதாகும்.
- இவர் யூகோஸ்லாவியா நாட்டில் ஸ்காப்சி என்னும் சிற்றூரில் 27.08.1910 இல் பிறந்தார்.
- தொண்டு செய்வதற்காகவே இந்தியா வந்தார்.
- இவர் 1931 இல் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்.
- இதன் பொருட்டுத் தனது பெயரைத் தெரேசா என மாற்றிக் கொண்டார்.
- இந்தியாவில் கொல்கத்தா நகரில் தனது தொண்டுகளை மேற்கொண்டார்.
- 'சிசுபவன்' என்னும் குழந்தைகள் காப்பகத்தை நிறுவினார்.
- தெருவோரங்களில் இறக்கும் நிலையிலுள்ள ஏழைகளை எடுத்து வந்து காப்பாற்றும் 'நிர்மல் இதயம்' என்னும் நிலையத்தை உருவாக்கினார்.
- அன்னை தெரேசாவின் பணிகள் அளப்பரியன.
- அவரது தொண்டுகளை பாராட்டும் வகையில் 1979 இல் நோபல் பரிசு வழங்கப்பட்டது.
- இந்திய அரசு இவருக்கு மிக உயர்ந்த பட்டமான 'பாரத ரத்னா' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.
- அன்னை தெரேசா 1995.09.05 இல் அமரத்துவமடைந்தார்.
- பாப்பரசர் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கியுள்ளார்.
- அன்னை தெரேசாவின் பெயர் உள்ளவரை நிலைக்கும் என்பதில் ஐயமில்லை.

இலக்கிய மீளாய்வை விளங்கிக் கொள்ளல்

திரு.செ.லதீசன்
ஆசிரியர்

ஆய்வொன்றின் முக்கிய படிநிலையாகவும், முதல் படிநிலையாகவும் அமைவது இலக்கிய மீளாய்வாகும். "ஆய்வொன்றுடன் தொடர்புடைய எழுத்தாக்கங்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், பருவ இதழ்கள், கலைக்களஞ்சியங்கள், ஆய்வறிக்கைகள், வரலாற்றுக் குறிப்புக்கள், அரச ஆவணங்கள் கையேடுகள், சுற்றறிக்கைகள் போன்ற அனைத்தையும் சேகரித்து அவற்றினை நன்கு வாசித்து அதிலிருந்து ஆய்வுக்குத் தேவையான குறிப்புக்களை வரைந்து கொள்ளும் செயற்பாடே இலக்கிய மீளாய்வு எனப்படும்" (சின்னத்தம்பி.க.2007.27) "குறித்த விடயம் தொடர்பான ஆய்வைத் தொடங்கும் போது அவ்விடயம் பற்றி அதுவரை நடைபெற்ற ஆய்வு முயற்சிகளை அறிந்துகொள்ளவேண்டும். முன் நடந்த ஆய்வை அறிந்தால் தான் நாம் ஆய்வை எங்கே தொடங்கவேண்டும் என்பது தெரியும்".

ஆய்வுப் பொருட்களின் விடயம் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அவற்றின் பகுப்பாய்வுகள், முடிவுகள், முறையியல்கள் என்பவற்றை தேடியறியும் செயல்முறையே இலக்கிய மீளாய்வாகும். அதாவது ஆய்வின் தேவைக்கேற்ப அந்த ஆய்வினைத் திரட்டி தொகுப்பாக்கம் செய்வதாகும். ஆய்வின் நோக்கம் ஆழமானதாக அமையவும் பயனுறுதித் தன்மைகளை அதிகரிக்கவும் ஆய்வின் தோற்றப்பாடு தொடர்பான புதிய தகவல்களின் அடிப்படையில் அல்லது ஏற்கனவே உள்ள தரவுகளின் அடிப்படையிலோ முற்றிலும் புதிய பகுப்பாய்வை முன்வைக்க பெரிதும் உதவுகின்றன.

ஒரு பிரச்சினையைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும் ஏற்கனவே அது பற்றிய ஆராய்ச்சிகள் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் கோட்பாடுகள், சிந்தனைகள், முடிவுகள் பற்றி அறிந்து கொள்வதற்கும் ஆய்வாளன் தெரிவு செய்த பிரச்சனை பற்றிய ஆரம்பக் கருத்துக்களை மறுசீரமைத்து கொள்ளவும் இலக்கிய மீளாய்வு துணை புரிகிறது.

ஆய்வு விசாரணைகள் முன்னைய ஆய்வுகளுடன் எவ்வாறு தொடர்புபட்டுள்ளன என்பதன் காட்டுகையாக அமைவதும், அதுவரை வெளிவந்த ஆய்வுகள் தொடர்பான தொகுப்பு நிலை யாகவும் பொருள்கோடலாகவும் அமைவதும், ஏனைய ஆய்வுகளிலிருந்து குறித்த ஆய்வு எவ்வாறு தனித்துவம் கொண்டுள்ளது என்பதை இனங்கண்டு கொள்வதற்குரிய ஏற்பாடாக அமைவதும், குறித்த ஆய்வு பிற ஆய்வுகளுடன் இணைந்தும் வேறுபட்டும் நிற்பதைக் கண்டறிவதற்கான சந்தர்ப்ப மாக அமைவதும், இலக்கிய மீளாய்வு என்று சொல்லப்படுகிறது.

தனது ஆய்வு தொடர்பான முன்னைய ஆய்வு பற்றி அறிந்து அதை முன்னுதாரணப்படுத்தல், ஆய்வு நோக்கங்கள் அல்லது கருதுகோள்களை உருவாக்குதல், ஆய்வு திசை திரும்பிச் செல்லா மலிருக்க எண்ணக் கருவாக்கச் சட்டகமொன்றை (Conceptual) உருவாக்குதல் என்பன இலக்கிய மீளாய்வின் நோக்கங்களாகும். தெரிந்தெடுக்கப்பட்ட ஆய்வுப் பொருள் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது? வேறு எந்த ஆய்வாளர் இதனை முக்கியம் என்று கருதியுள்ளனர்? இதற்கு முன்னர் இத்துறையில் ஆய்வு செய்தோர் யாவர்? எப்பிரிவில் ஆய்வு செய்யாது விட்டுள்ளனர்? ஆய்வில் மேலும் எத்தகைய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன? என்பவற்றை அறிவதற்கான அடிப்படையாக இலக்கிய மீளாய்வு அமைகின்றது?

ஆய்வைத் திட்டமிடவும் வடிவமைக்கவும், வழிநடத்தவும், விமர்சன அடிப்படையில் நோக்கவும் ஆய்வுச் செயன்முறையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை தெளிவாக விளங்கிக் கொள்ளவும் இலக்கிய மீளாய்வு உதவியாக அமைகின்றது.

ஓர் ஆய்வாளன் தான் மேற்கொள்ளும் ஆய்வுடன் தொடர்பான பல்வேறு விடயங்களை அறிந்து கொள்வதற்காக ஆய்வு தொடர்பான தெளிவினை பெறுவதற்காகவும் இலக்கிய மீளாய்வை மேற்கொள்ள வேண்டும்.

இலக்கிய மீளாய்வானது ஆய்வைத் திட்டமிடவும் வழிநடத்தவும் விமர்சன ரீதியில் நோக்கவும் ஆய்வுக்காக திட்டமிடும் காரணிகளை விளக்கவும் தகவல்களை சேகரிக்கவும் உதவு கின்றது. தகவல்களை திரட்டலானது தொடக்க மூலகங்களை இனங்கண்டு கொள்ளுதல், ஆய்வுக்கு உதவக் கூடிய முதல்தர ஆய்வு இயல்களை பயன்படுத்துதல், ஆய்வுத் தலைப்புப் பற்றிய தகவல் களை இணையத்தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளுதல், ஆய்வுத் தலைப்பு தொடர்பான நூல்கள், கட்டுரைகள் என்பவற்றை வாசித்தல் போன்ற பல்வேறு வகைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. இக்குறித்த ஆய்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னாய்வுகள் பற்றிய சுருக்கங்களும் அவை பற்றி மதிப்பீடுகளும் இங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வை நியாயப்படுத்தும் விடயங்களாகும்.

இலக்கிய மீளாய்வானது இரு பிரதான நோக்கங்களை கொண்டதாக உள்ளது.

1. ஆய்வு விடயம் தொடர்பான அறிமுறை கோட்பாட்டு சட்டகத்தை அமைத்தல்
2. மேற்கொள்ளும் ஆய்வுடன் தொடர்புடைய முன்னைய ஆய்வு விடயங்களை அறிதல் என்பன வாகும்.

வெளிவாரி விளைவுகள் ஒரு நோக்கு

திருமதி மீரா மனோகரன்
ஆசிரியர்

சந்தைப் பொருளாதாரத்தில் அரசின் முக்கிய பங்கையும் சந்தை சிறப்பாக இயங்க பொதுவான அரச உதவி, சட்ட ஒழுங்கு உரிமை நலன் சூழல் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் பொது தனியார் முதலீடுகளைப் பாதுகாத்தல் சந்தைத் தோல்விக்கான அம்சங்களைச் சீராக்க பொருத்தமான கொள்கைகளை வகுத்தல் பொதுப் பண்டங்கள் அரசு வழங்கல் என்பவற்றுடன் தொடர்புடைய தாகவும் அமைகின்றன. இத்தகைய சந்தைப் பொருளாதாரத்தைப் பின்பற்றி புதிதாக கைத்தொழில் மயமாகிய நாடுகளது துரித அபிவிருத்திப் போக்கும் இலங்கை உட்பட பல நாடுகளையும் சந்தைப் பொருளாதாரக் கொள்கைகளை பின்பற்றத் தூண்டியுள்ளன. இன்று வளர்ச்சியடைந்து வரும் உலகமயமாக்கல் என்ற எண்ணக் கருவுக்கு சந்தைப் பொருளாதாரம் மேலும் முக்கியத்துவம் பெறும் எனலாம். இத்தகைய சந்தைப் பொருளாதாரத்தில் காணப்படும் முக்கிய குறைபாடாகவும் அதன் தோல்விக்கு வழிவகுப்பதாகவும் "வெளிவாரி விளைவுகள்" காணப்படுகின்றன. எனவே இத்தாக்கங்கள் சந்தைப் பொருளாதாரத்தில் எவ்வாறு காணப்படுகிறது என நோக்குதல் அவசியமா கின்றது.

பொருளாதார நடவடிக்கையொன்றின் காரணமாக அதனுடன் தொடர்பான வெளித்தரப் பினருக்கு ஏற்படும் நன்மைகள் அல்லது தீமைகள் வெளிவாரி விளைவு எனப்படும். அதாவது உற்பத்தி அல்லது நுகர்வு தொடர்பான பொருளாதார நடவடிக்கை ஒன்றின் காரணமாக அவ் உற்பத்தியாளர் அல்லது நுகர்வோர் தவிர்ந்த சமூகத்திலுள்ள இன்னுமொருவருக்கு அல்லது மூன்றாம் நபருக்கு ஏற்படும் நன்மை அல்லது தீமை வெளிவாரி விளைவுகள் எனப்படும். இதனால் இவை மூன்றாந் தரப்பு விளைவு அல்லது அயலவர் விளைவு எனவும் கூறப்படும்.

இவ்வெளிவாரி விளைவுகள் கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை. அத்துடன் சந்தைக் கேள்வி, நிரம்பல்களிலும் பிரதிபலிக்கப்படுவதில்லை. இதனால் சந்தை தோல்விகள் ஏற்பட்டு மிகையுற்பத்திகள் அல்லது குறை உற்பத்திகள் இடம்பெற்று தவறான வள ஒதுக்கீடுகள் இடம் பெறுகின்றன.

வெளிவாரி விளைவுகளின் வகைகள்

1. வெளிவாரி விளைவின் தன்மையின் அடிப்படையில்
   - (i) நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள்
   - (ii) எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள்
2. பொருளாதார நடவடிக்கையின் அடிப்படையில்
   - (i) உற்பத்தி தொடர்பான வெளிவாரி விளைவுகள்
   - (ii) நுகர்வு தொடர்பான வெளிவாரி விளைவுகள்
3. கலப்பு வெளிவாரி விளைவுகள்

நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் /வெளிவாரி நன்மைகள்
Positive Externalities / External Benefits

உற்பத்தி அல்லது நுகர்வு தொடர்பான பொருளாதார நடவடிக்கை ஒன்றின் காரணமாக அவ் உற்பத்தியாளர் அல்லது நுகர்வோர் தவிர்ந்த சமூகத்திலுள்ள இன்னுமொருவருக்கு அல்லது மூன்றாம் நபருக்கு ஏற்படும் நன்மை வெளிவாரி நன்மைகள் எனப்படும். இவ்வெளிவாரி நன்மைகள் சந்தைக் கேள்வி நிரம்பல்களில் பிரதிபலிக்கப்படாமையினால் சந்தைத் தோல்வி ஏற்பட்டு தவறான வள ஒதுக்கீடுகள் இடம்பெறுகின்றன.

இவ் வெளிவாரி நன்மைகளை பின்வரும் இரு வகையாக பிரிக்கலாம்.

1. உற்பத்தி தொடர்பான நேர்க்கணிய வெளிவாரி விளைவு
2. நுகர்வு தொடர்பான நேர்க்கணிய வெளிவாரி விளைவு

உற்பத்தி தொடர்பான நேர்க்கணிய வெளிவாரி விளைவு

உற்பத்தி நடவடிக்கை ஒன்றின் காரணமாக அவ் உற்பத்தியாளர் தவிர்ந்த சமூகத்திலுள்ள இன்னுமொருவருக்கு அல்லது மூன்றாம் நபருக்கு ஏற்படும் நன்மையினை இது குறிக்கும். இவை சந்தை நிரம்பல்களில் பிரதிபலிக்கப்படாமையினால் சந்தைத் தோல்வி ஏற்பட்டு தவறான வள ஒதுக்கீடுகள் இடம்பெறுகின்றன.

உதாரணம் : -

பூக்களை விற்பனை செய்யும் நோக்கில் ஒருவர் பூந்தோட்டத்தை அமைப்பதால் அயலிலுள்ள தேனீ வளர்ப்போனுக்கு செலவின்றி அதிக தேன் பெறுவதால் தேனீ உற்பத்திக்கான சராசரி செலவு குறைதல் இதனால் தேனீ வளர்ப்பவர் நன்மை அடைவார்.

நுகர்வு தொடர்பான நேர்க்கணிய வெளிவாரி விளைவு

நுகர்வு நடவடிக்கை ஒன்றின் காரணமாக அந்நுகர்வோர் தவிர்நத சமூகத்திலுள்ள இன்னு மொருவருக்கு அல்லது மூன்றாம் நபருக்கு ஏற்படும் நன்மையினை இது குறிக்கும்.

இவை சந்தைக் கேள்விகளில் பிரதிபலிக்கப்படாமையினால் சந்தைத் தோல்வி ஏற்பட்டு தவறான வள ஒதுக்கீடுகள் இடம்பெறுகின்றன.

உதாரணம் : -

தனிநபர் தொற்று நோயை சுகாதார சேவையினூடாக தடைசெய்வதால் சமூகத்திற்கு கிடைக்கும் நன்மை சமூகத்தில் தொற்றுநோய் பரவ விடாது ஒழிக்கப்படல்.

எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் / வெளிவாரித் தீமைகள்
Negative Exeternalities / External Cost

உற்பத்தி அல்லது நுகர்வு தொடர்பான பொருளாதார நடவடிக்கை ஒன்றின் காரணமாக அவ் உற்பத்தியாள் அல்லது நுகர்வோர் தவிர்ந்த சமூகத்திலுள்ள இன்னுமொருவருக்கு அல்லது மூன்றாம் நபருக்கு ஏற்படும் தீமை வெளிவாரித் தீமைகள் எனப்படும். இவ்வெளிவாரித் தீமைகள் சந்தைக் கேள்வி நிரம்பல்களில் பிரதிபலிக்கப்படாமையினால் சந்தைத் தோல்விகள் ஏற்பட்டு தவறான வளஒதுக்கீடுகள் இடம்பெறுகின்றன.

இவ் வெளிவாரித் தீமைகளை பின்வரும் இரு வகைகளாக பிரிக்கலாம்.

1. உற்பத்தி தொடர்பான எதிர்க்கணிய வெளிவாரி விளைவு
2. நுகர்வு தொடர்பான எதிர்க்கணிய வெளிவாரி விளைவு

உற்பத்தி தொடர்பான எதிர்க்கணிய வெளிவாரி விளைவு

உற்பத்தி நடவடிக்கை ஒன்றின் காரணமாக அவ் உற்பத்தியாளர் தவிர்ந்த சமூகததிலுள்ள இன்னுமொருவருக்கு அல்லது மூன்றாம் நபருக்கு ஏற்படும் தீமையினைக் குறிக்கும். இவை சந்தை நிரம்பல்களில் பிரதிபலிக்கப்படாமையினால் சந்தை தோல்விகள் ஏற்பட்டு தவறான வள ஒதுக்கீடுகள் இடம்பெறுகின்றன.

உதாரணம் : -

தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் நச்சு வாயுக்களினால் சூழல் மாசடைதல் இதனால் அயலில் உள்ளோருக்கு நோய் பரவுகின்றன.

நுகர்வு தொடர்பான எதிர்க்கணிய வெளிவாரி விளைவு

நுகர்வு நடவடிக்கை ஒன்றின் காரணமாக இந்நுகர்வோன் தவிர்ந்த சமூகத்திலுள்ள இன்னு மொருவருக்கு அல்லது மூன்றாம் நபருக்கு ஏற்படும் தீமையினை இது குறிக்கும். இவை சந்தைக் கேள்விகளில் பிரதிபலிக்கப்படாமையினால் சந்தை தோல்வி ஏற்பட்டு தவறான வளஒதுக்கீடுகள் இடம்பெறுகின்றன.

உதாரணம் : -

வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் எழுப்பும் சத்தங்களினால் அயலவர்கள் பாதிப்படைதல்

கலப்பு வெளிவாரி விளைவுகள் Mixed Externalities

உற்பத்தி அல்லது நுகர்வு தொடர்பான பொருளாதார நடவடிக்கை ஒன்றானது குறிப்பிட்ட உற்பத்தியாளர் அல்லது நுகர்வோர் தவிர்ந்த சமூகத்திலுள்ள இன்னுமொருவருக்கு அல்லது மூன்றாம் நபர்களில் ஒருவருக்கு நன்மையினையும் அதேவேளை இன்னுமொரு மூன்றாம் நபருக்கு தீமையினையும் ஏற்படுத்துமாயின் அது கலப்பு வெளிவாரி விளைவு எனப்படும்.

உதாரணம் : -

ஒலிபெருக்கி ஒன்றிலிருந்து வெளியேறும் சத்தம் நோயாளி ஒருவருக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் அதேவேளை சாதாரண ஒருவருக்கு நன்மையினையும் ஏற்படுத்தும்.

தனியாள் செலவு,	வெளிவாரிச் செலவு,	சமூகச் செலவு
Private Cost	External Cost	Social Cost

தனியார் செலவு என்பது பொருட்கள் சேவைகளின் உற்பத்தி அல்லது நுகர்வுக்காக தனிநபர் அல்லது நிறுவனத்திற்கு ஏற்படும் செலவைக் குறிக்கும். இது உற்பத்தி அல்லது நுகர்வுச் செலவுக்குள் அடங்கும். இத்தனியார் செலவுகள் உற்பத்தியாளரின் அல்லது நுகர்வோரின் கணக்கேடுகளில் பதியப்படும் செலவுகளாக காணப்படும். அதேவேளை சந்தைக் கேள்வி நிரம்பல்களிலும் பிரதி பலிக்கப்படும் செலவுகளாகவும் காணப்படும்.

பண்டம் அல்லது சேவை ஒன்றில் உற்பத்தி அல்லது நுகர்வு நடவடிக்கை ஒன்றின் காரண மாக அதன் உற்பத்தியாளர் அல்லது நுகர்வோன் தவிர்ந்த சமூகத்திலுள்ள இன்னுமொருவருக்கு அல்லது மூன்றாம் நபருக்கு ஏற்படும். செலவுகள் வெளிவாரிச் செலவு எனப்படும். இவ்வெளிவாரிச் செலவுகள் உற்பத்தியாளரின் அல்லது நுகர்வோரின் கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை. அத்துடன் சந்தைக் கேள்வி நிரம்பல்களிலும் பிரதிபலிக்கப்படுவதில்லை. இதனால் இவை சந்தை தோல்வியை ஏற்படுத்தி தவறான வள ஒதுக்கீடு இடம்பெற வழிவகுக்கின்றன.

தனியார் செலவுடன் வெளிவாரிச் செலவினையும் கூட்ட வருவது சமூகச் செலவு எனப்படும்.

சமூகச் செலவு = தனியர் செலவு + வெளிவாரிச் செலவு

இச் சமூகச் செலவு முழுவதும் சந்தைக் கேள்வி நிரம்பல்களில் பிரதிபலிக்கப்படாமையினால் சந்தை தோல்விகள் ஏற்பட்டு தவறான வள ஒதுக்கீடுகள் இடம்பெறுகின்றன.

தனியார் நலன்	வெளிவாரி நலன்	சமூக நலன்
Private Benefit	External Benefit	Social Benefit

தனியார் நலன் என்பது பொருட்கள் சேவைகளின் உற்பத்தி அல்லது நுகர்வினால் தனிநபர் அல்லது நிறுவனத்திற்கு ஏற்படும் அனுகூலத்தை குறிக்கும். இவை உற்பத்தியாளரின் அல்லது நுகர்வோரின் கணக்கேடுகளில் பதியப்படுவதுடன் சந்தைக் கேள்வி நிரம்பல்களிலும் பிரதிபலிக் கப்படும்.

பண்டம் அல்லது சேவை ஒன்றின் உற்பத்தி அல்லது நுகர்வு நடவடிக்கை ஒன்றின் காரண மாக அதன் உற்பத்தியாளர் அல்லது நுகர்வோர் தவிர்ந்த சமூகத்திலுள்ள இன்னுமொருவர் அல்லது மூன்றாம் நபர் அடையும் நன்மை வெளிவாரி நலன் எனப்படும். இவ்வெளிவாரி நன்மைகள் உற்பத்தியாளரின் அல்லது நுகர்வோரின் கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை. அத்துடன் சந்தைக் கேள்வி நிரம்பல்களிலும் பிரதிபலிக்கப்படுவதில்லை. இதனால் இவை சந்தைத் தோல்வியை ஏற்படுத்தி தவறான வளஒதுக்கீடு இடம்பெற வழிவகுக்கின்றன.

தனிநபர் அல்லது நிறுவனம் ஒன்றின் பொருட்கள் சேவைகளின் உற்பத்தி அல்லது நுகர் வினால் ஏற்படும் தனியார் நன்மையையும் வெளிவாரி நன்மையையும் உள்ளடக்கியது. சமூக நலன் எனப்படும்.

சமூக நலன் = தனியார் நலன் + வெளிவாரி நலன்

உதாரணமாக வருமானம் பெறும் தனிப்பட்ட நோக்கில் பூந்தோட்டம் வைத்திருப்பவன் பூக்களை விற்பனை செய்வதன் மூலம் வருமானம் பெறுகின்றான். இந்த தனிப்பட்ட நன்மை யுடன் வெளிவாரியாக அயலில் உள்ளவர்கள் பூந்தோட்டத்தின் கவர்ச்சியால் பெறும் அனுகூலங் களை உள்ளடக்கியதாக சமூக நன்மை காணப்படும்.

வெளிவாரி விளைவுகளினூடாக சந்தைத் தோல்வியும் தவறான வளஒதுக்கீடும்

சந்தைத் தோல்வி என்பது பொருளாதாரத்தில் சந்தை சக்திகளான கேள்வியும் நிரம்பலும் பொருளாதார ரீதியில் உச்சதிறமையாகவும் சமூக ரீதியில் நீதித்தன்மை உடையதாகவும் காணத் தவறுகின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சந்தை தோல்வியைத் தழுவிக்கொள்ளும் அதாவது சந்தையில் அடைந்து கொள்ளக்கூடிய மிகச் சிறந்த உத்தமமான நிலையினையும் திறமையான வளஒதுக்கீட்டு நிலையினையும் அடையத் தவறுகின்ற சூழ்நிலை சந்தைத் தோல்வியாகும். எனவே இங்கு திறமையான வளஒதுக்கீடு என்பது சமூக எல்லைச் செலவும், சமூக எல்லை நலனும் சுயமாக காணப்படுகின்ற நிலையைக் குறிக்கும்.

உற்பத்தி தொடர்பான நேர்க்கணிய வெளிவாரி விளைவு காரணமாக சந்தைத் தோல்வி ஏற்படுதல்

உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது தனியார் நலன்களை மட்டுமே கவனத்தில் கொள்கின்றனர். அதாவது இலாபங்களை கணிக்கும்போது தமது உற்பத்தி நடவடிக்கை காரணமாக ஏற்படும் வெளிவாரி நலன்களை இவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. அதாவது சமூக நலன் முழுவதையும் இவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. இதனால் உற்பத்தி மட்டமானது உத்தம மட்டத்தை அடையாமையினால் சந்தை தோல்விகள் ஏற்படுகின்றன.

இதனைப் பின்வரும் வரைபடத்தில் காட்டலாம்.



படத்தில் உற்பத்தி தொடர்பான நேர்க்கணிய வெளிவாரி விளைவு காரணமாக சந்தை நிரம்பலானது அதிகரிக்கின்றது. இதனால் உத்தம விலை மட்டம் குறைவடைகின்றது. உத்தம வெளியீட்டு மட்டம் அதிகரிக்கின்றது. ஆனால் இந்நிலைமைகள் சந்தையில் காட்டப்படாமையினால் சந்தை தோல்வி ஏற்படுகின்றது. இதனால் விலை மட்டம் உயர்வாகவும் வெளியீட்டு மட்டம் குறைவாகவும் காட்டப்பட்டு Q1-Q என்றளவு குறை உற்பத்தி இடம்பெற்று தவறான வள ஒதுக்கீடுகள் இடம்பெறுகின்றன. S=S1 வளையிகளுக்கிடையிலான இடைவெளி வெளிவாரி நன்மையைக் காட்டுகின்றது.

உற்பத்தி தொடர்பான எதிர்க்கணிய வெளிவாரி விளைவு காரணமாக சந்தை தோல்வி ஏற்படல்

உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும்போது தனியார் செலவுகளை மட்டுமே கவனத்தில் கொள்கின்றனர். இவர்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளால் ஏற்படும் வெளிவாரிச் செலவுகளை கவனத்தில் கொள்வதில்லை. அதாவது சமூகச்செலவு முழுவதையும் இவர்கள் கவனத்தில் கொள்வதில்லை.

இதனால் உற்பத்தி மட்டமானது உத்தம மட்டத்தை அடையாமையினால் சந்தை தோல்விகள் ஏற்படுகின்றன.

இதனைப் பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.



படத்தில் உற்பத்தி தொடர்பான எதிர்க்கணிய வெளிவாரி விளைவு காரணமாக சந்தை நிரம்பலானது குறைவடைகின்றது. இதனால் உத்தம விலை மட்டம் அதிகரிக்கின்றது. உத்தம வெளியீட்டு மட்டம் குறைவடைகின்றது. ஆனால் இந்நிலைமைகள் சந்தையில் காட்டப்படாமையினால் சந்தை தோல்வி ஏற்படுகின்றது. இதனால் விலை மட்டம் குறைவாகவும் வெளியீட்டு மட்டம் கூடுதலாகவும் காட்டப்பட்டு Q-Q1 என்றளவு மிகை உற்பத்தி ஏற்பட்டு தவறான வளஒதுக்கீடுகள் இடம்பெறுகின்றன.

படத்தில் எல்லைச் சமூகச் செலவுக்கோடும் (MSC) எல்லை சமூகநலன் கோடும் (MSB) ஒன்றையொன்று வெட்டும் புள்ளியே சமூகத் திறன் வாய்ந்த சமநிலைப் புள்ளியாக கருதப்படும். (MSC=MSB) இதில் நிர்ணயிக்கப்படும் வெளியீட்டு மட்டமே உத்தம வெளியீடாகும்.

நுகர்வு தொடர்பான நேர்க்கணிய வெளிவாரி விளைவு காரணமாக சந்தைத் தோல்வி ஏற்படுதல்

நுகர்வோர்கள் தமது நுகர்வு பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும்போது தனியார் நலன் களை மட்டுமே கவனத்தில் கொள்கின்றனர். பொருட்கள் சேவைகளை நுகரும்போது ஏற்படும் வெளிவாரி நலன்களைப் பற்றி இவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. அதாவது சமூகநலன் முழுவதையும் இவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. இதனால் உற்பத்தி நுகர்வு மட்டமானது உத்தம மட்டத்தை அடையாமையினால் சந்தை தோல்விகள் ஏற்படுகின்றன.

இதனை பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.



படத்தில் நுகர்வு தொடர்பான நேர்க்கணிய வெளிவாரி விளைவு காரணமாக சந்தைக் கேள்வியானது அதிகரிக்கின்றது. இதனால் உத்தம விலை மட்டம் உத்தம வெளியீட்டு மட்டம் ஆகிய இரண்டும் அதிகரிக்கின்றது. ஆனால் இந்நிலைமைகள் சந்தையில் காட்டப் படாமையினால் சந்தை தோல்வி ஏற்படுகின்றது. இதனால் விலை மட்டம் வெளியீட்டு மட்டம் ஆகிய இரண்டும் குறைவாக காட்டப்பட்டு Q-Q1 என்றளவு குறை உற்பத்தி இடம்பெற்று தவறான வளஒதுக்கீடுகள் இடம்பெறுகின்றன.

நுகர்வு தொடர்பான எதிர்க்கணிய வெளிவாரி விளைவு காரணமாக சந்தை தோல்வி ஏற்படுதல்

நுகர்வோர்கள் தமது நுகர்வு பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும்போது தனியார் செலவுகளை மட்டுமே கவனத்தில் கொள்கின்றனர். இவர்கள் தமது நுகர்வு நடவடிக்கைகளால் ஏற்படும் வெளிவாரிச் செலவுகளைப் பற்றி கவனத்தில் கொள்வதில்லை. அதாவது சமூகச் செலவு முழுவதையும் இவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. இதனால் உற்பத்தி/நுகர்வு மட்டமானது உத்தம மட்டத்தை அடையாமையினால் சந்தை தோல்விகள் ஏற்படுகின்றன.

இதனைப் பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.



படத்தில் நுகர்வு தொடர்பான எதிர்க்கணிய வெளிவாரி விளைவு காரணமாக சந்தைக் கேள்வியானது குறைவடைகின்றது. இதனால் உத்தம விலை மட்டம், உத்தம வெளியீட்டு மட்டம் ஆகிய இரண்டும் குறைவடைகின்றது. ஆனால் இந்நிலைமைகள் சந்தையில் காட்டப்படாமையினால் சந்தை தோல்வி ஏற்படுகின்றது. இதனால் விலை மட்டம் வெளியீட்டு மட்டம் ஆகிய இரண்டும் கூடுதலாக காட்டப்பட்டு Q-Q1 என்றளவு மிகை உற்பத்தி இடம்பெற்ற தவறான வள ஒதுக்கீடுகள் இடம்பெறுகின்றன.

வெளிவாரி விளைவு காரணமாக சந்தைத் தோல்வி ஏற்படுவதை தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்

அரசு மானியங்கள் வழங்குதல், வரி விதித்தல், பங்கீட்டு நடவடிக்கைகள் , உரிமைப் பத்திர கட்டணம் அறவிடல், சட்டங்களை விதித்தல், வெளிவாரி விளைவுகளை தவிர்ப்பதற்கு நிறுவனங்கள் தாமாகவே நடவடிக்கையை மேற்கொள்ளுதல், பாதிப்புக்களை ஈடுசெய்ய இலாபத்தில் ஒரு பகுதியை ஒதுக்குதல், ஒலி மாசடைவதைத் தவிர்ப்பதற்கு தொழிற்சாலையினுள் நவீன உபகரணங்களை பொருத்துதல்.

இலங்கையின் கல்வி வரலாற்றில் மரபுவழிக் கல்வி முறை

அனுசியா சுந்தரச்செல்வன்
ஆசிரியர்

வரலாற்று நூல்களின் பிரகாரம் இலங்கையின் கல்வி வரலாறானது கி.பி 6ஆம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சியடைந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. கி.மு 6ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு 16ஆம் நூற்றாண்டு வரை கல்விப் போக்கினை மரபுவழிக் கல்வி வரலாறென்றும், கி.பி 1505 - 1948 வரையாக கல்வி வளர்ச்சிக் காலத்தை ஐரோப்பியர் காலக் கல்வி என்றும், 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் வளர்ச்சியடைந்து வந்த கல்விப் போக்கினை சுதந்திர இலங்கையின் கல்வி வரலாறென்றும் வரலாற்று ஆசிரியர்களும் கல்வியியலாளர்களும் பகுத்து நோக்கியுள்ளனர்.

பூர்வீக கால இலங்கையின் கல்வி வரலாற்றினை அறிய உதவும் மூலாதாரங்களாக தமிழ், சிங்கள, பாளி மொழியிலான இலக்கியங்கள் அகழ்வாராய்ச்சிகளின்போது கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள், கல்வெட்டுக்கள் பிறநாட்டார் குறிப்புக்கள், வம்சக் கதைகள் என்பனவும் சான்று பகர்கின்றன.

பூர்வீக காலக் கல்வி வரலாற்றிலே இந்து மரபை அடிப்படையாகக் கொண்ட பிராமணியக் கல்வி, பௌத்த மரபை அடிப்படையாகக் கொண்ட சிங்களவர் கல்வி, அராபியக் கல்வி முறையை அடிப்படையாக கொண்ட இஸ்லாமியர் கல்வி முறை என்பன வளர்ச்சியடைந்ததன் காரணமாகவும் அவை செல்வாக்கு செலுத்திய கால வரன்முறையினை அடிப்படையாகக் கொண்டு மரபுவழிக் கல்வியினை பிராமணிக் கல்வி, பௌத்தக் கல்வி, இஸ்லாமியக்கல்வி என வகுத்து நோக்கலாம். மரபுவழிக் கல்வி வரலாற்றின் ஆரம்பகால பகுதியினை செல்வாக்கினை அறியமுடிகின்றது. தென் இந்தியாவில் ஆரம்பகால பெருங்கற்கால, குறுணிக் கற்கால வரலாற்றுக்காலத்தில் நிலவிய இந்துக் கல்வியை ஒத்த மரபே இங்கு பின்பற்றப்பட்டு வந்தது. குறிப்பாக தீச மன்னனின் ஆட்சிக் காலத்தில் மகிந்ததேரர் வரும் வரை பிராமணியக் கல்வி மரபே செல்வாக்கு செலுத்தி வந்தது என்பதற்கு சான்றுகள் உண்டு.

மகாவம்சத்தின் கூற்றுப்படி அனுராதபுரத்தை தலைநகராக்கி ஆட்சி செய்த பண்டுகாபய மன்னனிற்கு கல்வி வழங்கியவர் "பண்டுல" என்ற பிராமணரேயாவார். பண்டுகாபய மன்னனின் புரோகிதராக பண்டுலவின் மகன் சந்திரபானு என்னும் பிராமணரே இருந்தார். விஜயமன்னனின் ஆலோசகராகவும் உபதிஸ்ஸ என்னும் பிராமணரே இடம்பெற்றிருந்தார். பண்டுகாபய மன்னன் நகரிற்கு வெளியே பிராமணர் தங்குவதற்கு வீடுகள் அமைத்துக் கொடுத்ததாகவும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது. ஆரிய வம்சப்படி கற்பித்தல் கடமைகளில் பிராமணரே ஈடுபட்டு வந்தனர். என்பதற்கு வட இந்திய வரலாற்றுக் கால நூல்கள் சான்று பகர்கின்றன. குறிப்பாக மௌரியப் பேரரசின் அரச சபை அறிஞராக இருந்தவர் கௌடில்யன் என்னும் பிராமணரே ஆவார்.

பண்டைய இந்துக் கல்வியானது பின்வரும் இடங்களில் கற்பிக்கப்பட்டு வந்ததாக "சபா ஜெயராசா இலங்கையின் கல்வி வரலாறு" 2008 என்ற நூலிலே குறிப்பிடுகின்றார்.

1. திண்ணைப் பள்ளிக்கூடங்கள்

2. குருகுலப் பள்ளிக்கூடங்கள்

3. மடாலயங்கள்

4. சங்கம்

திண்ணைப் பள்ளிக்கூடங்களில் இலக்கணம், இலக்கியம், தர்க்கம், கணிதம், அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு, சூழல், சமூக சிந்தனை போன்ற விடயங்கள் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. குருகுலக் கல்விக்கூடங்கள் கவின்கலைக்கூடங்கள், தொழிற்பயிற்சி வழங்கும் கூடங்கள் என இருவகையாகக் காணப்பட்டன. பொதுவாக இரண்டிற்கும் மாணவர் சென்று குருவிற்கும் குருபத்தினிக்கும் தொண்டுகள் பலவற்றை செய்து கற்றார்கள். இங்கு வினாவிடை மூலமாக கற்பித்தல் சிறப்பிடம் பெற்றிருந்தது.

இந்துக்கல்வி வரலாற்றிலே உயர்கல்வி நிறுவனங்களாக மடாலயங்கள் விளங்கின. திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், நகுலேச்சரம் முதலான கோவில்களை அண்டியதாக இவை விளங்கின. இங்கே சமய ஆய்வுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் மடங்கள் அழிக்கப்பட்டாலும் சமய மறுமலர்ச்சிக் காலத்தில் சேர்.பொன் இராமநாதன், ஆறுமுக நாவலர் போன்ற சமயப் பெரியார்களின் முயற்சியினால் மடங்கள் மீள எழுச்சியுற்றபோதும் அவை இளைப்பாறவும், துறவிகள், பாதசாரிகள் தங்குவதற்குமே பெரிதும் பயன்படுத்தப்பட்டன.

யாழப்பாண இராசதானிக் காலத்தில் தமிழ் மன்னர்களாகிய பரராஜசேகரன், சங்கிலியன், காசிநைனார், செகராஜசேகரன் ஆகியோரது காலத்தில் உயர்கல்விப் பீடங்களாக தமிழ் சங்கங்கள் விளங்கின. இங்கு நூல் ஆக்கம், நூல் திறன் ஆய்வு போன்ற செயற்பாடுகள் இடம்பெற்றுவந்த தாகவும், பரராஜசேகரம், செகராஜசேகரம் போன்ற நூல்கள் யாழ்ப்பாணத்து தமிழ் சங்கத்தால் அரங்கேற்றப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து ஆறுமுகநாவலரால் எழுதி வெளியிடப்பட்ட தமிழ் இலக்கணச் சுருக்கம் தமிழ் வினாவிடை, பாலபோதி போன்ற நூல்களை வெளியிடுவதற்கு தமிழ்ச்சங்கம் பெரிதும் உதவியதாகவும் வரலாற்றின் வாயிலாக அறிய முடிகின்றது.

இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் முக்கிய மூலாதாரமாக விளங்குகின்ற மகா வம்சம் எனும் நூல் புராதன காலத்தில் இருந்து செவி வழியாகவும் வாய் வழியாகவும் பேணப்பட்டு வந்த கதைகளையும், புராணக் கதைகளையும் சமகால நிகழ்வுகளையும் அடி ஒற்றி எழுதப்பட்டதாக அதன் ஆசிரியரான மகாநாமதேரர் குறிப்பிடுகின்றார். எனவே கூறப்பட்ட கதைகள் உண்மை யானவை எனக் கருதும் பட்சத்தில் இலங்கையின் வரலாற்றுத் தகவல்களையும் கல்வி முறை யினையும் அறிய உதவும் இராமாயணம், மகாபாரதம் என்பன கூறும் கருத்துக்களையும் ஏற்றே ஆக வேண்டும்.

இராமாயணத்தில் இலங்கை மன்னன் இராவணனின் மாளிகையில் வில்வித்தை, வாட் பயிற்சி என்பன கற்பிக்கும் இடம் மாடமாளிகையில் இருந்ததாக கூறப்படுகின்றது.

அதாவது குருவின் இல்லம் மாணவன் சென்று குருவிற்கும், குரு பத்தினிக்கும் தொண்டுகள் செய்து கல்வி கற்றலாகும். சிற்பம், ஓவியம், நடனம், நாடகம், சமயக் கல்வி என்பன இவ்வாறே போதிக்கப்பட்டன. இராவணனின் புஷ்பக விமானம் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்ததாக காணப்பட்டதுடன் அரண்மனையில் நடனமாதர் குழு ஒன்றும் காணப்பட்டது.

எனவே இராமாயணக் கருத்துப்படி இலங்கைக்கு ஆரியர்வர முன்னரே இந்து மரபை அடிப்படையாகக் கொண்ட குருகுலக் கல்வி வளர்ச்சியடைந்திருந்ததனை அறியமுடிகின்றது. கி.பி 247 இல் இலங்கையை தேவநம்பியதீசன் ஆட்சி செய்த காலத்தில் அசோகச்சக்க வர்த்தியின்

முயற்சியினால் அவரது மகனாகிய மகிந்ததேரர் மூலமாக இலங்கையில் பௌத்த மதம் பரப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து பௌத்த மதக்கல்வி வளர்ச்சியடையத் தொடங்கியது. அரச ஆதரவு பெற்று அது நாடு பூராகவும் வளர்ச்சியடையத் தொடங்கியது.

ஆரம்ப காலங்களில் "பிராமிய" மொழிகளிலே கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. போதனாசிரியர் களாக பிக்குமார் விளங்கினர். கல்வி கற்பிக்கும் நிலையங்களாக விகாரைகள், ஆராமைகள், சிலை மனைகள் என்பன விளங்கின. மகிந்ததேரர் மகாவிகாரையில் தங்கியிருந்து கல்வி கற்பித்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

கி.பி 1ஆம் நூற்றாண்டளவில் வலகம்பா மன்னனால் கட்டப்பட்ட அபயகிரி விகாரை உலக பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனமாக விளங்கியது. கி.மு 161 அளவில் ஆட்சிக்கு வந்த துட்டகைமுனு மன்னன் லோவாம காபாயாவை பௌத்தர்களின் கல்வி நிறுவனமாக பயன்படுத்தினான்.

பௌத்தர்களின் கல்வி வரலாற்றில் கிராமங்களிலே பௌத்த பிக்குகளை ஆசிரியர்களாக கொண்ட கல்வி முறை பன்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. நல்ல நாளிலே கல்வி ஆரம்பிக் கப்படும் ஆரம்பகாலங்களில் ஓலைச்சுவடிகளிலேயே எழுதிப் படித்தார்கள். பௌத்த கல்வியின் கலைத் திட்டமானது பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கின்றது.

1. இடங்களைக் கற்றல்
2. பௌத்த சுப தினங்களைக் கற்றல்
3. இலக்கணம் கற்றல்
4. புத்திரன் வாழ்க்கை வரலாற்றைக் கற்றல்

போன்றன பிற்காலத்தில் குறிப்பாக தம்பதெனியா இராசதானிக் காலத்தில் இருந்து சிங்கள மொழியும் கலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அனுராதபுரம் பொலநறுவை இராசதானிக் காலத்தில் தொழில்நுட்பக் கல்வியும் வளர்ச்சியடைந்து பௌத்தர்களின் கல்வி வரலாற்றினை சிறப்பித் திருந்தது என்பதனை அறியமுடிகின்றது. கட்டடக்கலை, நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் சித்திரக்கலை என்பன கற்பிக்கப்பட்டன. காஷ்மீர் இலக்கிய நூலாகிய இராஜதரங்கினியில் இலங்கையைச் சேர்ந்த நீர்ப்பாசனவியல் வல்லுனர்கள் காஸ்மீரில் நீர்ப்பாசன பணியில் ஈடுபட்ட துடன் அங்கு நீர்ப்பாசனவியற் தொழில்நுட்பத்தை கற்பித்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது.

பௌத்தர்களது கல்வி வரலாற்றினை எடுத்து நோக்கும்போது அங்கு கலைத்திட்டத்தில் பல்வேறு விடயங்கள் உள்வாங்கப்பட்டிருப்பினும் கல்வியைப் போதிப்பவர்களாகவும் பொறுப்புக் கூறுபவர்களாகவும் பிக்குமார்களே காணப்பட்டதனால் அவர்களது கல்விப்போக்கில் உலகியலை விட ஆன்மீகமே முக்கியம் பெற்றிருந்தது.

கி.பி 7ஆம் நூற்றாண்டு தொடக்கம் இந்து சமுத்திரத்தின் வர்த்தக ஆதிக்கம் அரேபியர்களின் கைக்கு மாறியது. அதன் விளைவாக வர்த்தக நோக்கில் வந்து இலங்கையில் குடியேறிய அரேபியர் களாகிய இஸ்லாமியர் இலங்கையின் தமிழ் சமூகத்துடன் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்கள். இதன் விளைவாக இஸ்லாமியக் கல்வி முறையும் அரபு மொழியும் செல்வாக்குப் பெற்றது.

இஸ்லாமியரது ஆரம்பக் கல்வியானது பள்ளிவாசல்களிலே கற்பிக்கப்பட்டு வந்தது. அத்தகைய ஆரம்பப் பாடசாலைகள் "மக்தப்" எனப்பட்டன. குர்ஆன் ஓதுதல், இஸ்லாமிய சமயநெறி ஒழுக்கங்களைக் கற்றல், எழுதக் கற்றல், கணிதம் போன்ற பாடங்கள் ஆரம்பக் கல்விக்கலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்தன.

உயர்கல்வி வழங்கும் நிறுவனங்களாக "மந்ரசாக்கள்" விளங்கின. இங்கு குர்ஆன் தொடர்பான ஆய்வும், இலக்கணம், இலக்கியம், தர்க்கம், சமய மெய்யியல் , உலகியல் இஸ்லாமிய சட்டங்கள் என்பன கலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டன.

இலங்கையில் இஸ்லாமியரின் வருகையோடும் அவர்களிடம் உயர்ச்சி பெறத் தொடங்கிய தமிழ்க்கல்வி வளர்ச்சியோடும் தமிழ் யாப்பு மரபை பின்பற்றி இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் தோற்றம் பெறத் தொடங்கின. நாட்டார் இலக்கிய மரபை அடியொற்றிய செய்யுள்கள், உரைநடை இலக்கியங்கள் என்பன தமிழில் தோற்றம் பெற்றமை தமிழ்மொழி வளர்ச்சிக்கு இஸ்லாத்தின் பங்களிப்பை பறைசாற்றி நிற்கின்றது.

இலங்கையின் புராதன கால கல்வி வரலாற்றினை ஆராய்ந்து பார்க்கும்போது, இந்து, பௌத்த, இஸ்லாமிய, மதங்களை பிரதிநிதித்துவப்படுத்திய மதக்கல்வி வளர்ச்சியடைந்து வந்த நிலையினை அறிய முடிகின்றது.

உசாத்துணை நூல்கள்

1) செ.கிருஷ்ணராசா - இலங்கை வரலாறு , பிறைநிலா வெளியீடு

2) சபா.ஜெயராசா - இலங்கையின் கல்வி வரலாறு , சேமமடு பதிப்பகம்

3) இலங்கை வரலாறு

ஒன்றுபட்டால் .....

எஸ்.தர்சிகா
A/L Com 2007

கனவுகள் ஒன்றுபட்டால்
இலட்சியம் மலரும்
மனங்கள் ஒன்றுபட்டால்
காதல் மலரும்
மதங்கள் ஒன்றுபட்டால்
மனிதநேயம் மலரும்
உறவுகள் ஒன்றுபட்டால்
உயிரொன்று மலரும்
உண்மைகள் ஒன்றுபட்டால்
நீதி மலரும்
திறமைகள் ஒன்றுபட்டால்
புதுமைகள் மலரும்
நட்சத்திரங்கள் ஒன்றுபட்டால்
சூரியன் மலரும்
வண்ணங்கள் ஒன்றுபட்டால்
உருவங்கள் மலரும்
கட்சிகள் ஒன்றுபட்டால்
சமாதானம் மலரும்

உன்னை நீயே எழுது....

தி.தனுஷ்டிகா
தரம் 11A

உன் கண்ணீர்த்துளிகள்
குளமாக வேண்டாம்
சமுத்திரமாகட்கும்
ஒவ்வொரு துளிகளும்
உன் வேதனைகளின் சாதனை!

சோகம் உன்னைச் சோதிக்கும் போது
சிரித்தபடி வணக்கம் சொல்
அது வந்த வழி சென்றுவிடும்
பதில் வணக்கம் சொல்லியபடி

அழுகை உன் விதியென்று
அவதிப்படாதே.....
கண்ணீர் கடந்த இதயம்
மிகவும் அழகானது... தெளிவானது
மழைமேகத்தையும் வானத்தையும் எண்ணிப்பார்
புரிந்துவிடும்

உன் எண்ணங்களை ஆழப்பழகிக் கொள்
அது உன் வாழ் நாட்களை வசந்தமாக்கும்.
எழுத்துக்களை உன் விழிகளுக்குள் நிரப்பிவை
அது உன்னைக் கொண்டு உன் விதியினை
எழுதவைக்கும்.

உன்னை நீயே எழுதும் போது
உலகம் உன்னை திரும்பிப் பார்க்கும்
உனக்குள் நீயே உலகம் காண்பாய்!
அப்போது கண்ணீர்த் துளிகள்
நீ தேடியும் காணமாட்டாய்.

ஆசான்

வ.லக்ஸனா
12 Com (2017)

அழகு மிகுந்த சேலைகட்டி
அதற்கு ஏற்ற பொட்டும் வைத்து
அரை நொடியில் முகம் திருத்தி
அவசரமாய் பள்ளி வரும்
உயிருள்ள இயந்திரம் நீங்கள்

அதிகாலை கண்விழித்து
அரையிருட்டில் அடுப்பெரித்து
விடியும் வரை வாசல் கூட்டி
வெளிச்சம் வர கடைக்கு ஓடி
கட்டிலருகே தேனீர் வைத்து
கணவனைத் துயிலெழுப்பும்
கலியுகத்து நளாயினி நீங்கள்

இரவிரவாய் குறிப்பெழுதி
இடது கையால் தொட்டிலாட்டி
குழாய் நீரில் துணி துவைத்து
குளிக்கும் போது அழுது தீர்ந்து
படியேறித் துணி உலர்த்தி
பாதம் நோக மடித்து வைக்கும்
பற்றரி ரோபோ நீங்கள்

குழந்தைகளை வெளிக்கிடுத்தி
குழப்படிக்கு பதில் கொடுத்து
அவசரத்தில் பவுடர் அப்பி
ஆட்டோவுக்குள் தலைசீவி
கடிகார முள்ளோடு
சதிராடிப் போராடும்
சாட்டையில்லா பம்பரம் நீங்கள்.

பசிவந்து வயிறுகிள்ள
பாணோடு பன்னும் வாங்கி
பாதியிலே கடித்து விழுங்கி
கதவோடு செருப்பு தேடி
தெருமுனையில் பஸ் பிடித்து
பந்தயத்து குதிரை போல பாய்ந்து
வருவீரே பள்ளிக்கு

இத்தனை துன்பங்களையும் மனதுள் புதைத்து இன்முகம் காட்டி எமை அரவணைக்கும் எம் அன்பு ஆசான்கள்.

உடல் நலம் பேணும் இலக்கியங்கள்

திருமதி மே.தயாபரன்
ஆசிரியர்

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றார் தமிழ்ப் பெரும் மூதாட்டி ஔவையார். பிறப்புக்களில் மிகவும் அரிதான பிறவியாக மானிடப் பிறவியை சிறப்பித்துக் காட்டியுள்ளார். மக்கட் பிறப்பு பிரமாவின் படைப்பின் மணிமுடி என்பார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் புல்லாகிப், பூடாய், புழுவாய், மரமாகிப், பல்மிருகமாகிப், பறவையாய்ப், பாம்பாகிக் கல்லாய், மனிதராய்.... எனப் பதினான்கு பிறவிகளைப் பிறந்திளைத்தேன் எம்பெருமான் எனக் கூறியுள்ளார் சிவபுராணத்தில். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? என்றார் தாயுமான சுவாமிகள்

"அரும் பெறல் யாக்கை" என்று எமது உடலின் சிறப்பை அருமையாகக் காட்டியுள்ளார் நாலடியார்.

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுள்ளே உறு பொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்தோம்புகின்றேனே

என்று திருமூலர் அழகாகக் காட்டியுள்ளார். உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்று பாடியிருப்பது உண்மைதான். உடம்பு இறைவன் எழுந்தருளியிருக்கும் உயர்ந்த கோயில். ஆதலால் உடல் நலத்தை நாம் பேணவேண்டும். உடல் நலத்தை கவனித்தால் தான் மனிதன் நூற்றாண்டு காலம் வாழலாம்.

தமிழ் இலக்கியங்களில் உடல் நலம் பேணும் வழிகளை பல புலவர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

ஔவையார் தனது ஆத்திசூடியில் நோய்க்கு இடம் கொடேல் - நோய் உடலில் அணுகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் , மீதூண் விரும்பேல் - அளவுக்கு அதிகமாக உணவை உண்ண வேண்டாம் என்றும் கூறுகின்றார்.

கொன்றைவேந்தனில் பெண்களுக்கு அறிவுறுத்துகின்றார் பெண்பாற் புலவர் ஔவையார் உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு - உணவை குறைவாக உண்ணுதல் பெண்களிற்கு அழகைத் தரும் என்கிறார்.

ஔவையாரின் நல்வழியில் வரும் ஒரு பாடலை நாம் பார்க்கும் போது

"எல்லாப் படியாலும் எண்ணிலால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலி நோய்ப் புண் குரும்பை - நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினால் ஆம் கமல நீர் போல
பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு

எல்லா வகையாலும் நினைத்துப் பார்த்தால் இந்த உடம்பானது கெட்ட புழுக்களுக்கும் ஏராளமான பிணிகளுக்கும் இருப்பிடமாக உள்ளது. அதாவது பல வகையான நோய்களுக்கும்

இருப்பிடமாகும். அறிவுடையோர் இதை அறிந்திருப்பதோடு இதைப் பற்றி எவரிடமும் பேசாமல் தாமரை இலைத் தண்ணீர் போல வாழ்வார். இப்பாடல் மூலம் கவிஞர் மனிதர்களின் உடல் எவ்வகையானது என்றும் அதைப்பேண வேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துக்காட்டுகிறார்.

திருவள்ளுவர் திருக்குறளில் உடல் நலத்திற்கு வேண்டிய அரிய கருத்துக்களை விரிவாக கூறுகின்றார். உடலைப் பேணி வளர்க்கும் வழிகளையும் எடுத்துக் காட்டுகின்றார். இவரது குறள்கள் இரு மருந்துகளை தந்து எமது நோய்களைத் தீர்க்கின்றது உளநோய்க்கும், உடல் நோய்க்கும் மருந்து தரும் இணையற்ற நூல் திருக்குறளே.

வள்ளுவர் பல நோய்களுக்குக் காரணமாயுள்ள நீரைக் குறித்து இரண்டு குறட்பாக்களில் அரிய கருத்துக்களைக் தண்ணீரைக் குறித்து உட்பகை என்னும் அதிகாரத்தில்

"நிழல் நீரும் இன்னாத இன்னா தமர் நீரும்
இன்னாவாம் இன்னா செயின்"

ஒருவனுக்கு வசிப்பதற்கு நிழல் தருகின்ற இடமும் குடிக்கின்ற நீரும் நோயைத் தருமாயின் விலக்கப்பட வேண்டும். அது போல துன்பம் செய்யும் இயல்புகளையுடைய சுற்றத்தவரையும் விலக்க வேண்டும். வாய்மை அதிகாரத்தில் வள்ளுவர் உடல்தூய்மையையும் உள்ளத் தூய்மையையும் வற்புறுத்தியுள்ளதைக் காணலாம்.

"புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப்படும்"

என்னும் குறளில் உடல் நலத்திற்கு உடல் தூய்மையும் உள்ளத் தூய்மையும் ஆகிய இரண்டும் வேண்டும் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். உடல் நலத்திற்கு நீரால் குளிப்பது மட்டும் போதாது. உள்ளமும் வாய்மையுடையதாக விளங்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மேலும் கள்ளுண்ணுதலை வள்ளுவர் "நஞ்சுண்பவர் கள்ளுண்பவர்" என்று மது அருந்துதல் உயிரைக் கொல்லும் நஞ்சை அருந்துவதாகும் என அறிவுறுத்தியுள்ளார்.

அவசியமான உடல் நலக் கருத்துக்களை "மருந்து" என்னும் அதிகாரத்தில் அளவாக உண்ண வேண்டுவதைக் குறித்தும் சீரணமானது அறிந்து உண்ண வேண்டுவதையும் கூறியுள்ளார்.

"மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

என்றும்

"அற்றால் அளவு அறிந்து உண்க அஃது உடம்பு
பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு"

என்றும் குறிப்பிட்டுள்ளார். சாப்பிட்ட உணவு சீரணமானது அறிந்து மறுவுணவு உண்ண வேண்டும் என்பது இங்கே வற்புறுத்தப்பட்டுள்ளது. ஒருமுறை சாப்பிட்ட உணவு சீரணமாக 3 மணிநேரம் வேண்டும். ஆதலால் கண்ட நேரமெல்லாம் கண்ட கண்ட பொருளை உண்டு வயிற்றைக் கெடுத்தலாகாது. அளவறிந்து உண்பது சீரணமாகும் என்பதை அறிந்து உண்டால் ஒருவர் நீண்ட காலம் வாழலாம்.

இதுவே மருந்து என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியதாகும்.

"தீயளவு அன்றித் தெரியான் பெரிது உண்ணின்
நோயளவு இன்றிப் படும்"

சீரணிக்கும் அளவு அறியாது மிகுதியாக உண்பவனிடத்து நோய் அளவில்லாமல் உண்டாகும். ஒருவன் வயிற்றுப்பசி அறிந்து உடல் இயல்பு அறிந்து, நாவடக்கித் தக்க உணவு உண்ணுதல் வேண்டும் என்றும் எச்சரிக்கை செய்கிறார்.

ஒவ்வொருவருக்கும் செய்யும் வேலையைப் பொறுத்து உணவு உண்ணவேண்டும். ஆண் களுக்கு 3000 முதல் 3500 கலோரி தரக்கூடிய உணவு தேவையாகும். பெண்களுக்கு, ஆண் களுக்கு வேண்டிய அளவில் ஐந்தில் நான்கு பங்கு வேண்டும். இதைப் பெறுவதற்கு நம்முடைய அன்றாட உணவில் உயிர்ச்சத்துக்கள் A,B,C,D, இருத்தல் வேண்டும். இச்சத்து கூடினாலும் குறைந் தாலும் உடல் நலம்கெடும். உணவு அளவு மிகுந்தாலும் வேண்டிய அளவுக்குக் குறைந்தாலும் உடல் நலம்கெடும். ஆதலால் நாம் நமது உடம்பின் இயல்பறிந்து வெயிற்காலம், குளிர்காலம், மழைக்காலம் இவற்றிற்கு ஏற்றவாறு தக்க உணவை அளவில் மிகாமலும் பெரிதும் குறையாமலும் உண்ணுதல் வேண்டும்.

இவ்வாறு இலக்கியங்களில் ஔவையார் வள்ளுவர் போன்றோர் உடல் நல் வழிகளை இக்காலத்தவரும் எக்காலத்தவரும் ஏற்கும் முறையில் நன்கு புலப்படுத்தியுள்ளதை உணர்ந்து வாழ்வோமாயின் நீண்ட காலம் நோய் நொடியின்றி இன்பமாக வாழலாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஒழுக்கம்

ச. அனற் சுரேந்திகா
A/L - 2016

மக்களின் வாழ்க்கையில் ஒழுக்கம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. ஒழுக்கம் என்பதை பல்வேறுபட்டவர்கள் பல்வேறு வகையில் வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்கள். இவ் வகையில் ஒழுக்கம் என்றால் "மக்களின் வாழ்க்கை சிறப்பாக விளங்குவதற்கு வகுத்துக் கொண்ட ஒழுங்கான வழிவகைகளைக் குறிக்கும். இவற்றை மக்கள் தொடர்ந்து தமது வாழ்க்கையில் ஒரு சட்டமாக மதித்து வருகின்றனர். இவ்வகையில் ஒழுக்கம் என்பதற்கு இந்து மதமானது பல்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கின்றது. அவ்வகையில் கடமை, நியதி, அறம், தர்மம் என்பன அவற்றுள் சிலவாகும். இவ்வகையில் மானிடர்களிடையிலான ஒழுக்கங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம். அவை

01. தனிமனிதனின் ஒழுக்கம்
02. குடும்ப ஒழுக்கம்
03. அரசியல் ஒழுக்கம்
04. துறவின் ஒழுக்கம்
05. ஆச்சிரம ஒழுக்கம் என்பன ஆகும்.

ஒழுக்கத்தினைப் பற்றி பல்வேறு நூல்கள் சிறப்பாகப் பேசுகின்றன. அவற்றுள் இலகுவாக திருக்குறள், பாரதியார் பாடல்கள், ஔவையாரின் பாடல்கள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். அந்த வகையில் திருக்குறளில் ஒழுக்கமுடைமை எனும் அதிகாரம் முழுமையாக ஒழுக்கத்தை பற்றி கூறி நிற்கின்றது. அதுமட்டுமன்றி அறத்துப்பாலில் இல்லறவியல், துறவியலில் ஒழுக்கங்களையும் பொருட்பாலில் அரசியல் ஒழுக்கங்களையும் சிறப்பாக பேசி நிற்கின்றது.

சமஸ்கிருத மொழியில் மதம் அல்லது சமயம் என்பதற்கு "தருமம்" என்று பெயர். "நம்மையெல்லாம் உறுதியாக இணைக்கும் ஒரு கொள்கை" என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். வேறு விதத்தில் பார்த்தால் "ஒரு பொருளிடம் அமைந்த நற்குணம்" என்றும் இதற்கு நுணுக்கமான பொருள் கொள்ளலாம். அதாவது நெருப்பில் உஷ்ணம் சில சந்தர்ப்பங்களில் வெளிப்படாமல் இருந்தாலும் மொத்தத்தில் நெருப்பிற்குரிய முக்கிய குணம் உஷ்ணம் தானே?

நித்திய புருஷனிடம் அமைந்த குணங்களை நாமும் வளர்த்து அவற்றை நாம் மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்று முயன்று அந்தப் புருஷனிடம் நம்பிக்கை கொள்வதே தர்மத்தின் இலட்சணம். இப்படிப்பட்ட குணங்கள் தனித்தனி மனிதனிடம் இயல்பாகவே அமைந்திருந்தால் பின்னர் தருமம் என்பது தேவை இல்லை. அதனால் ஆவது ஒன்றும் இல்லை என்றே சொல்ல வேண்டி வரும். ஆதியில் தோன்றியது மிருக சுபாவம். மனிதனை அது தூண்டி வருவதையே அவன் தோன்றியது முதல் பார்த்து வருகிறோம். இதுவே மனித சுபாவம். இப்படி ஒன்றுக்கொன்று முரணாக உள்ள போக்கை இணைப்பது தான் தர்மத்தின் வேலை.

சீனாவில் வாழ்ந்த லாவோ - திஸே என்ற மகான் "இறந்தாலும் அழியாதவனே என்றென்றும் நிலைபெற்று வாழுபவன்" என்று கூறியிருக்கின்றார். இந்த மாதிரியான ஒரு மனிதன். நித்திய புருஷனின் அம்சமாக விளங்குகின்றான் என்பதே இதன் பொருள். இத்தகைய "நிலை பெற்ற வாழ்வு" வாழவேண்டுமென்ற உற்சாகத்தில் தான் மனிதர்கள் நீடித்து உயிர்வாழ எவ்வளவோ பாடுபடுகிறார்கள். நம் சாத்திரங்களிலும் "அதர்மத்தினால் மனிதன் செழிந்தோங்கி பலரும் ஆவலோடு விரும்பும் பொருளை அடைந்தாலும் சரி பகைவர்களை வென்றாலும் சரி அவன் வேருடன் கெடுவான்" என்று சொல்லியிருப்பதைக் காணலாம். "நிலையற்ற உலக வாழ்வைவிட நிலையான உண்மை வாழ்வு ஒன்று உண்டு" என்பதையே இது உணர்த்துகின்றது.

லாவோ - த்ஸே என்ற மகான் நல்லவனுடைய இலட்சணத்தைப்பற்றி விபரிக்கும்போது அவன் யாவற்றையும் இயக்குகின்றான். ஆனால் தனக்கென்று எதையும் வைத்துக் கொள்வதில்லை. அவன் செயல்புரிகின்றான். ஆனால் உரிமை பாராட்டுவதில்லை. புண்ணியம் செய்கின்றான். ஆனால் அந்தப் புண்ணியத்தின் பெருமையில் பங்கு கொள்வதில்லை என்று சொல்லியிருக்கிறார். நமக்கு வெளியே உள்ளதை நாம் விற்கலாம் நம்மோடு இணைந்திருப்பதை எப்படி விற்கமுடியும்? இப்படி நம்மோடு சத்தியத்தை ஒன்றுபடுத்திப் பார்ப்பதுதான் நிறைவான சொர்க்க வாழ்வு. ஒருவன் எளிமையாக வாழ்கின்றான். அவனிடம் இருக்கும் நற்குணங்களுடன் கூடிய ஒழுக்கங்களில் ஒன்றாக பகைவனாக இருந்தாலும் சரி அந்நியனாக இருந்தாலும் சரி விருந்தாளி என்று வருபவனை உபசரிக்க வேண்டும் என்ற எளிய மனப்பான்மை இருக்கின்றதே. அது உண்டாகத் தலைமுறை தலைமுறையாகப் பயிற்சியும் அனுபவமும் பெறவேண்டும். எளிமை தனக்குள்ள மதிப்பை பாராட்டிக் கொள்வதில்லை. கூலியும் கேட்பதில்லை இதுவே எளிமையின் ஒழுக்கமாகும்.

சீன நாட்டவரான லாவோ- திஸே முடிவுள்ள பொருளை அறியாததால் காமம். பகை முதலியவை தோன்றுகின்றது. இதுவே தீமை என்கிறார். அத்தோடு நாம் இறந்து போகலாம். ஆனால் நாம் அழிந்து போகக்கூடாது என்று கூறுகின்றார். நாம் உடல் வாழ்வை இழக்கும் போது நாம் இறந்து போகிறோம். நாம் மனித சமூகத்தின் பண்பை மறந்துவிடும்போது அழிவிற்கு போகின்றோம். மனித சமூகத்தின் பண்பு தான் மனித தர்மம்.

திருக்குறளில் இல்லறவியலில் இல் வாழ்க்கையை அறங்களைப் பற்றிக் கூறுகின்றது. இதுவே இல்லாளோடு கூடி வாழ்தலின் சிறப்பு. இல்லறத்தானே ஏனைய நிலையில் உள்ளவர்க்கு அறத்தினை ஏற்றுக்கொள்வான்.

இல்லற நிலையில் உள்ளவனின் ஒழுக்கங்களாக எல்லா பந்த பாசங்களையும் துறந்து சந்நியாசிகளுக்கு கேட்பவற்றைக் கொடுத்து உதவுதலும் நம்மை நாடி வருபவர்களுக்கு உணவினை அளித்தலும் இறந்தவர்களுக்கு பிதிர் நாடி வருபவர்களுக்கு உணவினை அளித்தலும் இறந்தவர்களுக்கு பிதிர்க்கடன்களை செய்தலும் அமைந்துள்ளன. இல்வாழ்க்கையானது சிறப்பாக அமைய வேண்டுமாயின் அன்பும் தர்மமும் நிறைந்திருத்தல் வேண்டும். இதனை வள்ளுவர்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது" எனும் குறட்பாவினூடாக விளக்குகின்றார்.

ஒழுக்கமுடைமை எனும் அதிகாரத்தில் ஒழுக்கமுடையவர் எவ்வாறு விளங்குகின்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஒழுக்கம் எல்லோருக்கும் சிறப்பினைத் தருவதால் ஒழுக்கமுடையவர்கள் அவ் ஒழுக்கத்தினை உயிரினும் மேலாகப் பாதுகாப்பார்கள். இதனை "ஒழுக்கம் விருப்பந் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" எனும் குறட்பா விளக்குகின்றது. ஒழுக்கத்தினை ஒன்றாலும் அழிவடையாமல் பாதுகாக்க எல்லா ஒழுக்கங்களையும் ஆராய்ந்து அவற்றில் இம்மைக்கும்

மறுமைக்கும் துணையாக அமைவது அவ் ஒழுக்கமே ஆகும். அது மட்டுமன்றி எல்லோருக்கும் தத்தம் வர்ணங்களுக்குரிய ஒழுக்கம் உடைமை அவர்களின் குல உடைமை, அவ் ஒழுக்கத்தி லிருந்து தவறுவதால் அவ்வருணத்திலும் தாழ்ந்த வர்ணமாகிவிடுவர் இதனை,

"ஒழுக்கம் முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்" எனும் குறட்பா

விளக்குகின்றது. ஒழுக்கம் உடையவர்கள் மறந்தும்கூட தீய சொற்களை தமது வாயால் சொல்லமாட்டார்கள் இதனை,

"ஒழுக்கமுடையார்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்."

எனும் குறட்பா விளக்கிச் செல்கின்றது. இவ்வாறு திருவள்ளுவர் எழுதிய திருக்குறளில் 20 அதிகாரங்கள் இல்லற நிலையில் செய்யக்கூடிய கடமைகள் பற்றி கூறி நிற்கின்றது.

இல்லறத்தின் அடுத்த நிலை துறவற நிலையாகும். இதிலே ஒருவன் சொந்தம் பந்தம், பாசம் என்பவற்றினைத் துறந்து இறைவனை அடைதலை இலட்சியமாகக் கொண்டதாகும். இவ்இலட்சியத்தினை அடைய எண்ணுபவர்கள் காட்டிற்குச் சென்று காட்டில் தங்கியிருந்து வன நூல்களைக் கற்றுக்கொள்வார்கள். இவர்களின் உணவாக காட்டில் உள்ள பழங்களோ காய்களோ அமையும். காட்டிலே உணவு கிடைக்காத சமயத்தில் ஊருக்குள் சென்று பிச்சை ஏற்று உண்ணுவார்கள். இவர்களது உடை மரவுரியாகவோ, காவி உடையாகவோ அமையும். துறவற நிலையில் இருப்பவர்களைப் பற்றி திருக்குறளானது பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

அதாவது புலாலினை மறுப்பவர்களாகவும், தவத்தினை மேற்கொள்பவர்களாகவும், பிறர் பொருட்களில் ஆசை வைக்காதவர்களாகவும், உண்மை பேசும் தன்மை கொண்டவர்களாகவும், கோபம் கொள்ளமாட்டாதவர்களாகவும், பிறஉயிர்களுக்கு இன்னா செய்யாதவர்களாகவும், ஞானத்தில் இருப்பவர்களாகவும் காணப்படுவார்கள். மேலே கூறப்பட்ட அம்சங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அதிகாரமாக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். வள்ளுவர் 13 அதிகாரங்களில் துறவற ஒழுக்கம் பற்றி விளக்கியுள்ளார்.

அரசியல் ஒழுக்கம் பற்றி பல நூல்கள் விளக்கியுள்ளன. அரசன் நாட்டையும் நாட்டு மக்களை யும் இரண்டு கண்கள் எனக் கொண்டு வாழவேண்டும். அரசன் தனது கடமை எனும்போது நாட்டு மக்களின் நலனினை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். திருக்குறளானது 215 அதிகாரத்தில் அரசியல் கடமை பற்றித் தெளிவாக விளக்கியுள்ளது. நாட்டுக்கு மன்னர் என்றாலும் மன்னன் கல்வி கற்கவேண்டும். அதாவது நீதிநூல், அறநூல், யானை, குதிரை, தேர், படைக்கலம் என்ற இவற்றுக்குரிய நூல்களைக் கற்கவேண்டுமென திருக்குறள் கூறுகின்றது. இது "கல்வி" எனும் அதிகாரத்தில் கூறப்பட்டது.

பாரதியார் பெண் விடுதலை, பாப்பா பாட்டு போன்ற கவிதைத் தொகுதிகளில் ஒவ்வொரு வகையான ஒழுக்கங்களை கூறியிருக்கின்றார். இவ்வகையில் வாழ்க்கையில் எதுவும் நிலை யானதல்ல மாயமானது என்பதற்கு நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம் சொப்பனந் தானோ? பல தோற்ற மாயங்களோ எனும் பாடல்களைக் கூறலாம்.

குழந்தைகளிடம் காணப்படும் ஒழுக்கங்களை

"ஓடி விளையாடு பாப்பா- நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா"

எனும் பாப்பாப் பாடலின் ஊடாக கூறுகிறார். நாட்டிலே பெண்களின் விடுதலை பற்றியும் பாரதியார் கவிதை எழுதியுள்ளர்.

ஔவையார் தனது ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம் எனும் நூல்களின் தொகுப்புக்களில் அறக்கருத்துக்களை தெளிவாகக் கூறியுள்ளார். ஔவையாரின் வாக்குண்டாம் பாடல் தொகுதியில் நற்பண்புகள் கொண்டவர்களிடத்தில் காணப்படும் ஒழுக்கங்களும் அவற்றினால் மற்றவர்கள் பெற்றுக் கொள்ளும் பயன்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வகையில் நல்லவர்களின் கைகளினால் செய்யும் உதவியானது கல்மேல் எழுதிய எழுத்துப் போல் என்றும் நிலைத்து நிற்கும் இதனை

"அட்டாலும் பால்சுவையிற் குன்றாதளவளாய்

நாட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே - சங்கு

சுட்டாலும் வெண்மை தரும்" எனவும்

நல்லவர்களோடு சேர்வதனால் ஏற்படும் நன்மையினை

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே

நலமிக்க நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே - நல்லார்

குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு

இணங்கி இருப்பதுவும் நன்றே" எனும் பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

ஔவையாரின் ஆத்திசூடியில் நூறுக்கும் மேற்பட்ட ஒழுக்கங்களும், கொன்றைவேந்தனில் நாம் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்களையும் விளக்கியுள்ளார். அதுமட்டுமன்றி ஒழுக்கத்தை பிரதானமாகக் கொண்ட "மனுஸ்மிருதி" எனும் இலக்கியமானது "விதித்தன செய்தலும் விலக்கினை ஒழித்தலும் அறம்" எனக் கூறுகின்றது. அதாவது மனித வாழ்விற்கு எவை எவை சிறந்தது என்பதை செய்தலும் விலக்கப்பட்டவற்றை செய்யாது விடுதலும் அறம் அல்லது ஒழுக்கம் எனக் கூறுகின்றது.

இவ்வாறு மேலே கூறப்பட்ட அறிஞரின் கருத்து திருக்குறள், பாரதியார், பாடல்கள், ஔவை யாரின் ஒழுக்கக் கருத்துக்கள் போன்ற நூல்கள் அறத்தினை அல்லது ஒழுக்கத்தினை தெளிவாகக் கூறியுள்ளன. இங்கு ஒழுக்கமானது இந்து மக்களின் வாழ்வில் ஓர் அத்தியாயமாக அமைந்து விளங்குவதில் வியப்பில்லை.

உசாத்துணை நூல்கள்

01. ரவீந்திரநாத் தாகூர் (1956) மனிதனின் சமயம்

02. விநாயகர் தரும நிதிய வளந்துதவ சமூக சேவை நிறுவன. இலவச வெளியீடு (1998) ஔவையார் அருளிய அறநெறி நூல்கள்

03. தமிழ்வேள் ச.மெய்யப்பன் (1998) பாரதியார் கவிதைகள்

04. பரிமேலழகர். (1968) திருக்குறள்.

மாணவர்களின் பல்வகைமை ஆசிரியர்களுக்கு ஒரு சவாலா

திருமதி தயாநிதி திருக்குமரன்
ஆசிரியர்.

இன்று உலகமயமாக்கல், தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம், அறிவுப்பொருளாதாரம் போன்றவற்றின் வளர்ச்சி காரணமாக உலகம் மிகவும் வேகமாக வளர்ச்சி கண்டு வருகிறது. இவ்வளர்ச்சி யினால் உலகம் கிரமமாக மாறிவிட்டது. இதனால் பல்வேறுபட்ட இனம், மொழி, மதம், கலாசாரம், பண்பாடு விழுமியம் போன்ற பல வேறுபாடுகளுடன் கூடிய மாணவர்கள் ஒன்றாக கல்வி கற்கும் வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றது. இதனால் அன்றைய ஆசிரியர்களைவிட இன்றைய ஆசிரியர்கள் மாணவர்கள் ஒவ்வொருவரையும் பற்றி அறிந்து அவர்களின் ஆற்றல்களுக்கேற்ப செயற்படுவதென்பது மிகவும் சிரமமானதொன்றாகவே உள்ளது.

மாணவர்களின் பல்வகைமைத் தன்மையை ஒரு திறமையான ஆசிரியர் வகுப்பறையின் முதல் நாளே உணர்ந்து கொள்ளமுடியும். ஒரு வகுப்பறையில் ஒவ்வொரு மாணவனும் தனித் தன்மையுடனும், தனிப்பட்ட அவனுக்கே உரித்தான ஆளுமையுடன் செயற்படுவது ஆசிரியருக்கே தெரியவரும். இத்தகைய தனியாள் வேறுபாடுகள் மாணவனது உடல்தோற்றம், உடல் வளர்ச்சியின் அளவு, முகவெட்டு போன்றவற்றை மட்டும் சார்ந்தவையல்ல. இவற்றில் காணப்படும் வேற்றுமைகள் ஆசிரியருக்கு ஒரு சில நிமிடங்களில் புரிந்துவிடும். ஆனால் சிறிது காலத்தின் பின்னர் மாணவர்களிடம் காணப்படும் பல்வகைமைத்தன்மை அவர்களின் உடல்பண்புகளில் மட்டுமன்றி அவர்களின் எல்லா ஆளுமைப் பண்புகளிலும் உள்ளன என்பதை ஆசிரியர் உணர்ந்து கொள்கிறார்.

இன்றைய ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவது போல் கற்றலில் ஈடுபடும் முறை O போன்ற மிக நுணுக்கமான பண்புகளிலும் மாணவர்களிடையே வேற்றுமைகள் உள்ளன. எனவே குழந்தைகளிடமும் முதியோரிடமும் எல்லா உடல் மன ஆளுமைப் பண்புகளிலும் தனியாள் வேற்றுமைகள் உள்ளதை நமது அனுபவங்களும் உளவியல் ஆராய்ச்சிகளும் உறுதிப்படுத்தியுள்ளன. (Belkin and Skydell 1979) மனிதர்களிடமே பண்புகளில் வேற்றுமைகள் இருத்தல் பற்றிய உணர்வு பண்டைய காலந்தொட்டே காணப்பட்டு வந்துள்ளது. ஆனால் நுண்ணறிவு, நாட்டம், கவர்ச்சி, ஆளுமைப்பண்புகள் போன்றவற்றை அளவிட உதவும் சோதனைகளை உளவியல் அறிஞர்கள் உருவாக்கிச் செயற்படுத்திய பின்னர் தான் தனியாள் வேற்றுமைகளின் தன்மை புலனாகியுள்ளது. Golden, Piene போன்றோர்களின் முயற்சிகள் இதற்கு முன்னோடியாக அமைந்து இன்று Differential Psycholo பல என்ற உளவியல் பிரிவொன்றின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது. (பஞ்சாட்சரம், 2007).

மாணவர்களின் பல்வகைத்தன்மைக்கு காரணமாக அமையும் முக்கிய விடயங்களாக பின்வருவன கொள்ளப்படுகிறது. அவையாவன

- மரபுவழி
- சூழ்நிலை

- கற்றல் பயிற்சி
- நாளமில் சுரப்பிகள் (Endocerine glands)

போன்றவை பல்வகைத் தன்மைக்கு காரணங்களாகும். (இரத்தினசபாபதி, 2006) இவற்றில் சூழ்நிலைக் காரணிகள் தான் கூடுதலான பல்வகைமைத் தன்மைக்குக் காரணமாகும்.

தமது மாணவர்களிடம் பல்வகைமைத்தன்மைகள் பற்றிய அறிவு மாணவரது கல்வி வளர்ச்சிக்கு துணைசெய்ய ஆசிரியருக்கு இன்றியமையாததாகும். இத்தகைய வேற்றுமைகள் ஆரம்பக்கல்வி வகுப்புக்களில், உயர்வகுப்புக்களைவிட அதிக அளவினதாகக் காணப்படும் (சந்தானம், கணபதி 2003) ஏனெனில் பலதரப்பட்ட குடும்பச் சூழ்நிலையினின்றும் ஆரம்பக் கல்விக்கு பாடசாலையில் சேர்வதற்கு குழந்தைகள் வருவர். மேல்வகுப்புக்களிற்குச் செல்லச் செல்ல வேற்றுமைகளின் அளவு குறையக்கூடும். எனினும் உயர்வகுப்பு ஆசிரியர்களும் தங்களது மாணவர்களிடையே காணப்படும் தனியாள் வேற்றுமைகளைக் கருத்தில் கொள்ளாதுவிடின் அவர்களது கற்பித்தல் செயல் எல்லா மாணவர்களுக்கும் முழுப்பயனையும் அளிக்காது.

குழந்தைகளுக்கு கற்பித்தல் தொடங்கு முன்னரே அவர்களது தேவைகள், ஆற்றல்கள், கவர்ச்சிகள் போன்றவற்றைப் பற்றி ஓர் ஆசிரியர் அறிந்து வைத்திருப்பது அவசியமாகும் என அக்கால கல்வியியலாளர்கள் யாவரும் கூறியுள்ளனர். ஆனால் இன்று இத்தகைய கருத்தை நம் பாடசாலைகள் மறந்து செயற்படுவது போல் உள்ளன. மாணவர்களின் பல்வகைமைத் தன்மைகள் புறக்கணிக்கப்படுகிறது. ஏனெனில் இன்று பாடசாலையில் சேர்வதற்கு

- ஒரே வயது நிர்ணயிக்கப்படும்
- ஒரே வகையான கல்வித்திட்டம்
- ஒரே மாதிரியான பாடநூல்கள்
- ஒரே வகையான சோதனைமுறை

போன்ற காரணிகள் பல்வகைமைத்தன்மையைக் கருத்தில் கொண்டு செயற்பட ஆசிரியருக்கு பெரும் தடையாகவே உள்ளது (சந்தானம், கணபதி 2003) இவை யாவும் வகுப் பறைக் கற்பித்தல் முறையின் விளைவாகும். இவ்விடயங்கள் மாணவர்களின் தன்மைக்கு ஏற்ப கற்பித்தலில் ஈடுபட ஆசிரியருக்கு பெரும் சவால்களாகவே இருக்குமென்பது கண்கூடான ஒன்றாகும். அந்த வகையில் ஒரு வகுப்பறையில் கற்பித்தலுக்காக 30-40 வரையான மாணவர்கள் ஒரே சமயத்தில் கூடியிருக்கும்போது அவர்களின் பண்பு வேற்றுமைக்கேற்ப கல்வியை ஒவ்வொருவருக்கும் ஏற்றவகையில் திட்டமிட்டு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஆசிரியர் கற்பிப்ப தென்பது இயலானதொரு விடயமாகும்.

எனவேதான் அறிவு வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் கற்பித்தல் முறைகள் மாணவர் களின் பல்வகமைத்தன்மையை ஈடுசெய்யும் வகையில் அமைவதற்கான புதிய உத்திகள் வகுப் பறையில் கையாளப்படுகின்றன. "வகுப்பறையில் உள்ள தனிப்பட்ட மாணவனுக்கு ஆசிரியர் கற்பிக்க முற்படவேண்டுமே தவிர, முழுமையான வகுப்புக்கன்று" என்பதற்கேற்ப மாணவர் களிடையே காணப்படும் கற்றலுக்கான ஆயத்தநிலை வேறுபாடுகளுக்கு ஏற்ப கற்பித்தல் அமையவேண்டும். (சந்தானம், கணபதி 2003) ஒவ்வொரு மாணவனிடமும் தனிக்கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகும். எனவே தான் கட்டாய ஆரம்பக் கல்வியில் இன்று அரசினால் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது.

சமுதாயத்தின் பல நிலைகளில் இருந்தும் குழந்தைகள் ஆரம்பப்பள்ளிக்கு சேர்கிறார்கள். இந்நிலையில் இவர்களது சமூகப் பொருளாதாரப் பின்னணி வேறுபாடுகளின் விளைவாகக் குறிப்பிடத்தக்க தனியாள் வேற்றுமைகளைக் கொண்டவர்களாக இத்தகையோர் காணப்படுவர்.

எனவே ஆரம்பப் பாடசாலைகளில் ஒரு வகுப்பில் 15 முதல் 20இற்குள் குழந்தைகள் இருப்பின் இவர்களது வேற்றுமைகளைக் கவனத்தில் கொண்டு ஆசிரியரால் தனிக்கவனம் எடுத்து கற்பித்தலில் ஈடுபடமுடியும். (சந்தானம், கணபதி 2003) ஆனால் இம்முறையினை நடைமுறைப் படுத்துவதில் சிக்கல் தன்மை காணப்படுகிறது. இன்று தரம் ஐந்திற்கான புலமைப் பரீட்சையை கவனத்தில் கொள்ளும்போது இப்பரீட்சையானது நாடுமுழுவதும் பொதுப் பரீட்சையாக உள்ள துடன் இதன் அடைவு மட்டத்தில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் யாவரும் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதன் அடைவுமட்டத்தை வைத்தே தமது குழந்தைகளின் ஆரம்பக் கல்விக்குரிய பாடசாலை களை தீர்மானிக்கின்றனர். இதனால் சில பாடலைகளில் அதிக மாணவர்கள் வகுப்பறையில் அமர்த்தப்படுகின்றனர். மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அவர்களின் பல்வகைமைத் தன்மையும் அதிகரிக்கும். எனவே இதற்கேற்ப ஓர் ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபடுவதென்பது முடியாததொன்றாகும். அத்துடன் இங்கு கல்வி கற்கும் மாணவர்களில் மெல்லக்கற்போர் மிகவும் பாதிக்கப்படுவர். ஏனெனில் போட்டிப் பரீட்சையின் நிமித்தம் ஆசிரியர் கற்பித்தலில் மட்டுமே தனது முழுக்கவனத்தையும் ஈடுபடுத்திக் கொள்வர். மாணவர்களின் இதர ஆற்றல், திறமைகளில் தனது கவனத்தை செலுத்த முற்படமாட்டார். இந்நிலமையினால் இம் மாணவர்கள் பிற்காலத்தில் பாதிக்கப்பட்டவர்களாக வர வாய்ப்புக்களுள்ளன. இதேபோலத்தான் தரம் 11, க.பொ.த உயர்தரம் போன்ற பொதுப் பரீட்சையை எதிர்நோக்குகின்ற மாணவர்களின் நிலையும் காணப்படும். எனவே பொதுப்பரீட்சையை மையமாகக்கொண்ட கல்வி முறையில் மாணவர்களின் பல்வகைமையைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் மிகவும் கடினமான தொன்றாகவே உள்ளது.

மேலே கூறப்பட்ட குறைபாடுகளை நீக்கும்பொருட்டு இன்று மாணவர்களின் ஆற்றலிற்கு ஏற்ப, ஒரு வகுப்பு மாணவர்கள் கற்பித்தலுக்காக மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுவர்.

- மீத்திறன் கூடியவர்கள்
- சாதாரணமானவர்கள்
- மெதுவாகக்கற்போர்

என நுண்ணறிவு சோதனையின் அடிப்படையில் பிரிக்கப்படுவர். (சந்தானம், கணபதி 2003). ஒவ்வொரு பிரிவு மாணவர்களுக்கும் அவர்களுடைய கற்றல் திறமைக்கு ஏற்ப கற்பித்தல் முறைகள் அமைக்கப்படும். ஒவ்வொரு மாணவர்களும் தங்களது இயல்பாக வேகத்தில் கல்வியில் முன்னேறலாம். எனினும் இக்கல்வி முறையிலும் சில குறைபாடுகள் இருக்கவே செய்கின்றது.

மேலும் இம் முறையானது "யாவரும் சமம்" எனும் மக்களாட்சி தத்துவத்திற்கு முரணாக உள்ளது (சந்தானம், கணபதி 2003) மெல்லக் கற்போரினை எடுத்துக்கொண்டால் இவர்களைப் பற்றிய பல ஆசிரியர்களின் மதிப்பீடு குறைவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதால் அவர்களுக்குக் கற்பிக்கும் போது அவ்வாசிரியர் முழு ஈடுபாட்டுடன் செயற்படமாட்டார்கள். இதனால் பல பாடசாலை களில் ஆசிரியர்கள் வகுப்பறைக்குள் சென்று செயற்படுவதிலும் சலிப்படைவதைக் காணமுடிகிறது. அது மட்டும் அல்லாமல் அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களும் கூட தாழ்வு மனப்பாங்குகளில் தடுமாறுவதை அவதானிக்கலாம். ஆனால் ஆசிரியர் தொழில் என்பது இப்படிப்பட்ட மாணவர் களுக்கே சேவை செய்வது பொருத்தமானதாகும். இதனை இன்றைய ஆசிரியர்களும் கல்வி அதிகாரிகளும் உணரும் வரை இம்முறை வெற்றியளிக்காது.

இன்று பாடசாலைகளும் பெற்றோர்களும் கல்விக்குப் பொறுப்பான அதிகாரிகளும் மாணவர் களின் ஏட்டுக் கல்விக்குரிய பாட அடைவு மட்டத்தையே கவனத்தில் கொள்கிறார்கள். அதுமட்டு

மன்றி இலங்கையின் கல்விக் கொள்கைகளும் அதற்கு சார்பாகவே காணப்படுகிறது. மாணவர் களின் ஒட்டுமொத்த ஆளுமைப் பண்புகளையும் ஒருங்கே நிலைநிறுத்திக்காட்டும் கல்விக் கொள்கைகள் எப்பொழுது நடைமுறைக்கு கொண்டுவரப்படுகிறதோ அன்றுதான் மாணவர்களின் பல்வகைமைத்தன்மை நீங்கி அவர்களின் இசைந்த வாழ்விற்கு ஆசிரியரால் வழி அமைத்துக் கொடுக்கமுடியும்.

மேலும் ஏட்டுக்கல்வியின் மூலம் மாணவரின் திறமையை எடைபோடும் கல்வித் திட்டத்தை மாற்றியமைத்து மாணவர்களின் திறமைக்கும், விருப்பத்திற்கும் ஏற்ற கல்வித் திட்டங்களைக் கொண்டுவருவதன் மூலம் மாணவர்களின் பல்வகைமைத்தன்மைக்கு ஏற்ப அவர்களை சிறு வயதிலேயே அவர்களின் திரள் பதிவுகளை பதிந்து அவற்றின் மூலம் அவர்களுக்குரிய துறைகளில் செல்வதற்கு ஆசிரியர்கள் உதவமுடியும். மற்றும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் இயல்பு ஆசிரியர்களுக்கு இருத்தல் அவசியம். அதனை செயற்படுத்த ஆசிரியர்கள் புதிய கற்றல் செயற்பாடு களை உள்வாங்கிக்கொள்வதன் மூலம் மாணவர்களின் பல்வகைமைக்கேற்ப கற்பித்தல் பணிகளை மேற்கொள்ளமுடியும்.

கல்வியியலாளர்களும், கல்வியதிகாரிகளும் மற்றும் அரசாங்கமும் பல புதிய புதிய திட்டங் களை மாணவர்களின் பல்வகைமைத் தன்மையை எதிர்நோக்க காலத்திற்கு காலம் புதிய மாற்றங்களை முன்வைத்த போதிலும் அவை முற்றிலும் வெற்றியை அடையவில்லை என்றே கூறலாம். எனவே இதற்கு ஆசிரியர்களது பரிவுணர்ச்சியும், பணியில் பற்றுறுதியுமே இப்பிரச்சி னைக்குப் பெருமளவு உதவும் என்பது எனது கருத்தாகும்.

உசாத்துணை நூல்கள்

1) சந்தானம்.S. கணபதி.ஏ . (2003) கல்வி மனவியலும் குழந்தைக்கல்வியும் சென்னை : சாந்தா பப்ளிஷர்ஸ்.

2) இரத்தினசபாபதி. P (2006) இன்றைய கல்வியியல் உளவியல். சென்னை : சாந்தா பப்ளிஷர்ஸ்.

3) பஞ்சாட்சரம், A,N. (2007) கல்வி உளவியலும் ஆரம்ப ஆசிரியர் கல்வியும். சென்னை : சாந்தா பப்ளிஷர்ஸ்.

4) Belkin G,S., Skydell R,H (1979) Foundations of Psychology. Houghton Mifflin company. USA.

இலக்கியம் - பொது அறிவு

இ.அனித்கௌசிகா
12 (Arts)

1) மகாபாரதத்தின் உண்மையான பெயர் என்ன? ஜெய சம்ஹிதா

2) திருத்தொண்டர் புராணம் என்ற அடைமொழி உடைய நூல் எது? பெரிய புராணம்

3) தமிழ்மறை என்ற அடைமொழி உடைய நூல்? திருக்குறள்

4) மதம் அறிவைக் கெடுக்கும் என்றவர் யார்? தந்தை பெரியார்

5) இந்தியாவின் நாவல் அக்கடமி அமைந்துள்ள இடம் எது? கொச்சி

6) தமிழ் நாட்டிலுள்ள அரசு நூலகங்கள் எத்தனை? 2400

7) வ.உ.ச நடத்திய பத்திரிகையின் பெயர் என்ன? விவேக பானு

8) விஸ்வாமித்திரர் இயற்றிய இராமாயணத்தின் பெயர் என்ன? அத்யாத்ம இராமாயணம்

9) காளிதாசர் என்பவர் யார்? குப்தர்கால ஆசிரியர்

10) வால்மீகி எந்தப் பறவையைப் பார்த்து இராமாயணம் எழுதினார். அன்றில்

11) சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர் யார்? அடியார்க்கு நல்லார்

12) வேத இலக்கியத்தைப் பற்றிய முதல் நூல் எது? ரிக் வேதம்

13) இலக்கியத்திற்காக அதிகம் பரிசு பெற்ற நாடு எது? பிரான்ஸ்

14) இலக்கிய மலர்கள் என்ற நூலின் ஆசிரியர் யார்? மு.மு.இஸ்மாயில்

15) மேன் அன்ட் சூப்பர் மேன் என்ற நூலை இயற்றியவர் யார்? ஜார்ஜ் பெர்னாட் ஷா

16) இந்தியாஸ் ஃபாரின் பாலிசி என்ற நூலை எழுதியவர் யார்? அடல் பிகாரி வாஜ்பாய்

17) திருவிளையாடல் புராணத்தை இயற்றியவர் யார்? பரஞ்சோதி முனிவர்

18) அர்த்தமுள்ள இந்து மதம் என்ற நூலை எழுதியவர் யார்? கவிஞர் கண்ணதாசன்

19) சில நேரங்களில் சில மனிதர்கள் என்ற நாவலை எழுதியவர் யார்? ஜெயகாந்தன்

20) மனோன்மணியம் என்ற நூலை எழுதியவர் யார்? மீனாட்சி சுந்தரம்பிள்ளை

21) சீவகசிந்தாமணியின் ஆசிரியர் யார்? திருத்தக்கதேவர்

22) சாருந்தலம், மேகதூதம் போன்ற நூல்களை இயற்றியவர் யார்? காளிதாசர்

23) சாத்தானின் கவிதைகள் என்ற நூலிற்காக மிகுந்த எதிர்ப்பை அடைந்த இந்திய எழுத்தாளர் யார்? சல்மான் ருஷ்டி

24) மோகமுள் என்னும் நூலை எழுதியவர் யார்? தி.ஜானகிராமன்

25) பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு ஆகிய நூல்களை எழுதியவர் யார்?

பாவேந்தர் பாரதிதாசன்

26) தமிழில் வெளிவந்த முதல் நாடக நூல் எது? ராஜராஜவிஜயம்

27) பாஞ்சாலி சபதத்தை இயற்றியவர் யார்? பாரதியார்

28) ஜைன, புத்தமத நூல்கள் முதன் முதலில் எந்த மொழியில் எழுதப்பட்டன?
பிராகிருதம் மற்றும் பாளி

29) லைப் ஃ ப்டிவைன் என்ற நூலை எழுதியவர் யார்? அரவிந்தர்

30) அக்கினி சிறகுகள் என்ற நூலை எழுதியவர் யார்? ஏ.பி.ஜே.அப்துல்கலாம்

31) சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன், அலையோசை, பார்த்தீபன் கனவு போன்ற சரித்திர நாவல்களை எழுதியவர் யார்? கல்கி

32) மை ட்ரூந் என்ற நூலை எழுதியவர் யார்? இந்திராகாந்தி

33) கம்பர் தன் நூலிற்கு இட்ட பெயர் என்ன? இராமகாதை

34) சமீபத்தில் ஞானபீட விருது பெற்ற தமிழ் எழுத்தாளர் யார்? ஜெயகாந்தன்

35) நான்காவது தமிழ்ச் சங்கத்தை தோற்றுவித்தவர் யார்? பாண்டித்துரை தேவர்

36) பாந்தர் என்பவை எவை? கருப்பு சிறுத்தைப் புலிகள்

37) வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் எவை?
தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், சதுரகாரநி, பரமார்த்த குரு கதைகள்

38) தமிழ் நூல்களுள் மிக பழமையான நூல் எது? அகத்தியம்

39) நாலடியார் என்ற நூலை தொகுத்தவர் யார்? சமண முனிவர்கள்

40) தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எனப்படுவது? சங்ககாலம்

வாசிக்கத் தெரியாமல் வாசிக்க முடியுமா?
இவ்வுலகில் யோசித்துப் பாருங்கள் பெற்றோரே
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
இந்தப் பாழாய்ப் போன பழமொழியை மாற்றி எழுதுங்கள்
ஐந்தில் ஊக்கம் கொடுக்காமல் பிஞ்சிலே வேலைக்கு அனுப்பினால்
ஏக்கமே அவன் வாழ்வில் மிஞ்சும்

உலகில் பெரியவை

சுஃநிலுக்ஷி
(12 கலை)

01.	மலைத்தொடர்	-	இமயமலை
02.	மலை	-	எவரெஸ்ட்
03.	தீவு	-	கிறீன்லாந்து
04.	வளைகுடா	-	மெக்சிக்கோ
05.	தீபகற்பம்	-	அரேபியா
06.	பூங்கா	-	உட்பப்பல்லோ (கனடா)
07.	நன்னீர்	-	சுப்பீரியர் ஏரி
08.	நூதனசாலை	-	மியூசியம் ஒவ் நபீஷனல் வயுஸ்ரா
09.	கடல்	-	தென்சீனம்
10.	விரிகுடா	-	யுட்சன்
11.	மரம்	-	ஜெனரல் ஜெர்மன்
12.	காடு	-	வாஸ்ட் கனிப்ரோஸ்
13.	ஸ்ரேடியம்	-	பிராக்ஸ்ரேடியம்
14.	உவர்நீர்	-	காப்பியன் கொய்மோர் ஏரி
15.	துறைமுகம்	-	ரோடார்பாமா ரோம்போர்ட் (நெதர்லாந்து)
16.	கண்டம்	-	ஆசியா
17.	பாலைவனம்	-	சகாரா
18.	சமுத்திரம்	-	பசுபிக்
19.	பெரிய கடற்படை	-	ரஷ்யா
20.	புகையிரத சுரங்கப் பாதை	-	நிஜிகாடட்டா ஜோர்ஜ்னவன்
21.	இராணுவ அமைப்பு	-	சீனா
22.	தேசிய கீதம்	-	கிரேக்க நாடு (128 வரி)
23.	ஜனநாயக நாடு	-	சீனா
24.	சனத்தொகை கூடிய நாடு	-	சீனா
25.	இஸ்லாமிய நாடு	-	இந்தோனேசியா
26.	இந்துமத நாடு	-	நேபாளம்
27.	நூலகம்	-	அமெரிக்க காங்கிரஸ் நூலகம்

இலங்கை முதியோர் சனத்தொகையும் பொருளாதாரத்தில் அதன் தாக்கமும்

சா.ஆன்லக்சினி
A/L (2016)

ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களில் அண்மைக்காலங்களாக கருவள விகிதத்திலும் மரண விகிதத்திலும் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியின் காரணமாக சனத்தொகை வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைந்துவரும் அதே வேளையில் முதியோர் சனத்தொகையின் விகிதாசாரமும் அதிகரித்து வருவது இந்நாடுகள் எதிர்கொள்ளும் ஒரு புதிய சவாலாக விளங்கி வருகின்றது. அதாவது உலகளாவிய ரீதியில் அறுபதும் அதற்கு மேற்பட்ட வயதுப் பிரிவினதும் சனத்தொகை அதிகரித்து வருவது எதிர்வரும் ஆண்டுகளில் அந்நாடுகளின் சமூக, பொருளாதார நிலைமைகளில் எதிர் கொள்ள வேண்டிய புதிய சவால்களை எடுத்துக் காட்டுகிறது. மொத்தச் சனத்தொகையில் வயோதிபரின் விகிதாசாரம் "முதியோர் சனத்தொகை" என அழைக்கப்படுகின்றது.

இலங்கையில் ஏற்பட்டு வரும் அண்மைக்கால பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள் குறிப்பாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இடப்பெயர்வு, நகரமயமாக்கம் மற்றும் ஊழியப் படையினரின் பங்கேற்பில் பெண்களின் விகிதாசாரத்தில் ஏற்பட்டுவரும் அதிகரிப்பு போன்றவற்றை மரபு ரீதியான குடும்ப அமைப்பு முறையில் நிலவியிருந்த கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி வருவதன் காரணமாக இளம் சமூகத்தினரால் முதியோரைப் பராமரிப்பதோ அல்லது அவர்களுக்கு ஆதரவாக இருந்து வருவதோ ஒரு சவாலாக இருக்கின்றது. இலங்கையை பொறுத்து அறுபதும் அதற்கு மேற்பட்ட பிரிவினரும் முதியோராகக் கொள்ளப்படுகின்றனர். ஏனெனில் அரச மற்றும் தனியார் துறைகளிலிருந்து ஓய்வு பெறுவதற்கான வயதெல்லையாக 55 க்கும் 60க்கும் இடை யிலான வயதெல்லையே தீர்மானிக்கப்படுகிறது.

இலங்கையின் சனத்தொகையில் 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட வயதுப்பிரிவினரின் அளவும் விகிதாசாரமும் வீழ்ச்சியடைந்து வருவதனைக் காணலாம். இது கடந்த காலங்களில் ஏற்பட்டு வந்த மாற்றங்களின் விளைவேயாகும். இதனுடன் இணைந்த வகையில் வயது முதிர்ந்தோரின் விகிதாசாரமும் அதிகரித்து செல்வதையும் காணலாம்.

2015இல் சிறுவர் தங்கியிருப்போர் விகிதம் 22.8 வீதமாகவும் வயோதிபரின் விகிதாசாரம் 12.5 வீதமாகவும் அமையும் என எதிர்வு கூறப்பட்டது. சிறுவர் தங்கியிருப்போர் விதிதாசாரம் என்பது 15 வயது - 59 வயது வரையான வயதுப் பிரிவுகளில் தங்கியிருக்கின்ற 15 வயதுக்குட்பட்ட நபர்களின் எண்ணிக்கையை விகிதாசாரத்தில் எடுத்துக் கூறுவதாகும்.

சிறுவர் தங்கியிருப்போர் விகிதாசாரம் = $\frac{\text{15 வயதுக்குக் கீழ்ப்பட்டோரின் மொத்தச் சனத்தொகை}}{\text{15 வயதுக்கும் 59 வயதுக்கும் உட்பட்டோரின் மொத்தச் சனத்தொகை}}$

வயோதிப தங்கியிருப்போர் விகிதாசாரம் என்பது 15 வயது தொடக்கம் 59 வயது வரையான வயதுப் பிரிவினரில் தங்கியிருக்கின்ற 60 உம் அதற்கு மேற்பட்ட வயதுப் பிரிவினரும் எண்ணிக் கையை விகிதாசாரத்தில் எடுத்துக் கூறுவதாகும்.

வயோதிபரின் தங்கியிருப்போர் விகிதாசாரம்	60ஆம் அதற்கு மேற்பட்ட வயதுப் பிரிவினரதும் மொத்தச் சனத்தொகை	
	15 வயதுக்கும் 59 வயதுக்கும் உட்பட்டோரின் மொத்தச் சனத்தொகை	

ஆரம்ப காலங்களில் வயோதிபரான தமது பெற்றோரை அவர்களது பிள்ளைகளே பராமரித்து பாதுகாத்து வந்துள்ளனர். ஆயினும் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் ஏற்பட்டு வரும் மாறுதல்கள் குறிப்பாக, பெண்களின் அதிகரித்த வேலைவாய்ப்பு, பிந்திய திருமணங்கள், கல்வி வசதிகள், அதிகரித்து வரும் விவாகரத்துக்கள் போன்றவை பிள்ளைகள் தமது பெற்றோரைப் பராமரிக்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தி வருகிறது. இதனால் இத்தகைய வயோதிபர்கள் வயோதிப இல்லங்களில் தங்கியிருக்க வேண்டிய சூழலைத் தோற்றுவிப்பதன் காரணமாக இத்தகைய இல்லங்களுக்கான கேள்வி அதிகரிப்பும் தவிர்க்க முடிாத ஒரு சவாலாக விளங்கி வருகிறது. 60ஆம் அதற்கு மேற்பட்ட வயதுப் பிரிவினரில் ஆண்களிலும்விட பெண்களின் பங்கு அதிகளவில் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

ஏனைய வயதுப் பிரிவினருடன் ஒப்பிடுகையில் வயோதிபரின் சனத்தொகை விகிதாசாரம் அதிகரித்து வருவது அவர்களின் சுகாதார வசதிகளுக்கான கேள்வியை அதிகரிக்கத் தூண்டும். குறிப்பாக நீரிழிவு, உயர் மனஅழுத்தம் போன்ற நோய்களில் பாதிக்கப்படுவதால் இவற்றுக்கான சிகிச்சை முறைகள், சுகாதார வசதிகள், வைத்தியசாலை வசதிகள் மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையங்களை அமைக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தி அரச வரவு செலவுத் திட்டத்தில் அவற்றுக்காக அதிகளவு நிதியை ஒதுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகிறது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலன் அமைச்சின் கீழ் இலங்கை வயோதிபர்களுக்காக பல முக்கிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. உதாரணமாக வயோதிபர்களுக்கான தேசிய சபை மற்றும் வயோதிபர்களுக்கான தேசிய செயலகம் என்பவற்றை குறிப்பிடலாம். இவற்றின் பிரதான நோக்கம் வயோதிபர்களை சுய மதிப்புடனும தனித்து இயங்குவதற்குமான வழி வகைகளை ஏற்படுத்தி அவர்களது நலன்களையும், உரிமைகளையும் மேம்படுத்தலும் பாதுகாத்தலுமாகும். எனினும் வயோதிபர்களது தனிமை உணர்வை குறைக்கும் வகையில் அவர்களை சமூக செயற்பாடுகளில் உள்வாங்கும் வகையில் அதற்கான சந்தர்ப்பங்களை அவர்களுக்கு வழங்கி அத்தகைய செயற்றிட்டங்களை மேலும் விரிவாக்க வேண்டிய சவால்களை இலங்கை இன்னும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இலங்கையைப் பொறுத்து அங்கு நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தத்தின் காரண மாகவும் அங்கு பெருமளவில் குறிப்பாக வடக்கு கிழக்கில் கண்ணிவெடிகளின் காரணமாகவும் அதிகளவு இளவயதுப்பிரிவினர் இறந்தோர் /அங்கவீனம் அடைந்தோராக இருப்பது அவர்களால் தமது பெற்றோரைப் பராமரிக்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தி வருவதுடன் இத்தகைய ஊழியப் படையினர் பொருளாதார அபிவிருத்திக்கு பங்காற்ற முடியாமல் அவர்களும் மற்றவர்களில் தங்கியிருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்துகிறது. எனினும் இலங்கையில் வடக்கு கிழக்கைப் பொறுத்து நிலவும் யுத்தம் காரணமாக பெருமளவிலான இளவயதினர் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வருவதும் அவர்களது வயோதிபப் பெற்றோர்கள் தனிமையில் வாழ்ந்து வருவதும் நாம் காணக்கூடிய இன்றைய யதார்த்த நிலையாகும். எனினும் கணிசமான அளவு வயோதிபப் பெற்றோர்கள் தற்போது அந்நாடுகளில் தமது பிள்ளைகளின் சில பொருளாதார நலன்களுக்காக அவர்களுடன் இணைந்து வாழ்ந்து வருகின்ற போக்கு அதிகரித்து வருவது வடக்கு கிழக்கில் தனித்து வாழ்ந்து வரும் வயோதிபர்களின் அளவிலும் கணிசமானளவில் வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

இவ்வாறு இலங்கையின் அண்மைக்கால சமூக, பொருளாதார, நாகரிக மாற்றங்களின் காரணமாக அவை அங்கு சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பில் வயோதிபரின் விகிதாசாரத்தை வீழ்ச்சியடையச் செய்து வருவது அங்கு பல சமூக, பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தி வருவதுடன் அது எதிர்கால சந்ததியினர் எதிர்கொள்ள வேண்டிய சவால்களையும் பிரதிபலிக்கிறதெனலாம்.

உசாத்துணை : - மத்திய வங்கி ஆண்டறிக்கை

மரம்

ப.அன்ரன் கிருபைநாயகம்
ஆசிரியர்
(B.A.Dip in Education)



மனித வாழ்விலே உறவின் கட்டிலாய்
குழந்தை துயின்றிடும் அழகுத் தொட்டிலாய்
வீட்டினில் நிலைத்திடும் உயிர் கூரையாய்
காப்பரண் ஆகிடும் கதவு யன்னலாய்

மரத்தின் பயனதை மனிதன் மறந்திடான்
மானிட வாழ்விற்காய் தன்னையே ஈர்ந்து
உணவாய் பட்டுடையாய்
உறையுளாய் தளபாடமாய்

மரம் செடி அழித்திட மனிதன் எண்ணினான்
முன்னோர் நாட்டிய சொத்தே மரமதாம்
காலநிலை மாற்றத்தின் கருவூலம் அதுவேயாம்
மரமதை அழித்திடல் மானிடர்க்கு அழிவேயாம்
என்ன சொன்னாய் ஔவையே நீ - சபைநடுவே
நீட்டு ஔவை வாசியா
நின்றான் குறிப்பறிய மாட்டாதவன்
நல்மரம் என்றனையோ
மரம் என்றால் உனக்கு அவ்வளவு இழக்கமா?

காயுடன் கனியதும் இலையுடன் பூவதும்
மூலிகை வேருமாய் நிலைத்தே நின்றமரம்
மண்ணரிப்பினை நின்று தடுத்திடும்
பெருவிருட்சமாய் நிழலது தந்திடும்
காட்டிலே விலங்குகட்கு உறையுளும் ஆகிடும்
மனிதனின் அறுசுவைக்கு விறகாயும் உதவிடும்
பறவை இனங்களின் அழகிய வாழ்விடம்
மரமதை அழித்திட்டால் அது யாரிடம் முறையிடும்

கோயிலின் தேருமாய் தேவாலயத்தின் சாமியாய்
வண்டியின் சில்லுமாய்
இறப்பினில் சவப்பெட்டியாய் எல்லாம்
வானுயர நிமிர்ந்தே நின்றது மரம்

தேவைக்காய் மரம் ஒன்று தறித்திட்டால்
உரைந்தே இருமரம் நாட்டுவாய்
உலகின் இயற்கைச் சமநிலை
பேணும் ஊக்கியே மரமதாம்.

மறந்தும் மரமதை அழியாதே!!!
மானிடா உணர்ந்தே மரமதை வளர்த்திடு
மரமது இணையற்ற இறையருள் படைப்பு
அதுவே என்றும் உலகின் வளப்பு

வருந்தாமல் இருக்கலாமோ!

க.பிரவீனா
2017 கலைப் பிரிவு.

தந்தை தாய் சேர்த்து வைத்த
தங்கச் சொத்துக்களை எல்லாம்
சிந்தையிலும் ஏற்றாது
தங்குமிடம் தேர்ந்து
தண்ணியடித்து மூழ்கின்றார்.

பையினிலே போத்தல்
கையினிலே செல்போன்
பேஸ்புக் பார்த்துப் பேரின்பமாகின்றார்.
கன்னியரைக் கலைத்து விசிலடித்து
காடைத்தனமும் செய்கின்றார்
புண்ணியங்கள் செய்து பெற்ற
புத்திரரின் சாகசங்கள்
எண்ணிலடங்கா எண்ணிலடங்கா

சாதனைகள் பேசுகின்றார்
சாதித்தது பூச்சியமே
வாதங்கள் தொடுக்கின்றார்
வலிந்து வம்பை ஏற்கின்றார்
பெரியவரை மதிப்பதில்லை
கல்வி மிளிர உழைப்பதில்லை
நற்பணிகள் தொடர்வதில்லை
பணிவு அருகிப் படுகுழியில்

கண்ணியம் கெட்டுப் போச்சு
மண்மகிமை கனவாய்ப் போச்சு
மறைந்தார் மூச்சு காற்றாய் போச்சு
வருங்காலம் இளைஞர் கையிலென்றார்
இவர்காலம் என்னவாகும்?
வருந்தாமல் இருக்கலாமோ?
திருந்தாது இந்தக் கூட்டம்
நாட்டுக்கும் சுரைக்காய்
வீட்டுக்கும் விழல்தானே

MINISTRY OF EDUCATION

CERTIFICATE OF APPRECIATION

This is to certify that

Achchuveli Theresa Girls Vidyalaya / College

of

Jaffna

Education Zone

Is awarded

this Certificate of Appreciation

for the improvement of school education

under the

Programme of School Best Practices 2015

Conducted by the Management and Quality Assurance Branch,

Ministry of Education

for their Effort

in

Implementing and Practicing School Level Strategies.

S.U.Wijerathne
Additional Secretary
(Policy, Planning, Performance and Review)

W.M.Bandusena
Secretary
Ministry of Education



கல்வி அமைச்சு

அதிபர் பிரதீபா பிரபா - 2014

மகிழ்ந்த சிந்தனை தெளிவு புரைவாழ்வு வேலைத்திட்டத்தினூடாக
கதிர்வீசு சான்றவை வழிகாட்டலுக்கமைய
தேர்ச்சியுள் நிறைந்த தேசத்தின் பிள்ளைகளை
தலைமைகளின் தரிசனங்களாக
வழிகாட்டுதல் செய்தல்
ஆரோக்கிய உத்தமராக
கல்வியுடன் கருணையுடன் செய்த
விலைமதிக்க முடியாத சேவையைக் கௌரவிக்கும் முகமாக
.....யாழ்ப்பாணம்..... கல்வி வலயம்
.....யா/புனிததெரேசாள் மகளிர் கல்லூரி..... பின்
வைரவிழாவிற்கான சேவைக்கு பாராட்டுதலை வழங்கப்பெறுகின்றது

கௌரவ. தி.சரவணபவன்
கல்வி செயலாளர்

பதிவு செய்யப்பட்ட
கல்வி அமைச்சர்

ஊற்றெடுக்கும் நன்றிகள்...

யா/புனித தெரேசாள் மளிர் கல்லூரியின் தமிழ்மன்றத்தால் வெளியிடப்பட்ட தெரேசியன் பிளேவர் - 03 எனும் சஞ்சிகையானது நூலுருப் பெறுவதற்குப் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் இந்நேரம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். அவ்வகையில்,

- இம்மலருக்கு ஆசிகளையும், வாழ்த்துக்களையும் வழங்கிச் சிறப்பித்த அன்புள்ளங் களுக்கும்,
- இம்மலர் சிறப்புற தொடர்ச்சியான ஆலோசனைகளையும், ஊக்கத்தையும் வழங்கிய கல்லூரி முதல்வர் அவர்களுக்கும்,
- மலர் மொட்டவிழ்ந்து மணம் பரப்ப ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும்,
- எமது மலர் உரிய காலத்தில் மலரவேண்டுமென எல்லோரையும்விட முனைப்புடனும், ஆர்வத்துடனும் அயராது செயற்பட்ட எமது கல்லூரி உபஅதிபர் திருமதி.சு.மகேஸ்வரதாசன் அவர்களுக்கும்,
- ஆக்கங்களைக் கணினியில் தட்டச்சு செய்தும் பக்க வடிவமைப்புக்களிலும் உதவியவர் களான தெ.தர்சன், நியூ சக்தி கணினிச் சேவை நிலையம், அச்சுவேலி மற்றும் எமது கல்லூரி ஆசிரியர் தெ.ஈஸ்வரன், அலுவலக உதவியாளர் செல்வி ம.பிரிந்தா ஆகியோருக்கும்,
- இம்மலர் வெளியிடத் தீர்மானித்தமை தொடக்கம் மலர் வெளியீடு வரை பாடசாலை சார்பில், தேவைப்பட்ட எல்லா உதவிகளையும் செய்து தந்த எமது கல்லூரியின் கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும்,
- எல்லாவற்றுக்கும் மேலாக இச்சஞ்சிகையை உரிய முறைப்படி அழகுற பக்க வடிவமைப்புச் செய்து அச்சேற்றி நூலுருவாக்கித் தந்த அன்ரா பிறிண்டேர்ஸ் உரிமையாளர் திரு. தி. றஜீவன் மற்றும் அச்சகப் பணியாளர்கள் அனைவருக்கும், எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி.

மலர்க்குழு

SPONSORED BY: ANDRA PRINTERS 021 222 8929